திருவள்ளுவராண்டு 2053

2022 நவம்பர், திசம்பர், 2023 சனவரி – காலாண்டிதழ்

மலர்–6 இதழ்–19

# உலகத்தமிழ்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு


### தலைமை ஆசிரியர்

முனைவர் **ப.அன்புச்செழியன்**
இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
**மின்னஞ்சல்:** director@utsmdu.org

### ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** tamilunivc@gmail.com

முனைவர் **ந.அருள்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
**மின்னஞ்சல்:** drumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com

### ஆசிரியர் குழு (அயலகம்)

திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு இலக்கிய ஆலோசகர், ஆஸ்திரேலியா.
**மின்னஞ்சல்:** jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
**மின்னஞ்சல்:** s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
**மின்னஞ்சல்:** prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
**மின்னஞ்சல்:** jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
**மின்னஞ்சல்:** sivakumaran.r@nie.edu.sg

### செய்தி ஆசிரியர்

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

### இதழ் வடிவமைப்பு

திருமதி **பா.விஜி**
கணினி செயல்முறையாளர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை





### தொடர்புக்கு

0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

### முகவரி

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020

# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

உ


| வ.எண் | தலைப்பு | கட்டுரையாளர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | உரையாசிரியர்களும் குற்றியலுகரக் கோட்பாடுகளும்டும் | முனைவர் ச.முருகேசன் | 4 |
| 2. | பானுபாரதியின் கவிதை உலகம் | முனைவர் சு.செல்வகுமாரன் | 16 |
| 3. | வேல்பாரி புதினத்தில் இனக்குழு வழிபாட்டு மரபுகள் | முனைவர் ச.அருள்செல்வி | 22 |
| 4. | பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் பெண்ணிய முரண்கள் | திருமதி கோ.கமலா | 35 |
| 5. | நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணிகளும் அதன் பலன்களும் | திரு. நவீன் கணேசன் | 46 |
| 6. | நா.காமராசன் கறுப்பு மலர்கள் கவிதையில் கருத்து வளம் | செல்வி ரா.ஜெயஸ்ரீ | 52 |
| 7. | தொகையிலக்கியக் காலக் குடும்ப அமைப்பில் தந்தையும் மகளும் | ச.கண்மணி | 63 |
| 8. | கட்டுரையாளராக - வ.சுப.மாணிக்கம் | முனைவர் வா.வெ.கோவிந்தம்மாள் | 75 |
| 9. | இலக்கிய நட்பாராய்தல் | திருமதி கனகபுஷ்பம் | 82 |
| 10. | வாழ்வின் வெற்றிக்கு வள்ளுவரின் ஊக்க மொழிகள் | திரு. சி.பாலாஜி | 91 |
| 11. | தொல்காப்பிய மகட்பாற் காஞ்சி: உரை வேறுபாடுகள் | திரு. மு.அரவிந் | 98 |
| 12. | சிறுதெய்வ வழிபாட்டில் கொம்புகாரன் தெய்வம் | முனைவர் கி.நீலகண்டன் | 107 |
| 13. | நிகழ்காலச் சூழலில் நாட்டுப்புற மருத்துவம் | திரு. து.ஹரிகிருஷ்னன் | 115 |

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# உரையாசிரியர்களும் குற்றியலுகரக் கோட்பாடுகளும்



முனைவர் **ச.முருகேசன்**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
வ.செ.சிவலிங்கம் அரசு கலைக் கல்லூரி,
பூலாங்குறிச்சி, சிவகங்கை மாவட்டம்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கண நூல்கள் எழுத்துக்களினை விளக்கும் இடத்தில் சார்பெழுத்து என்பதனையும் கொடுத்துள்ளனர். மொழியுடன் இணைந்து வருவதால் சார்பெழுத்து என்கின்றனர். இவ்வெழுத்தினை விளக்குவதில் இலக்கண ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் வேறுபடுகின்றனர். தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் சார்பு எழுத்து மூன்று என்கின்றது. நன்னூல் வழி நின்ற இலக்கண நூல்கள் பத்தாக விளக்கம் தருகின்றன. தொல்காப்பியர் சார்பு எழுத்து மூன்று என்று விளக்கம் தந்திருந்தாலும், குற்றியலுகரம் ஆறு இடங்களில் வரும் என்பதனைக் கொடுத்துள்ளார். பிற இலக்கண ஆசிரியர்களும் குற்றியலுகரத்தின் வகையினை ஆறாகத் தந்துள்ளனர். குற்றியலுகரம் ஆறு x ஆறு = முப்பத்தாறு (6 x 6 = 36) இடங்களில் வரும் என்கின்றனர். இடையின 'வ'கரத்துடன் குற்றியலுகரம் இடம் பெறாது என்றாலும் இதனையும் இணைத்தே விளக்கியுள்ளனர். ஆறு இடங்களில் பயின்று வருவதால்தான் நன்னூலாரும் இவருக்குப் பின்பு வந்த இலக்கண ஆசிரியர்களும் சார்பெழுத்து வரிசையில் குற்றியலுகரத்தினை ஆறாவது இடத்தில் வைத்துள்ளனர். குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம் என பகுத்து விளக்கப்படுகிறது. தொடரில் குறுகிய ஓசையுடன் வருவதாக உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர். முதல் இலக்கண உரையாசிரியரான இளம்பூரணர் தொடங்கி பிற்காலங்களில் உரை எழுதிய அனைவரும் குற்றியலுகர வகைகளுக்கு வேறுபட்ட சான்றினைத் தந்துள்ளனர். தமிழ் இலக்கண ஆசிரியர்கள் (தொல்காப்பியர், நன்னூலார், வைத்தியநாத தேசிகர், வீரமாமுனிவர், முத்துவீரப்ப உபாத்தியாயர்), உரையாசிரியர்கள் (இளம்பூரணர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், கூழங்கைத்தம்பிரான்) குற்றியலுகரம் குறித்து கொண்டிருந்தக் கோட்பாட்டின் கருத்தினை இக்கட்டுரை விளக்குவதாக அமைந்துள்ளது.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**முன்னுரை**

மனிதன் பேசக்கூடிய சமூக விலங்காவான். பேசும் தன்மை கொண்டதால்தான் பிற விலங்குகளிடம் இருந்து வேறுபட்டுள்ளான். சமூகம் சார்ந்து வாழக்கூடியவன். இத்தகைய மனிதன் தனது கருத்தினைப் பரிமாற்றம் செய்துகொள்ள மொழி ஒரு கருவியாக அமைகிறது. மொழி தோற்றம் பெருவதற்கு முன்பு குறியீட்டின் வழி தங்களது கருத்துக்களினைத் தெரிவித்து வந்துள்ளனர் என்பதனை பலங்காலக் கல்வெட்டு, குகை ஓவியங்களின் வழி அறிய முடிகிறது. குறியீடுகளின் மூலம் தங்களது கருத்தினைப் பகிர்ந்து கொண்ட மனிதன் பிற்காலத்தில் சில நாகரிக வளர்ச்சியின் வழி அதனை மொழியாக மாற்றினான். அம்மொழிகள் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் வளம் பெற்றன. இவ்விருவகை மொழியுள் பேச்சு மொழி எல்லா மக்களாலும் பேசக் கூடிய ஒன்றாக இருந்து வருகின்றது. எழுத்து மொழி அங்ஙனம் இல்லாமல் கற்றறிந்தவரால் மட்டுமே எழுத்து வடிவம் பெறுகின்றது. இலக்கியம் தோன்றுவதற்கு எழுத்து மொழியே முதன்மையான ஒன்றாக அமைந்தது.

மனிதன் தங்களைச் சுற்றி நடக்கக் கூடிய சமூகக் கருத்துக்களையும், சமூக நிகழ்வுகளையும் இன்னும் பிறவற்றையும் குறித்து வைக்க எழுத்து மொழி இன்றியமையா ஒன்றாக இருந்தது. பேச்சு மொழியில் காலந்தோறும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து இருந்தாலும், எழுத்து மொழியில் அவ்வாறு இல்லை. இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமெனில் பேச்சு மொழி பல வகைப்படுவதனை நாம் காணலாம். ஒவ்வொரு சமூகம், மாவட்டம், வட்டம் சார்ந்தும் பேச்சு மொழி வேறுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எழுத்து மொழியில் நடையில் வேறுபாடு இருப்பதனைக் காணலாம். ஆனால், எழுத்து மொழியில் எந்தவிதமான மாற்றங்களும் இருக்காது என்பதனை மொழியின் தற்கால இயங்கு நிலையினை வைத்து அறிந்துகொள்ளலாம். இதனை எல்லாம் ஆராய்ந்து தான் தமிழ் அறிஞர்கள் பொதுவான மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளனர். இதில் இலக்கியம் சார்ந்த மொழியினையே காண முடிகின்றது. வழக்கு மொழி ஒரு சில இருந்தாலும் இலக்கியத்தில் எவ்வகை மொழியினைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை ஆராய்ந்தே இலக்கணம் எழுதியுள்ளனர். பேச்சு மொழியாக இருந்த ஒன்று இலக்கண வடிவம் பெற்று மொழியின் அமைப்பு இவ்வாறுதான் உள்ளது என்பதனை நமக்கு எடுத்துக்காட்டும் பெட்டகமாக இலக்கண நூல்கள் உள்ளன. இலக்கிய வளம் பெற்ற மொழிக்கே இலக்கணம் எழுதப்பட்டு இருந்தாலும் தொல்காப்பியம் முதலான

இலக்கண நூல்களில் இப்படியும் சொல்லுவர் என்னும் மாற்றுக் கருத்து இருப்பதால் அது வழக்கு மொழி சார்ந்ததாகும் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

**குற்றியலுகரத்தின் வகைகள், வைப்பு முறைகள்**

- நெடிற்றொடர் குற்றியலுகரம்
- ஆய்தத் தொடர் குற்றியலுகரம்
- உயிர்த்தொடர் குற்றியலுகரம்
- வன் தொடர் குற்றியலுகரம்
- மென் தொடர் குற்றியலுகரம்
- இடைத் தொடர் குற்றியலுகரம்

என குற்றியலுகரம் ஆறு வகைப்படும். குற்றியலுகர வகைகளினைத் தொல்காப்பியர் 'நெடில், உயிர்' என்ற வைப்பு நிலையில் கொடுத்துள்ளார். நன்னூலார் 'நெடில், ஆய்தம்' என்று வரிசைப்படுத்தி விளக்கம் தந்துள்ளார். 'இலக்கண விளக்கம், முத்துவீரியம்' முதலான இலக்கண நூல்களும் நன்னூலினைப் பின்பற்றியுள்ளன. தமிழ் இலக்கண நூல்கள் அனைத்தும் குற்றியலுகரத்தினை வரிசைப்படுத்தும் முறையில் வேறுபட்டிருந்தாலும், நெடிற்றொடர் குற்றியலுகரத்தினை முதலில் வைத்துள்ளன. தொல்காப்பியர் ஒரு முறையினையும், நன்னூல் மற்றும் பிற இலக்கண நூல்களின் ஆசிரியர்கள் வேறு வகையான வைப்பு முறையினையும் கொண்டிருந்தனர் என்பதனை அறிய முடிகிறது. தொல்காப்பியர் 'நெடில்' என்று விளக்கம் தராமல் ஈரெழுத்து என்று கொடுத்துள்ளார். நன்னூலிற்குப் பின்பு வந்த இலக்கண நூல்கள் நன்னூலினைப் பின்பற்றி 'நெடில்' என்ற விளக்க முறையினைத் தந்துள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் வேறானதாக இருந்தாலும் இரண்டும் ஒரே பொருண்மையின் கீழ்தான் வருகின்றது. தொல்காப்பியர் தொடங்கி பிற்கால இலக்கண ஆசிரியர்கள் குற்றியலுகரத்தின் வகையினை விளக்குவதில் வேறுபடவில்லை. அவற்றின் வைப்பு முறையில்தான் மாறுபட்டுள்ளனர் என்பதனை நூற்பாவின் வழி அறிய முடிகிறது.

**குற்றியலுகரக் கோட்பாடு**

"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்..."

இளம். தொல். நூற்பா. 407

"நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே"

கண்ணன். (ப. ஆ). நன்னூல் உரை வளம். நூற்பா. 93.

"நெடிலோடாய்த முயிர்வலி மெலியிடை…"

சேயொளி. (ப. ஆ). இலக்கண விளக்கம். நூற்பா. 16.

தமிழ் இலக்கணங்களுக்கு விளக்கம் எழுதிய உரையாசிரியர்கள் நெடிற்றொடர் குற்றியலுகரத்திற்குக் கொடுத்துள்ள சான்றினை வைத்து அவற்றை இரண்டு வகைப்படுத்தலாம். அவை,

**நெடிற்றொடர் குற்றியலுகரம்**

1. உயிர் நெடில் குற்றியியலுகரக் கோட்பாடு
2. உயிர்மெய் நெடில் குற்றியலுகரக் கோட்பாடு

**1. உயிர் நெடில் குற்றியியலுகரக் கோட்பாடு**

- சான்று: ஆறு, ஏடு, ஐது – உயிர் நெடில் குற்றியலுகரம்.

நன்னூலிற்கு உரை எழுதிய வ. குமாரசாமிப் புலவர். கா. நமச்சிவாய முதலியார், தொன்னூல் விளக்க ஆசிரியர் வீரமாமுனிவர், முத்துவீரியம் ஆசிரியர் முத்துவீரப்ப உபாத்தியாயர் முதலானோர் 'உயிர் நெடில்' குற்றியலுகரத்தினைப் புதிதாக அறிமுகப்படுத்தி வைத்திருகின்றனர். கால மாற்றத்தால் அனைவரும் எளிதாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதனால் புதிய விளக்கம் தந்திருக்க வேண்டும். நெடில் என்பதனால் உயிர்மெய், உயிர் நெடிலினையும் இணைத்தே சான்று தந்துள்ளனர்.

நன்னூலிற்கு முதலில் உரை எழுதிய மயிலைநாதர் இவ்வகையான விளக்கத்தினைத் தரவில்லை. 'காடு, நாகு' தொல்காப்பிய உரையாசிரியர்கள் தந்துள்ள உயிர்மெய் நெடில் குற்றியலுகரத்தின் வழியினை ஏற்றுள்ளார். மயிலை நாதருக்குப் பின்பு வந்த நன்னூல் உரையாசிரியர்களான சங்கரநமச்சிவாயர், சிவஞானமுனிவர், கூழங்கைத் தம்பிரான், முகவை இராமாநுசக் கவிராயர், ஆறுமுகநாவலர், விசாகப்பெருமாள் ஐயர், வை. மு. சடகோபராமானுசாசாரியார், பவானந்தம் பிள்ளை முதலானோரும் இவரைப் பின்பற்றியுள்ளனர். நன்னூலிற்குப் பின்பு வந்த இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆசிரியரும் உயிர்மெய் நெடிலுடன், உயிர் நெடில் குற்றியலுகரக் கோட்பாட்டினையும் ஏற்று சான்று தந்துள்ளனர்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**2. உயிர்மெய் நெடில் குற்றியலுகரக் கோட்பாடு**

"எருமையும் மரையும் பெற்றமும் **நாகே**" இளம். தொல். பொருள். நூற்பா. 607.

"மட மான் **நாகு** பிணை பயிரின், விடர் முழை" சோமசுந்தரனார். பொ. வே.புறம். 157: 11.

- நாகு – நெடிற்றொடர் குற்றியலுகரம்.

'நாகு' எனும் சொல் 'எருமை, மான்' முதலான உயிரினங்களின் பெண் பாலினைக் குறிக்க வருகின்றது. இளம்பூரணர் முதலான தொல்காப்பிய உரையாரிசிரியர்கள் உயிர்மெய் நெடிற்றொடர் குற்றியலுகரத்தினை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்விளக்கத்தினைச் சங்க இலக்கியங்களில் இருந்து எடுத்திருக்க வேண்டும். இளம்பூரணர் முதலான தொல்காப்பிய உரையாசியர்கள் பெயர்ச்சொல்லினை மட்டுமே சான்றாகத் தந்துள்ளனர். நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர், பிற இலக்கண ஆசிரியர்கள், தற்கால உரை விளக்க ஆசிரியர்கள் அனைவரும் இதனைப் பின்பற்றியுள்ளார். பிற நன்னூல் உரையாசிரியர்கள், இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர், தொன்னூல் விளக்கம் ஆசிரியர் வீரமாமுனிவர் முதலான இலக்கண ஆசிரியர்கள் உயிர்மெய் நெடில் எழுத்தினையும் ஏற்று புதிதாக 'உயிர் நெடில்' குற்றியலுகரம் குறித்தும் விளக்கியுள்ளனர். இளம்பூரணர், 'ஈரெழுத்து' என்பதனை மொழி முதல் வரக்கூடிய உயிர்மெய் + குற்றியலுகர எழுத்தினைக் (க் + அ = காடு) கருதி இருக்க வேண்டும். அவர் தந்திருக்கும் எடுத்துக்காட்டின் மூலம் இதனை அறிய முடிகிறது. இவ்வகையான குழப்பங்கள் வரும் என்பதனை அறிந்துதான் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் 'நெடிலொடு' என்று குறிப்பிட்டுள்ளார். நெடில் என்று தந்திருப்பதால் அஃது உயிர், உயிர்மெய் நெடிலாக இருக்கலாம். மயிலை நாதர் முதலானோர் இதனை அறிந்து இருந்தாலும் இளம்பூரணரின் கோட்பாட்டு முறையினை ஏற்றுள்ளனர். பிற்கால இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் முதலானோர் 'நெடில்' தொடர் குற்றியலுகரம் என்பதற்கு உயிர், உயிர்மெய் எழுத்தினை ஏற்று சரியாக விளக்கம் கொடுத்துள்ளனர்.

'ஓடு, ஆடு' – முதலான சொற்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியத்தில் பயின்று வந்து இருந்தாலும் இச்சொற்கள் அனைத்தும் வினைச்சொல் என்பதால் இதனைச் சான்று தராமல் இருந்திருக்கலாம். 'ஓடு' எனும் சொல் வினையாகவும், வேற்றுமைச் சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

சான்று

"**ஓடா** வம்பலர்" சோமசுந்தரனார். பொ. வே.பெரும்பாண். 76.

"**ஓடு**வளை திருத்தியும்" சோமந்தரனார். பொ. வே.முல்லைப். 82.

'ஆடு' தற்காலத்தில் ஒரு விலங்கின் பெயராக இருந்தாலும் சங்க இலக்கியத்தில் /காலத்தில் வினைச் சொல்லாகும். 'யாடு' என்னும் சொல்தான் பெயராக வந்துள்ளது. முல்லைப்பாட்டில் 'ஓடுவளை' என்ற சொல் பெயரினைக் குறிக்கவே வந்துள்ளது. 'ஓடு' தனித்து வரும் போது வினையினைக் குறிக்கின்றது. 'ஓ**டு**வளை' எனும் போது ஓட்டாளாகிய வளையல் எனப் பெயர் பொருள்படுகிறது. இதனால் இச்சொல்லினைத் தவிர்த்து இருக்கலாம். 'வளை' என்னும் சொல்லோடு 'ஓடு' இணைந்து வருவதால் பெயரினைக் குறிக்கின்றது. ஓடுவளை என்னும் இச்சொல் நெடிற்றொடர் குற்றியலுகரத்திற்கு பொருத்தமாக இருக்காது என்பதனால் இச்சொல்லினை உரையாசிரியர்கள் தவிர்த்து இருக்கிறார்கள்.

சான்று

"**யாடும்** குதிரையும் நவ்வியும் உழையும்

**ஓடும்** புல்வாய் உளப்பட மறியே" இளம். தொல். பொருள். 556.

'ஆடு' தனிச் சொல்லாகப் பயின்று வந்தால் வினையின் பொருளைத் தரும் என்பதால்தான் 'இலக்கண விளக்கம்' நூலின் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் 'வெள்ளாடு' பெயர்ச் சொல்லினை உயிர்த் தொடர் அல்லது உயிர்மெய் நெடில் குற்றியலுகரத்திற்குச் சான்று தந்துள்ளார். 'ஏடு' முதலான பெயர்ச் சொற்கள் இலக்கியங்களில் பயின்று வந்திருந்தாலும், இச்சொல் உயிர் நெடிலாகும் என்பதனால் இதனைத் தவிர்த்திருக்க வேண்டும். உயிர்மெய் நெடில் உள்ள பெயர்ச்சொல்லினை மட்டும்தான் நெடிற்றொடர் குற்றியலுகரத்திற்குச் சான்றாகத் தந்துள்ளனர்.

"**ஏடு**டையமல ரான்முனைநாட் பணிந் தேத்த அருள்செய்த" தேவாரம். பாடல். 1.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் நெடிற்றொடர் குற்றியலுகரத்தில் உயிர்மெய் நெடிலில் வருகின்ற பெயர்ச் சொல்லினையே சான்றுகளாகக் கொடுத்துள்ளனர். நன்னூல் உரையாசிரியர்கள் உயிர், உயிர்மெய் நெடில் இவ்விரண்டு வகையான குற்றியலுகர சொல்லினையும் விளக்கியுள்ளனர்.

"**ஆறு** என் கிளவி முதல் நீடும்மே" இளம். தொல். குற்றியலு. 53.

'ஆறு' என்னும் எண்ணுப்பெயர் இருந்தாலும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'ஈரெழுத்து ஒருமொழி' அஃதாவது உயிர்மெய் என்பதனைத்தான் நெடிற்றொடராக ஏற்றுள்ளனர் என்பதனை அவர்களின் உரையில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது. நன்னூல் உரையாசிரியர்கள் உயிர், உயிர்மெய் இரண்டு நெடிலினையும் நெடிற்றொடர் குற்றியலுகரத்தின் கீழ் வைத்துள்ளனர். தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஒரே கோட்பாட்டினையும், நன்னூல் உரையாசிரியர்கள் இரண்டு வகையான கோட்பாட்டினையும் கொண்டிருந்தனர் என்பதனை அவர்களின் உரையின் மூலம் அறியலாம்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் உயிர் நெடிலுடன் குற்றியலுகரம் இணைந்து வராது என்ற பார்வையில் இருந்துள்ளனர். கால மாற்றத்தால் நன்னூல் உரையாசிரியர்கள் இவ்வகை விளக்கத்தினையும் தந்துள்ளனர். இவர்கள் தந்துள்ள விளக்கம்தான் சரியானதாகத் தோன்றுகிறது. தொல்காப்பியம், நன்னூல் முதலான மூல நூல் ஆசிரியர்கள் இது போன்று ஒரு சில வரக்கூடும் என்பதால் நூற்பாவில் 'ஈறெழுத்து, நெடிலோடு' என்று விளக்கம் கொடுத்துள்ளனர். இலக்கண நூலின் ஆசிரியர்கள் நெடில் எழுத்துக்களினை 'உயிர், உயிர்மெய்' எனப் பிரித்துப் பார்க்கவில்லை. உரையாசிரியர்கள்தான் மாறுபட்டுள்ளனர். கால மாற்றங்களில் இது போன்ற பிரச்சினைகள் வரும் என்பதனை உணர்ந்துதான் நச்சினார்க்கினியர் சான்று தராமல் விளக்கம் மட்டும் கொடுத்துச் செல்கின்றாரோ என எண்ணத் தோன்றுகிறது.

**ஆய்தத்தொடர் குற்றியலுகரம்**

உயிர், உயிர்மெய்யுடன் ஆய்த எழுத்தினைத் தொடர்ந்து உகரம் ஏறிய வல்லினம் இடம் பெறுவது. இதனை உயிர்க் குறில், உயிர்மெய்க் குறில் ஆய்தத் தொடர் குற்றியலுகரம் என இரண்டு வகைப்படுத்தலாம். தொல்காப்பியம், நன்னூல் முதலான அனைத்து உரையாசிரியரும் ஆய்தத் தொடரினை விளக்குவதில் ஒரே பார்வையினைக் கொண்டுள்ளனர்.

சான்று:

- எஃகு – உயிர்க் குறில் ஆய்தத் தொடர் குற்றியலுகரம்.
- கஃசு, கஃடு – உயிர்மெய்க் குறில் ஆய்தத் தொடர் குற்றியலுகரம்.

நெடிலுடன் ஆய்தம் வராது. உயிர், உயிர்மெய்க் குறிலுடன் வரும் என்ற கோட்பாடு இவ்விடம் சுட்டப்படுள்ளது. நெடிற்றொடரில் உயிர் நெடில் எழுத்துச் சொற்களினை ஏற்காத இளம்பூரணர், மயிலைநாதர் முதலான உரையாசிரியர்கள் ஆய்தத் தொடரில்

உயிர்க் குறிலினை ஏற்றுச் சான்று தந்துள்ளனர். நெடிற்றொடர் விளக்கத்தில் உயிர்மெய் நெடில் கோட்பாட்டினையும், ஆய்தத் தொடரில் உயிர்க் குறில் கோட்பாட்டினையும் பின்பற்றியுள்ளனர். ஒரே குற்றியலுகர வகையின் கீழ் இரண்டு மாறுபட்ட கோட்பாட்டினை உரையாசிரியர்கள் முன் வைத்து உரை விளக்கம் தந்துள்ளனர்.

**உயிர்த்தொடர் குற்றியலுகரம்**

தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் முதலான இலக்கண நூலிற்கு உரையாசிரியர்கள் தந்துள்ள விளக்கத்தினைக் கொண்டு உயிர்த்தொடர் குற்றியலுகரத்தினை இரண்டு வகைப்படுத்தலாம்.

**உயிர்மெய்க் குறில் குற்றியலுகரம்**

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலான தொல்காப்பிய உரையாசிரியர்கள் உயிர்மெய்க் குறில் குற்றியலுகர விளக்கத்தினைத் தந்துள்ளனர். நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர், கூழங்கைத் தம்பிரான் இருவரும் இதனைப் பின்பற்றியுள்ளனர். மயிலை நாதருக்குப் பின்பு நன்னூலிற்கு உரை எழுதிய பிற ஆசிரியர்கள் இதனைப் பின்பற்றி புதிய விதி முறையினையும் தந்துள்ளனர். தொல்காப்பியம், நன்னூல் வழி நின்ற இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் முதலான இலக்கண நூல்கள் உயிர்மெய்க் குறில், நெடில் இரண்டு குற்றியலுகரத்தினையும் ஏற்றுள்ளனர்.

சான்று:

- வரகு – மூன்று எழுத்தில் வரக்கூடிய உயிர்த்தொடர் குற்றியலுகரம் அல்லது உயிர்மெய்க் குறில் குற்றியலுகரம்.

இளம்பூரணர், மயிலைநாதர், கூழங்கைத் தம்பிரான் முதலான தொல்காப்பியம், நன்னூல் உரையாசிரியர்கள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆசிரியர்களும் ஈரெழுத்துடன் வரக்கூடிய உயிர்மெய்க் குறில் + குற்றியலுகர எழுத்தினைப் பெற்றமையும் சொல்லினை உயிர்த்தொடரில் சான்று தரவில்லை. மூவெழுத்தில் வருகின்ற உயிர்த்தொடர் குற்றியலுகரம் மட்டுமே தந்துள்ளனர்.

சான்று

“குரங்கு **முசு**வும் ஊகமும் மந்தி” இளம். தொல். பொருள். 612.

- முசு – ஈரெழுத்தில் வரக்கூடிய உயிர், உயிர்மெய்த் தொடர் குற்றியலுகரம்.

'முசு' என்பது பெண் குரங்கினைக் குறிக்க வருவதாகும் எனப் பொருள் தருகிறார் தொல்காப்பியர். 'முசு' முதலான பெயர்ச் சொற்கள் இருந்தாலும் உயிர்த்தொடரில் ஏற்கவில்லை. மூன்று எழுத்தில் வரக்கூடிய உயிர்த்தொடர் குற்றியலுகரத்தினை மட்டுமே ஏற்றுள்ளனர். தற்காலத்தில் இலக்கணம் எழுதக்கூடிய ஆசிரியர்கள், உரையாசிரியர்களும் கூட உயிர், உயிர்மெய்க் குறிலுடன் குற்றியலுகர எழுத்து இணைந்து வருகின்ற ஈரெழுத்து உயிர்த்தொடர் குற்றியலுகரம் குறித்து விளக்கம் தரவில்லை. இச்சொல் பெயராக இருந்தாலும் உரையாசிரியர்களின் பார்வை வேறாக இருந்துள்ளது.

**உயிர்மெய்க் குறில், நெடில் குற்றியலுகரம்**

மயிலை நாதருக்குப் பின்பு வந்த சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், விசாகப் பெருமாள் ஐயர், முத்துத்தம்பிப் பிள்ளை, ஆறுமுகநாவலர் முதலான நன்னூல் உரைகாரர்கள் உயிர்மெய் நெடில் குற்றியலுகரம் எனும் புதிய கோட்பாட்டு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளனர். இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் நூல்களும் புதிய கோட்பாட்டினைப் பின்பற்றியுள்ளன. இவர்களுக்கு முன்பு இருந்த தொல்காப்பியம், நன்னூல் உரையாசிரியர்களின் உயிர்க் குறில் கோட்பாட்டினையும் ஏற்றுள்ளனர்.

சான்று:

- வரகு – உயிர்மெய்க் குறில் குற்றியலுகரம்.
- பலாசு, வெள்ளாடு – உயிர்மெய் நெடில் குற்றியலுகரம்.

நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் முதலான உரையாசிரியர்களின் புதிய கோட்பாடு.

"வெள்ளை **வெள்யா**ட்டுச் செச்சை போலத்"

சோமசுந்தரனார். பொ. வே.புறம். 286.

'வெள்யாடு' முதலான சொற்கள் இருந்தாலும் இளம்பூரணர், மயிலைநாதர் முதலான உரையாசிரியர்கள் இதனை உயிர்த்தொடரில் கொடுக்கவில்லை. குறில் எழுத்தினை மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். உயிர்த்தொடர் குற்றியலுகரத்தில் இது போன்ற மாற்றங்கள் வரும் என்பதனை எண்ணித்தான் தொல்காப்பியம், நன்னூல் இலக்கண நூல் ஆசிரியர்கள் 'ஈரெழுத்து, நெடிலோடு, உயிர்' எனப் பொதுவாகக் கொடுத்துள்ளனர். தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதிய ஆசிரியர்கள்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

தெளிவாக நூற்பாவினை அமைத்துள்ளனர். உரையாசிரியர்கள்தான் தங்களது உரை விளக்கத்தில் மாறுபட்டுள்ளனர். பிற்காலத்தில் எழுதப்பட்ட இலக்கண விளக்கம் முதலான நூல்களின் ஆசிரியர்கள் புதிய முறையினையும் ஏற்று சான்று கொடுத்துள்ளனர்.

தொல்காப்பியம், நன்னூல் உரையாசிரியர்கள் மற்றும் இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆசிரியர்கள் உயிர்த்தொடர் குற்றியலுகரத்தில் உயிர்மெய் எழுத்தில் (ர – ர் + அ) வருகின்ற மூவெழுத்து 'உயிர்க் குறில்' கோட்பாட்டினையும், ஆய்தத்தொடரில் 'உயிர், உயிர்மெய்க் குறில்' கோட்பாட்டினையும் பயன்படுத்தியுள்ளனர். குறில் எழுத்தினைப் பயன்படுத்தும் போது இரண்டு வகைக் கோட்பாட்டுப் பார்வையில் இருந்துள்ளனர் என்பதனை அறிய முடிகிறது. நன்னூல் உரையாசிரியர்கள், இந்நூலிற்குப் பின்பு வந்த இலக்கண ஆசிரியர்கள் அனைவருமே மூன்று எழுத்தில் வரக்கூடிய உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் தொடர் குற்றியலுகரம் குறித்தே விளக்கம் தந்துள்ளனர். பிற்கால உரையாசிரியர்கள், இலக்கண ஆசிரியர்கள் இருவரிடமும் ஈரெழுத்து உயிர்த்தொடர் குற்றியலுகரச் சான்றினைக் காண முடியவில்லை.

**வன்றொடர் குற்றியலுகரம்**

வல்லின மெய் எழுத்தினைத் தொடர்ந்து குற்றியலுகரம் இடம்பெறுவது.

சான்று

கொக்கு

"பைங்கால் **கொக்**கின் பகுவாய்ப் பிள்ளை" சோமசுந்தரனார். பொ. வே.புறம். 342.

**மென்றொடர் குற்றியலுகரம்**

மெய் எழுத்தான மெல்லினத்தினைத் தொடர்ந்து குற்றியலுகரம் வருவது.

சான்று

மஞ்சு

"சிறுநனிநீதுஞ்சுயேற்பினுமஞ்சு" சோமசுந்தரனார். பொ. வே.கலி. 12: 8.

**இடைத்தொடர் குற்றியலுகரம்**

இடையின மெய்யினைத் தொடர்ந்து உகரம் ஏறிய வல்லினம் வர அமைவது.

சான்று

மார்பு

"இளிதக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் **மார்பு**" புலியூர்கேசிகன். குறள். 1288.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

ஆய்தம், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் குற்றியலுகரத்தினை விளக்குவதில் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் மாறுபடவில்லை. இம்மூன்று வகைக் குற்றியலுகரத்திலும் மெய் எழுத்தினை அடிப்படையாக வைத்தே சான்றுகள் தரப்பட்டுள்ளன.

**முடிவுரை**

- தொல்காப்பிய உரையாசிரியர்கள் நெடிற்றொடர் குற்றியலுகரத்தில் உயிர் நெடில் எழுத்துடன் குற்றியலுகரம் வருவதனை ஏற்கவில்லை. உயிர்மெய் நெடிலினை மட்டும் சான்று தந்துள்ளனர்.
- உயிர்த்தொடர் குற்றியலுகரத்தில் மூவெழுத்து உயிர்மெய்க் குறிலினை ஏற்றுள்ளனர். ஈரெழுத்து உயிர்த்தொடர் சான்று தரவில்லை. சங்க இலக்கியத்தில் உயிர்மெய் நெடில் குற்றியலுகரச் சொற்கள் இருந்தாலும் இதனை ஏற்கவில்லை.
- ஆய்தத் தொடரில் உயிர், உயிர்மெய்க் குறில் எழுத்தினைப் பயன்படுத்தியுள்ளனர். இரண்டுமே குறிலாக வந்துள்ளது. இவற்றில் எந்த மாற்றமும் இல்லை.
- இம்மூன்று குற்றியலுகரத்தினைத் தொடர்ந்து வந்துள்ள வன்றொடர், மென்றொடர், இடைத்தொடரில் அனைத்து ஆசிரியர்களும் ஒரே பார்வையினைக் கொண்டுள்ளனர்.
- குற்றியலுகரத்தினை விளக்கும் இடத்தில் தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஒரே கோட்பாட்டினைப் பின்பற்றியுள்ளனர். நன்னூல் உரை விளக்க ஆசிரியர்கள் நெடிற்றொடரில் இரண்டு, உயிர்த்தொடர் குற்றியலுகரத்தில் இரண்டு வகைக் கோட்பாட்டுக் கருத்தினைக் கொண்டிருந்தனர் என்பதனை அறிய முடிகிறது.
- மூன்றாவது கோட்பாடான ஈரெழுத்தில் வரக்கூடிய உயிர்மெய்க் குறில் குற்றியலுகரத்தினை இலக்கண ஆசிரியர்களும், இலக்கணத்திற்கு உரை எழுதியவர்களும், ஏற்கவில்லை.
- மயிலைநாதர் தொல்காப்பிய உரையாசிரியர்களின் வழியினைப் பின்பற்றியே தமது உரையினைத் தந்துள்ளார்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**துணை நூல்கள்**


1. இளம்பூரணம். 1972, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. நச்சினார்க்கியர். 1972, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
3. கண்ணன். இரா. (பா. ஆ). 2010, நன்னூல் உரை வளம் எழுத்தியல் – 2, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. சேயொளி. (ப. ஆ). 1973, இலக்கண விளக்கம், திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. சோமசுந்தரனார். பொ. வே. 1965, பெரும்பாணாற்றுப்படை, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. ……… 1965, முல்லைப்பாட்டு, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
7. …………… 1965, புறநானூறு, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
8. …………. 1965, கலித்தொகை, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
9. தாமோதரன். அ. (ப. ஆ). நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும், சென்னை, க்ரியா பதிப்பகம்.
10. நடராசா. F. X. C. மகாவித்துவான். (ப. ஆ). 1991, தொன்னூல் விளக்கம் எழுத்ததிகாரம், மட்டக்களப்பு, சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்.
11. புலியூர்கேசிகன்(ப.ஆ), 1967, *பரிமேலழகர் திருக்குறள் உரை.* சென்னை, பூம்புகார் பிரசுரம்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# பானுபாரதியின் கவிதை உலகம்



முனைவர் **சு.செல்வகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை - 600005

ஒவ்வொரு கவிதைக்குள்ளாகவும் ஏதோ ஒன்று மிரட்சியோடு தன் இயக்கத்தைக் காட்டவே முனைகின்றன. ஒரே சித்தாந்தத் தளத்தில் தொழிற்படுகின்ற படைப்பாளியாயினும் கூட அவர்களின் கவிதைப்போக்கிலும் நுட்பமான பல வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. அந்த வகையில் ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் கவிதைகளுக்குள்ளாகவும் பெரிதும் வேறுபட்ட மனப் போக்கினைக் காணமுடிகின்றது. இதில் பானுபாரதியின் கவிதைகள் கடுமையான விமர்சனங்களை வாசகர்கள் மத்தியில் முன்வைக்கக் கூடியவையாக விளங்குகின்றன.

'துப்பாக்கியைக் கையில் வைத்திருக்கும் ஒவ்வொரு மனிதர்களையும் கொலைகாரர்களாகவும், துப்பாக்கிகளை மனிதா்களின் கைகளில் திணித்தவர்களைக் கொலைகாரப் பாதகர்களாகவும் காணும் ஒரு பெண்ணின் கவிதைகளை அரசியலை, மொழியைத் தமிழில் வலிந்து மொழிபெயர்ப்பு செய்யவேண்டிய தேவை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை என்கிறார். ஏனெனில் அதைத் துப்பாக்கிகள் ஏந்திய கொலைகாரர்களும், துப்பாக்கியை ஏந்தச்சொல்லித் தந்த கொலைகாரர்களும், தமக்கும் தமது இருப்புக்கும் ஏற்புடைய அரசியலாகவும், கொலைகளாகவும், தேசப்பற்றாகவும், துரோகங்களாகவும், தியாகங்களாகவும் ஏற்கனவே மொழிபெயர்த்து வைத்திருக்கின்றதாக விமர்சிக்கின்றார். இது அதிகாரத்துக்கு எதிரான விமர்சனமாக அமைகின்றது.

"தமிழில் கவிதைகள் காலம், இடம், மனிதர்களின் வாழ்நிலை, போராட்டக்களங்கள், அரசியல், சூட்சுமங்கள் இவை எதையுமே புரிந்து கொள்ள முடியாதவாறு நீட்டி எழுதப்படும் ஒரு மரபாகவே ஆகிவிட்டன. தனியே வார்த்தைகளைக் கோர்ப்பது, எதுகை மோனைகளை இட்டுநிரப்புவது, மேலிருந்து

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

கீழாக வார்த்தைகளையும் வசனங்களையும் அந்தரத்தில் தொங்கவிடுவது. தொங்கவிடப்பட்ட வசனங்களில் வந்து போகும் உவமானம் உவமேயங்களைக் கண்டு பிரமித்துக் கிறங்கிப்போவது, அல்லது வார்த்தைகளையும் வசனங்களையும் மனிதர்களையும் உருவேற்றிச் சபதமெடுத்துக் கொள்வது என்பன பெரும்பான்மையான தமிழ்க் கவிதைகளின் அடிப்படைத் தகுதியாக இன்று வரைக்கும் வழக்கத்தில் இருக்கின்றன. புரிந்து கொள்ள முடியாத வார்த்தைத் தொகுப்புகளை வாசித்துச் சலித்துப் போன எனக்கு, தோழர் பானுபாரதியின் கவிதைகளை வாசித்து முடித்த பொழுது இலங்கையின் தமிழ்த் தேசியப் போராட்ட வரலாற்றின் ஒருபகுதி அத்தியாயத்தையே வாசித்து முடித்த உணர்வு ஏற்பட்டது". (பானுபாரதி, பிறத்தியாள்- ப- 779) என்கிறார் ஜீவமுரளி.

பானுவின் "நிலத்தடி வாழ்வும் சுடும் காலமும்" கவிதை புகலிடத்தில் இருக்கும் தன் காதலன் விமலுடனான கடிதவழி உரையாடலாக அமைகின்றது. நிலம், போர், பெண் என்பதோடு எழுத்துச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் இயக்க முரண்வாதிகளாலும், இராணுவத்தினராலும் தடைபடுத்தப் பட்டிருந்தமை எனப் பல தளங்கள் சார்ந்த விமர்சனத்தை இந்தக் கவிதை பிரதிபலிக்கின்றது. நேசத்துடன் விமலுக்கு இன்று மே 19 - 1989. இரண்டு மாதங்களுக்கு முன்பாகப் பன்னிரண்டு பக்கங்கள் அடங்கிய கடிதமும் ஆறு கவிதைகளும் அனுப்பியிருந்தேன். நாட்டு நிலமைகளின் தகவல்கள் பல அடங்கிய அடிப்படையான கடிதம் அது என்று குறிப்பிட்டுத் தொடங்குகின்ற கவிதை,

**"அங்கவர்களது கைகளிலோ**
**அல்லது**
**இங்கிவர்களது கைகளிலோ கிடைக்குமாயின்**
**ஆபத்தும் அதிகமானவைதான்**
**எந்தத் தடையுமின்றி**
**நான்கு தரப்பிடமிருந்தும்**
**ஆபத்தை வாசல்வரை கொண்டு வரவல்ல கடிதம்"**

**(பானுபாரதி, பிறத்தியாள்- ப- 30)**

என்று குறிப்பிடுகின்றது. மேலும் அனுப்பப்பட்டகடிதம் உரிய காலத்தில் போய்க் கிடைக்காத நிலையில் மீளக்கடிதம் எழுதுகின்ற விமல், கவிதை சொல்லியை கடிதம் எழுத மடித்திருக்கின்ற சோம்பேறியாகச் சுட்டுகின்றது. அதற்குப் பதிலளிக்கும் பானுபாரதி போரின் சூழல் ஒருவரின் அகப்புறச் சூழலை எந்த நிலையிலும் சோம்பலாக

வைத்திருக்க முடியாது என்பதையும் அவர்கள் சுறுசுறுப்பாகவும், விழிப்பாகவும் மட்டுமே இயங்க முடியும். அவ்வாறு இயங்கினால் மட்டுமே போர்ச்சூழலில் மனிதனால் இருப்பு கொள்ள முடியும் என்ற சமூக விஞ்ஞானத்தை உணர்த்துகின்றார்.

**“இங்கு யாரும்**
**சோம்பேறிகளாயிருக்க முடியாது தோழரே**
**குறைந்த பட்சம்**
**சீறிவரும் சன்னங்களையும்**
**சிதறும் செல் துண்டுகளையும்**
**விலத்தி ஓடும் திராணி வேண்டும்**
**இங்கு**
**சோம்பேறிகளாயிருப்போர்**
**மரணத்தின் கைகளில்**
**ஒப்படைக்கப்படுவர்”**

**(பானுபாரதி, பிறத்தியாள் - ப-131)**

எனும் பானுபாரதியின் வரிகள் ஒரு போரிலக்கியத்துக்கான அனைத்து அம்சங்களையும் பதிவு செய்வது முக்கியமானதாகிறது. தொடர்ந்து போரினால் உள்நாட்டுக்குள்ளேயே நிகழ்கின்ற இடப் பெயர்வினையும் அகதியாதல் தன்மையினையும் பதுங்குக்குழி வாழ்வியலையும் அரசியல் சிக்கல்களையும் பேசுகின்றது. பெண்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற பாலியல் அக்கிரமங்களைப் பேசுகின்றது. நிரந்தரமானதொரு இருப்பிடமற்று வாழ்வு சிதறடிக்கப் பட்டிருப்பதை, இருப்பு நிலையற்றதாக மாறிப் போயிருப்பதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசுகின்றது.

தமிழ்நதியின் கவிதை பற்றி பேசும் கருணாகரன், ‘அகதி நிலை இரண்டு வகைப்பட்டது. ஒன்று உள்ளூரில் இடம்பெயர்ந்து அலைதல். அருகில் வீடோ ஊரோ இருக்கும். ஆனால் அங்கே போக முடியாது. அதுவும் ஆண்டுக்கணக்கில் அங்கே போக முடியாது. அதெல்லாம் சனங்களைத் துரத்தி விட்டுப் படையினருக்காக அத்துமீறி அரசாங்கம் கைப்பற்றி வைத்திருக்கும் பிரதேசங்களாகும். அப்படிக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கு அமைச்சரவை மூலம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலான சுவீகாரச் சட்டம் வேறு. ஆனால் அப்படிக் கைப்பற்றிய பிரதேசத்துக்கான நட்ட ஈட்டைக் கூட அது கொடுக்கத் தயாரில்லை. தவிரப் போரில் படையெடுப்புகளின் போது நிகழும் அகதி நிலை. இடப்பெயர்வு இதைவிடவும் புலம்பெயர் அகதி நிலை வேறு. இது வேரிழந்த நிலை. அந்நியச் சூழலில் அந்தரிக்கும்

கொடுமையான அவலம்.” (http://tamilnathy.blogspot.com/2008/01/blog-post_21.html) என்று குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது.

பதுங்குகுழி வாழ்வைப் பற்றி குறிப்பிடுகின்ற பானுபாரதி வீட்டின் மூலையில் வெட்டப்பட்ட பதுங்கு குழிக்குள் பாதுகாப்பெனக் கருதி வைத்த எனது நாட்குறிப்பும், உங்கள் கடிதங்களும். கடிதத்தினுள் நிறைந்து கிடந்த எண்ணற்ற முத்தங்களும் மழையில் கரைந்து போய்விட்டன. கவிதைகளையும் கடிதங்களையும் தொலைத்தல் என்பது சொல்ல முடியாத துயரத்தை ஏற்படுத்துவதாய் விளங்குகின்றன எனும் வரிகள் முற்றிலும் வேறுபட்ட ஒரு இயங்கு தளத்தில் நம்மை அணுகச்செய்கின்றது.

ஈழத்தில் கருத்தியல் முரண்களை அடக்கி ஒடுக்குகின்ற போக்கு இருப்பதனையும் வெளிப்படுத்துகின்றார். மரணபயத்திடமிருந்து தலையை மறைப்பதை விட, துண்டுக் கவிதையை மறைப்பதே பெரும்பாடாய் இருக்கிறது என்னும் வரிகள் அதனை உறுதிப்படுத்துகின்றன. போர்க்கால நெருக்குவாரங்கள் சிங்கள எதிரிகளிடம் மட்டுமின்றி 86க்கு பின் நண்பர்களிடம் இருந்தும் தான் ஏற்பட்டது என்பதன் மூலம் இயக்க முரண்களைப் பானு தன் கவிதையில் இனங்காட்டுகின்றார். எழுத்தை மறைத்தலோடு பெண்ணின் அந்தரங்க உறுப்புகளை மறைத்தலும் இயலாத ஒன்றாகச் சிரமத்துக்குரிய ஒன்றாக இருப்பதனை அவரது கவிதை அடையாளப்படுத்துகின்றது.

**“ஒரு கவிதையோ**
**காகிதத்தையோ**
**அல்லதொரு சிறு குறிப்பையோ**
**பெண்ணின் மர்மப் பிரதேசங்களென**
**சுட்டப்படும் இடங்களில் கூட**
**மறைத்து வைப்பதென்பது**
**தற்கொலைக்குச் சமமான செயல்**
**ஏனெனில்**
**எல்லாத் தரப்பு சோதனைக்காரரும்**
**முதலில் கைவிட்டுத் தேடுவது**
**இந்த இடங்களாய்த் தான் இருக்கிறது”**

**(பானுபாரதி, பிறத்தியாள்- ப - 32)**

விமல் இந்தச் சண்டை இங்கு மக்களின் வாழ்வை எப்படி எல்லாம் ஆச்சரியமான முறையில் வடிவமைத்திருக்கிறது தெரியுமா என ஒரு கேள்வியினை

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

எழுப்பிப் பதிலளிக்கும் அவர் பதுங்கு குழிகளுக்குள் மரணங்கள் நிகழ்வது போல மகப்பேறுகளும், சமையலும், கலவியும் நடக்கிறது என்று குறிப்பிடுகின்றார். சமையலும், கலவியும் நடப்பதைச் சந்தோசமாகச் சொல்கிறாள் அண்மையில் கல்யாணம் செய்து கொண்ட என் தோழி என்பதும், நான் கூடச் சேறும் சகதியுமான பதுங்கு கிடங்கினுள் விடிந்து வெகு நேரமாகவும் தூங்குகிறேன். தூக்கத்தினிடையில் வரும் கெட்ட கனவுகளுக்கிடையேயும் நாமிருவரும் மிகவும் குறுகலான ஒற்றையடிப்பாதை வழியே கைகோர்த்தபடி நடந்து செல்வது போன்ற இனிய கனவுகள் கூட வருகிறதென்றால் பாருங்களேன் என்கிறார். சுருக்கமாகச் சொல்லப்போனால் மானுடவாழ்வின்சம்பவங்கள் பூமிப்பரப்பின் மேல் நிகழ்வதை விட நிலத்துக்கடியிலே அதிகம் நிகழ்கிறது என்று பதுங்குகுழி வாழ்வின் துன்பங்களைப் பதிவு செய்யும் அதே வேளை இன்பியல் சார்ந்த விஷயங்களையும் யதார்த்தமாகப் பதிவு செய்திருப்பது முக்கியத்துவப்படுகிறது.

மேலும் நேரடியாகப் போர் சார்ந்த வரலாற்றையும் கவிதை பதிவு செய்கின்றது. எண்பத்தைந்து, எண்பத்தாறு காலக் கட்டங்களை நிலத்தடி வாழ்வு (பதுங்குகுழி) காலமாகச் சுட்டுகின்றது. எண்பத்தியேழு, எண்பத்தி எட்டாம் ஆண்டுகளில் போரின் தீவிரம் சற்றே குறைந்திருந்தமையையும் மதிப்பீடு செய்கின்றது. இக்காலகட்டங்களில் அமைதிக்காரருக்கு அதிகமான இழப்பு அமைதிக்காரரின் அழிவில் மக்கள் மகிழ்கிறார்கள் என்று கூறுகின்றார். இந்திய அமைதிப் படையினரையே பானு இவ்வாறு கூறுகிறார் என்றே தோன்றுகிறது. இப்பதிவு அமைதிப்படையினரால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கப் பட்டமையை மறைமுகமாகச் சுட்டுகின்றதாகக் கொள்ளமுடிகிறது.

இயக்கப் போராளிகளைக் காட்டுக்குள் மறைந்திருக்கும் இரட்சகர்கள் என்று குறிப்பிடும் அவர், அவர்கள் மீதான அனுதாபமே மீண்டும் வலுக்கிறது என்று ஒருவகையில் அமைதிப் படையினருக்கு அவர்கள் பரவாயில்லை என்பதும், இன்னொரு நிலையில் அவர்களும் அத்தகையவர்கள் தான் என்பதை மறைமுகமாகச் சுட்டுவதும் எண்ணிப் பார்க்கத்தக்க கூர்மையான விமர்சனங்களாகும். கவிதையில் ஒரு இடத்தில் அமைதிப் படையினரை அசோக ஹோட்டல் ஆட்சியின் ஆதிக்கம் என்று கேலிக்குள்ளாக்குவதும் கவனத்திற்குரியதாகும்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**"அசோக (ஹோட்டல்) ஆட்சியின் ஆதிக்கம்**
**கோடிப்புறத்து கிராமங்களின்**
**குச்சொழுங்கைகளுக்குள்ளும் நீள்கிறது**
**இங்கு**
**மரணத் தீர்ப்பெழுத**
**குறைந்தபட்ச**
**சமுசாயங்களேகாணுமாயுள்ளது**
**முன்பெல்லாம்**
**தங்கள் வேட்டைக்காக**
**இரவுகளை மட்டுமே தேர்ந்தெடுத்தார்கள்**
**ஆனால் இப்போ**
**பகலும்**
**இவர்களுக்கு உகந்ததாயுள்ளது"**

**(பானுபாரதி, பிறத்தியாள் - ப - 34ஐ35)**

எனத் தொடர்ந்து விமர்சிக்கும் கவிதை தேசமீட்புக்கான போரையும், மக்களுக்கான விடுதலையையும், விடுதலைப் போருக்கான நெறியையும் மறந்தவர்கள் மறக்காமலிருப்பது ஒன்றை மட்டும் தான் அது சுடுவதை என்கிறார். எனவேயிது சுடும் காலமும் தான் என்று கடித உரையாடலில் குறிப்பிடும் அவர், நான் சுடப்படாமலிருந்தால் பதில் கண்டு அடுத்த மடலில் தொடர்கிறேன் என்பதாக முடிவுக்குக் கொண்டு வருகிறார்.

பானு பாரதியின் இந்தக் கவிதை எழுத்தானது உலகளாவிய நோக்கில் வாசிக்கிறபோது பெண்ணெழுத்து என்பது பெண் விடுதலை சார்ந்த குரலைப் பதிவு செய்வதாயினும், ஈழத்தைப் பெறுத்தமட்டில் போர்சார்ந்த விமர்சனங்களையும் அரசியல் கூர்மையோடு பேசுவதும் தான் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# வேல்பாரி புதினத்தில் இனக்குழு வழிபாட்டு மரபுகள்



முனைவர் **ச.அருள்செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி,
கோவை.

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் நீண்ட நெடிய மரபுடைய எந்த ஒரு சமூகத்திற்கும் தொல்சமய மரபு ஒன்று உண்டு. உலகச் சமய வரலாற்றில் தொல்சமயம் அல்லது புராதான சமயம் (**Primative religion**) என்ற பெயரிலான சமயநெறி இருந்தது. பெரும்பாலான உலகச் சமயங்கள் எதிலிருந்து கிடைத்து வந்துள்ளன. அதன் எச்சங்கள் இன்றைய சமகாலச் சமய வழிபாட்டு முறைகளில் தொடர்கின்றன என்பதை அறிவோம். உலகளாவிய நிலையில் நோக்கும்போது இயற்கை பொருள் வழிபாடு, ஆவி வழிபாடு, உயிர்ப்பாற்றல் வழிபாடு, குலக்குறியியம் (டோடோமிசம்) என்னும் கருத்தமைவில் காணப்படும் வழிபாட்டு நிலைகளைப் பண்டைத் தமிழ்ச் சமூகத்திலும் இருந்ததை இலக்கியங்களின் வழி அறிய நேரிடுகின்றது. இவற்றின் அடிப்படையில் வேள்பாரி புதினத்தில் பறம்பு மலையினைப் பூர்வீகமாகக் கொண்டு வாழுகின்ற இனக்குழு மக்களின் வழிபாட்டுகூறுகளின் வாயிலாக வெளிப்படும் ஆழமான, வளமையான நம்பிக்கைகள், வளமைச்சடங்குகள், மந்திர நடனங்கள், மந்திரப் பாடல்கள் வளமை வழிபாட்டில் நிகழ்த்தப் பெறுகின்ற பன்முகத்தன்மை உடைய பண்பாட்டு சடங்குகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் ஆராய்ந்தறியும் நோக்குடன் இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

குலக்குறியியம்(டோடோமிசம்), தொல்சமய மரபு, உயிர்ப்பாற்றல் வழிபாடு (அனிமேட்டிசம்), கொற்றவைவிழா, வளமைச்சடங்குகள், வேள்பாரி, பறம்பு மலை, அணங்கு, சூர், தெய்வ வாக்கு, மந்திரச் சடங்குகள், குலப்பாடல்கள்.

**முன்னுரை**

தொல்தமிழ் இனக்குழுவினரான பறம்பின் மக்கள் இயற்கையின் ஆற்றல்களைப் பெறப் பல்வகைப் பாவனைச் சடங்குகளையும் மந்திரச் சடங்குகளையும் கையாளுகின்றனர். இவை நிகழ்த்து முறை சடங்குகளாகப் படிவம் கொண்டவை. இதன் நீட்சியாக வாழ்க்கை வட்டச்சடங்குகளையும் சமய நம்பிக்கைகளோடு இணைத்தனர். தமிழர்களின் தொல்சமய நீட்சி இன்று வரை அறுபடாமல் தொடர்வது என்பது ஒரு தனித்துவமான படிமலர்ச்சி போக்காகவே உள்ளது. பறம்பு மலையினைச் சார்ந்த இனக்குழு மக்கள் குலக்குறிகளை மிகவும் போற்றி வழிபட்டு வந்தனர். சமூகத்தின் குலப்பிரிவுகள் யாவும் குலக்குறிகளை முன்வைத்தே வகைப்படுத்தப்பட்டதையும் குலக்குறி குழுக்களையும் மண உறவுகளை நிர்ணயம் செய்வதையும் வேள்பாரி புதினம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

தொல் சமயத்தின் முக்கிய கூறுகள்,

- **இயற்கைவழிபாடு(Naturism)**
- **அனிமேட்டிசம் அல்லது உயிர்ப்பாற்றல் வழிபாடு (Animatism)**
- **குலக்குறியியம் (Totemism)**

எனும் மூன்றினையும் பறம்பு மலையினைச் சார்ந்த இனக்குழு மக்களின் வழிபாட்டு மரபுகளோடு பொருத்தி ஆராய்கின்ற நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**இயற்கை வழிபாடு**

இயற்கையின் ஆற்றலைத் தன்வயப்படுத்தி, தான் எண்ணுகின்ற இலக்கை அடைய இத்தகு வளமைச் செயல்பாடுகள், வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. சங்கக் காலத்தில் காணப்பட்ட இயற்கை வழிபாடுமுறை பறம்பின் பழங்குடி மக்களிடமும் வழிபாட்டு சின்னமாக விளங்குவதைக் காணமுடிகின்றது. இயற்கை வழிபாடு (**Naturism**) என்பது தொல் சமயத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். மலை, கடல், ஆறு, மரம், செடி, கொடி, ஞாயிறு, திங்கள், விலங்குகள் முதலானவற்றை ஆதி மக்கள் வணங்கியுள்ளனர். ஆல், கடம்பு, வேம்பு, வில்வம், அரசு ஆகிய மரங்களை வழிபடும் மரபு இன்றும் தொடர்வதைக் காண்கிறோம்.

இன்று தெய்வங்களாகக் கற்சிலைகளை உருவாக்குவது பரவலாக இருந்தாலும் தொன்மை வழிபாட்டில் மரத்தில், மரக்கட்டைகளில் தெய்வ உருவங்களை வடித்து வணங்கினர். குலக்குறியியல் மர வழிபாடாக மாறியதைக்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

காண முடிகின்றது. இவற்றில் போர்த் தெய்வமான கொற்றவை உறையும் மரம், முருகக் கடவுள் உறையும் கடம்ப மரம் என வகைப்படுத்தி வணங்கிய பழங்குடி மக்களின் நம்பிக்கைகளைப் புதினம் உணர்த்துகிறது.

**கொற்றவை மரம்**

பறம்பு மலையின் நடுக்காட்டில் மிகப்பெரிய அடர்ந்த கொற்றவை மரம் இருக்கும் இடமே முக்கிய வழிபாட்டு இடமாகும். அந்தப் பெரும் மரப் புதர்தான் கொற்றவையின் இருப்பிடம். அம்மரத்தின் அடிவாரத்தில் இலை விரித்துப் பலவிதமான பழங்கள் நிறைந்த பனங்கூடைகள் படையல் ஆக வைக்கப்பட்டிருக்கும். மரத்தினைச் சுற்றி மக்கள் அமர ஏதுவாக மண் திட்டுக்களும் மர அடுக்குகளும் உருவாக்கப்பட்டு இருந்தன. நடுவில் ஆடு களமும் அமைக்கப் பெற்றிருந்தது என இப்புதினம் காட்சிப்படுத்துகின்றது.

**தெய்வவாக்கு சொல்லும் விலங்கு**

"தேவாங்கு" என்று அழைக்கப்படும் விலங்கு - ஆந்தை முகமும் அணில் உடலும் குரங்கு கால்களும் கொண்ட விலங்கு. பறம்பு நாட்டின் தெய்வ அம்சமாக வழங்கப்படுகின்றது. மிகச்சிறிய உடல் அமைப்புடன் அவை மிகவும் மிரளும் இயல்பு கொண்டவை . அவ்விலங்குகள் கொற்றவை மரத்தை விட்டு இறங்கி வந்து எந்தக் கூடையில் உள்ள பழத்தை எடுத்துச் செல்கின்றனவோ அந்தக் கூடைக்கு உரிய குலத்தின் பாணர்கள் தங்களது குலப்பாடலை பாடத்தொடங்கி இசைக்கருவிகளை முழக்குவர். அந்த இசைக்கேற்ப ஆடுகளத்தில் அவ்வினக்குழுமக்கள் ஆடல் நிகழ்த்துவர். பாடல் முடிந்ததும் அந்தக் குலத்தின் வழி தோன்றல் கொற்றவைக்குப் பலியிட்டுச் சூளுரைப்பரைப்பது வழக்கமாகும்.

**கொற்றவை வழிபாடு**

பறம்பு நாட்டில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இவ்விழாவிற்கு வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் பாணர்க் கூட்டம் எந்த நாட்டில் இருந்தாலும் இந்த விழாவில் வந்து பங்கேற்பர். பறம்பு நாட்டின் உக்கிரம் ஏறிய விழா என்று பழையன் புலவர் கபிலரிடம் கூறுகின்றார். "தெற்கு ஓட்டக் காலத்தின் ஆறாம் நாளில் ஆதி மலையில் உள்ள பெருங்கடலின் நடுவில் இருந்து கதிரவன் மேல் எழும்பி வருவான். நெருப்பை உருக்கி ஊற்றியதைப் போலக் கண்ணிமைக்கும் நேரத்தில் நீளும் ஒளி வாள் அரை நாழிகை நேரம் மட்டுமே நீண்டிருக்கும். கதிரவன் ஒளி வாளை

எவ்வியூரின் மேல் இறக்கிய மூன்றாம் நாள் கொற்றவைக்கூத்து தொடங்கும்". (சு.வெங்கடேசன், வேள்பாரி,ப.125)

கொற்றவை விழாவின்போது ஆடப்படும் கொற்றவைக்கூத்து குறிஞ்சிக்கு உரியது மட்டுமன்று. ஐந்திணைக்கும் உரிய கூத்து எனப் பாரி அதன் முக்கியத்துவத்தைக் கபிலரிடம் எடுத்துரைக்கின்றான். இந்த மண் எங்கும் மூவேந்தர்களால் எத்தனையோ குலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. பல நூறு ஆண்டுகளாகக் குருதி ஆறு வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. அழிந்து வரும் குலங்களின் எண்ணிக்கை இன்று வரை தொடர்கிறது. பேரரசுகளின் கொடும் தாக்குதலில் இருந்து தப்பி உயிர் பிழைத்தவர்கள் இறுதியில் பறம்பு நாட்டுக்கு வந்து குடியேறி உள்ளனர். மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட 16 குலங்களின் மிச்சங்கள் இப்போது பறம்பு நாட்டில் வசிக்கின்றனர். அவர்களின் போர்த்தெய்வமான கொற்றவையிடம் முறையிட்டு ஆறாத்துயரைக் கொட்டி வஞ்சினமுறைக்கும் நிகழ்வுதான் இவ்விழாவாக முக்கியத்துவம் பெறுகிறது.

**அனிமேட்டிசம் அல்லது உயிரியம் எனும் வழிபாட்டு கொள்கை**

மானுடர் சாராத இயற்கை இறந்த ஆற்றல்கள் மீது கொள்ளும் நம்பிக்கையே அனிமேட்டிசம் ஆகும். கட்புலனுக்கு அப்பாற்பட்ட எங்கும் நிறைந்திருக்கக் கூடிய மனிதச் சார்பற்ற இயற்கை இறந்த ஆற்றல் ஒன்று உண்டு என்று நம்புவது அனிமேட்டிசம் அல்லது உயிரியமாகும்.

"அனைத்து வகையான பொருட்களும் தத்தமக்கே உரிய ஆளுமை பண்புகளை அல்லது உணர்வுகளை அல்லது ஆத்மாக்களை(souls) உடையனவாக விளங்குகின்றன என்னும் கருத்து தொகுப்பே அனிமேட்டிசம் ஆகும். இதனை மேலும் ஆழமாக அணுகினால் உயிர் துடிப்பற்ற பொருள் என்று எதுவும் இருக்க முடியாது என்று கூறிவிடலாம். மேலும் இந்தக் கொள்கையில் உருவவழிபாடு(Idolatry), போலி உருவ வழிபாடு (Fetishism) ஆகியவற்றையும் காண முடியும். மந்திரம் தொடர்பான சிந்தனைகளுக்கும் இக்கொள்கையுடன் தொடர்பு உண்டு" என்று அனிமேட்டிசம் பற்றி மானுடவியல் அறிஞர் இ.பி.டெய்லர் வரையறுத்துக் கூறுகின்றார்." (ஆ. தனஞ்செயன், குலக்குறியியல் வழக்காறுகள். ப.193)

தொல் தமிழர்கள் உயிர்ப்பாற்றலை அணங்கு, சூர் எனும் வகையில் பலவாறு இனம் கண்டுள்ளனர். பண்டைத் தமிழரிடம் அணங்கு எனும் தெய்வம் மக்களை

அச்சுறுத்தும் தெய்வமாகக் காணப்பட்டது. மலைச்சாரல்களிலும் காடுகளிலும் நீர் நிலைகளிலும் அணங்கு உறைவதாகத் தமிழ் மக்களின் மத்தியில் நிலவிய நம்பிக்கைகளை,

"கின்னரும் முரலும் அணங்குடைச் சாரல்" (பெரும்.பா.494)

"அணங்கு வீழ்வு அன்னப்பூந்தொடி மகளிர்" (மதுரை.446)

"அணங்கு அருங் கடவுள் அன்னோள்" (அகம் 16:18) எனும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. ஓரிடத்தில் அல்லது ஒருவரிடத்தில் தொடர்ந்து நிலையாக இல்லாமல் தற்காலிகமாக உறையும் அணங்கு, சூர் போன்றன உயிர்ப்பாற்றல் வழிபாடாகத் தொன்மை வழக்கில் இருந்துள்ளது. ஊர் மன்றத்தின் நடுவில் கொற்றவை மரத்தில் கடவுளை உறையுமாறு செய்து பலியிட்டு ஓரிடத்தில் தெய்வத்தைக் குடிகொள்ளச் செய்தமை தொல் சமய மரபில் ஏற்பட்ட மிக முக்கியமான படிமலர்ச்சி நிலையாகும்.

ஊர் மன்றத்தின் நடுவில் கொற்றவை மரத்தினைச் சுற்றித் திண்ணை அமைத்துப் பலிபீடம் எழுப்பி அதனைச் சாணமிட்டு மெழுகி பலி கொடுத்து அணங்கேறி ஆடுகின்ற உயிர்ப்பாற்றல்(**Animatism**) சமயச்சடங்கினை வேள்பாரி புதினத்தில் காண முடிகின்றது. அணங்கு, சூர் எனும் உக்கிரச்சக்திகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக அவற்றை அமைதிப்படுத்தி அவற்றின் சீற்றத்தில் இருந்து விடுபடுவதற்கும் பலி தரப்பட்டது. துடியான தெய்வத்தின் ஆற்றலை அண்டாது அணுகாது விலகி இருப்பதற்கான சடங்காக உயிர் பலி செய்யப்படுகிறது. இது எதிர்மறை (**Nagative retual**) சடங்கு நிலையில் நிகழ்த்தப்படுகின்றது. காட்டெருமையைப் பலி தந்து அதன் குருதியை உடல் முழுவதும் பூசியபடி நிலம் அதிரப் பாணர்களின் பறையொலிக்கு ஏற்ப ஆடல் நிகழ்த்துவதைப் புதினம் காட்சிப்படுத்துகின்றது.

மற்றொரு நிலையில் தெய்வங்களை வாழ்த்தி அதனோடு நெருங்கி அணுகிப் பக்தர்கள் சேர விளையும் ஆவல் வெளிப்படுகிறது. இறைவனை நெருங்குதல் இன்னொரு படிமலச்சிநிலை. இது ஆக்கமுறை (**Passitive ritual**) சடங்கு ஆகும். இத்தகு ஆக்கமுறை சடங்கானது தமிழ் மரபில் 'படையல்' ஆக உருவெடுத்தது. அதன் அடிப்படையில் கொற்றவை மரத்தின் கீழே வாழை இலை விரித்துப் பல விதமான பழங்கள் பல்வேறு கூடைகளில் நிறை கொற்றவைக்குப் பறம்பின் மக்கள் படையலாகச் சமர்ப்பிக்கின்றனர்.

பறம்பு மலைப் பகுதியில் இருந்து மேய்ச்சல் நிலம் நோக்கி இனக்குழு மக்களில் ஒரு பிரிவினர் கால்நடைகளை மேய்த்துப் பல்கிப் பெருக்குகின்றனர். செம்மலையின் இனத்தாரைப் பாண்டியன் படையுடன் அழிக்கின்றான். செம்மலையில் கிடைக்கும் மணிக்கற்களின் வளத்திற்காக மலையைக் கைப்பற்ற நினைத்த உறையூரை ஆண்ட கிள்ளிவளவன் நிகழ்த்திய தாக்குதலை நினைவுபடுத்திச் சூளுரைக்கும் வழிபாடாக உயிர்ப்பாற்றல் அல்லது அனிமேட்டிசம் வழிபாட்டினை வேள்பாரி புதினத்தில் அறிய முடிகின்றது. தன் குலத்து மக்களையும் கால்நடைச் செல்வங்களையும் தம் மலையின் பூர்வீக வளத்தைக் காக்கவும் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் எதிரிகளின் படைகளை அழித்து ஒழித்த 'கோவன்' எனும் குலத் தலைவனின் உயிர் தியாகத்தையும் வீரத்தையும் பறைசாற்றிக் கொற்றவை வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது.

உயிர்ப்பாற்றல் வழிபாட்டுச்சடங்காக நிகழுகின்ற கொற்றவை விழாவில் துடியடித்து குலப் பாடலைப் பாடிக்கொண்டிருக்கின்ற செம்மலை இனக்குழுவைச் சேர்ந்த பெண் ஒருத்தி அணங்கு ஏறியதால் வெண் சாந்து உருண்டையில் வைக்கப்பட்டிருந்த இரு மாட்டுக் கொம்புகளையும் ஆவேசத்தோடு எடுத்து அவள் தன்னையே குத்திக் கொண்டு பலி கொடுக்க முயல்கின்றாள். பறம்பின் குல நாகினி அப்பெண்ணைத் தடுத்து நிறுத்துகின்றாள்.

"மாடுகளைப் பூச்சிகளும் உன்னிகளும் கடிப்பதையே பொறுத்துக் கொள்ள முடியாமல் வெண் சாந்து உருண்டை செய்த குலத்தில் பிறந்த நான் எதிரிகளை வீழ்த்த எம் மாடுகளுக்குப் பச்சிலை எரிசாற்றை என் கையாலே தந்து அளித்து விட்டேனே என்று கதறியபடி இறந்து கிடந்த மாட்டின் முன் மண்டியிட்டு உட்கார்ந்து அதன் கொம்புகளைத் தன் கைகளால் எடுத்துத் தன் தொண்டைக்குள் இறக்கி உயிரை விட்டவன் கோவன் எனும் குலத் தலைவன்". (சு.வெங்கடேசன், வேள்பாரி, ப.260)

அவனின் நினைவாகவும், பாண்டிய அரசு தன் குலத்தையே அழித்து ஒழித்த கண்ணீர் கதையினையும் குலப் பாடலாகப் பாடி இனி எதிர்வரும் தன் குலச்சந்ததியினர் பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்று நினைத்து நிகழ்த்தப்படும் உயிரிய வழிபாட்டின் தன்மையினை இந்நிகழ்வின் வழி உணர முடிகின்றது.

### குலக்குறியியல் வழிபாடு மற்றும் மந்திரச்சடங்கு - தன்மையும் பயன்பாடும்

குலக்குறியியல் என்னும் பொருளில் கூறப்படும் Totemismஎனும் ஆங்கிலச்சொல் கிழக்கு வட அமெரிக்காவில் உள்ள அல்கான்கின்(Algonkin)

பழங்குடியினர் வழங்கும் ஆட்டோதீமன்(Ototeman) என்னும் சொல்லோடு தொடர்புடையது. அவர்களின் மொழியில் இச்சொல்லுக்கு "**உடன் பிறந்தான்**", "**உடன் பிறந்தாள் உறவு**" என்று பொருள் இச்சொல்லின் வேர்ச்சொல்லான "Ote" என்பதற்கு '**ரத்த உறவு உடையவர்கள்**' என்பது பொருள். வட அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் பகுதியில் வணிகம் செய்யச் சென்ற ஆங்கிலேயர் ஒருவர் மூலம் கி.பி 1992இல் இச்சொல் ஆங்கிலேயர்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டு 'Totem' என்றும் 'Totemism' எனவும் பயன்படுத்தப்பெற்றது". (சீ.பக்தவசத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.519)

மனிதனுக்கும் இயற்கைக்கும் இடைப்பட்ட ஊடகமான உறவின் குறியீடாகத் திகழ்வது குலக்குறியாகும். சமயத்திற்கு இன்றியமையாத அம்சம் புனிதமானது எனும் கண்ணோட்டமாகும். குலக்குறி அடிப்படையில் சமூகத்தின் குறியீடாக விளங்கும் காரணம் பற்றியே அது புனிதத் தன்மை உடையதாகக் கருதப்படுகின்றது. "ஒவ்வொரு இனக்குழுவினரும் தங்களது சமூகத்தை ஒருவகை புனிதத் தன்மை மிக்க ஒன்றாகவே நோக்குகின்றனர் ஏனெனில் பலம் வலிமை பண்பாடு ஆகியவற்றின் ஆதாரமாக விளங்குவது சமூகம் அதனால் ஒவ்வொரு தனி மனிதனும் சமூகத்தை முற்றிலுமாகச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமாகின்றது. உறுப்பினர் பலரைக் கொண்ட குலம் என்ற கலவை தன்மையுடைய பொருளை விட ஒரு குறியீட்டினை நோக்குவதும் பயபக்தியும் மரியாதையும் கலந்து தனது உணர்வுகளை அதனை நோக்கிச் செலுத்துவதும் இனக்குழுவினருக்கு எளிதாக வசப்பட்டது. எனவே புனிதக் கண்ணோட்டத்திற்கும் புனிதச் செயல்பாடுகளுக்கும் உரிய பொருளாகக் குலக்குறி உருப்பெற்றது. உண்மையில் அதுவே கடவுளாகக் கருதப்பெற்றது. இதன் மூலம் சமூகம் தன்னைத்தானே தெய்வமாக்கிக் கொள்கிறது" (முனைவர் சி. மகேஸ்வரன், இனக்குழுவரைவியல், ப.103)

இன வரைவியல் அறிஞர் எமில்தர்கைம் கடவுளுக்கு நிகரான ஒன்றாகவே சமூகத்தை விளக்குகின்றார். இச்சமூகத்தின் உறுப்பினர்கள் மட்டுமே புனிதமானவர்கள் அல்ல மாறாகச் சமூகத்தில் உள்ள குலக்குறி தாவரங்கள், விலங்குகள், குலக்குறிகளின் படிமங்கள் ஆகியவையும் புனிதமானவையே இப்பொருட்கள் அனைத்தும் வழிபாட்டிற்கு உரிய பொருட்களாக அமைந்தமைக்குக் காரணம் அப்பொருட்கள் யாவும் இயற்கை இறந்த சக்தியைத்தன் வயப்படுத்திக் கொள்வதுதன் என்று தன் ஆய்வின் வழி புலப்படுத்தியுள்ளார்.

"குலத்தின் கடவுள் குலக்குறிக் கொள்கை ஆகிய இரண்டுமே குலம் தானே அன்றி வேறில்லை அக்குளம் தான் குலக்குறியாக ஏற்றுள்ள விலங்கு அல்லது

தாவரத்தின் காட்சி வடிவத்தின் மூலம் கற்பனையாகத் தனி ஒரு வடிவம் கொடுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது என்று என்றும் குலத்தின் பதிலியாகக் குலக்குறியியலைக் காண்கின்றார் எமில் தர்க்கைம்".(முனைவர் சி. மகேஸ்வரன், இனக்குழு வரைவியல், ப.112)

**பறம்பு மலையையும் ஆதிக்குடிகளையும் காக்கச் சபதமேற்கும் கொற்றவை நீராட்டு வழிபாடு**

போர் என்பது கொற்றவையின் திருவிழா. ஆதிகாலம் தொட்டு அவள் மனம் குளிரும் நிலம் போர்க்களம் தான் செம்பாறைகளின் ஊடாகத் தலைகள் உருண்டு தெறிக்கும் ஓசையினை உடுக்கை ஓசையாக்கிக் கொண்டவள். எதிரிகளின் குருதி நிலமெங்கும் வழிந்தோடும் செவ்வீரமண்ணைப் பிசைந்து கொற்றவைக்கு ஊட்டப்போகும் மந்திரச் சடங்கினை நிகழ்த்த அனைவரும் ஒன்று கூடி உள்ளனர். பறம்பின் வளத்தைக் கையகப்படுத்தப் பல திசைகளின் வழியே மூவேந்தர்களின் படைகள் பறம்பு மலையின் எல்லைகளில் சூழ்ந்து பெரும் படைகளுடன் நெருங்கிப் பாசறை அமைத்துப் போர் தொடுக்க இருப்பதை அறிகின்றான் பாரி. ஊர்த் தெய்வமான கொற்றவையை வழிபட்டுச் சூளுரைத்து எதிரிகளை அழிக்கப் புறப்படுவது பறம்பு மலையின் மரபு. கொற்றவை நீராட்டு வழிபாடு எனும் சடங்கினை நடத்திக் கொற்றவையின் அருள் வாக்கினைப் பெற்ற பிறகு அவர்கள் போருக்குச் செல்வது காலம் காலமான மரபாகும்.

நீராட்டுக்காகக் கொற்றவையின் கூத்துக் களத்தில் கூடுவோம் என்று தன் வீரர்களிடம் கூறுகின்றான் பாரிவேந்தன். குல நாகினிகளின் முன்னிலையில் படையை நடத்திச் செல்லும் முக்கிய தளபதிகளுடன் கொற்றவையை நீராட்டிச் சபதமேற்கும் வழிபாட்டை முன் நின்று நிகழ்த்துகின்றான் பாரி.

**மந்திரச் சடங்கு**

இனக்குழு மக்கள் தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருட்கள் மற்றும் அவற்றின் இயக்கம் நிகழ்வுகள் ஆகியவை பற்றி தம் அறிவு நிலைக்கு எட்டியவாறு காரணம் கற்பித்துப் புற உலகப்பொருட்களைத் தம் விருப்பத்திற்கு ஏற்ப இயக்கி அவற்றின் தன்மைகளைப் பெறுவதற்குச் சில காயங்களைக் கையாளத் தொடங்கினர். அதாவது மழை வேண்டுமாயின் காற்றடிப்பது, மேகம் சூழ்வது, மழையால் பயிர் செழித்து வளர்தல் போன்ற இயற்கையான நிகழ்வுகளைப் போண்மை முறையில் பாவனை(**mime**) புரிந்து நடனம் ஆடினர். இயற்கையிடமிருந்து தமக்கு

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

என்ன விளைவுகள் உண்டாக வேண்டும் என்று விளைகின்றனரோ விளைவுகளைப் போலச் செய்தல் முறையில் நிகழ்த்திக் காட்டினால் இயற்கை அவ்வாறே திரும்பிச் செய்யும் என்று நம்புவது பண்டைக் காலத்து மக்களின் போலி அறிவியல் (Pseudo-Science) வழிபட்ட சிந்தனையாகும். இதனையே மந்திரம்(Magic) என்றனர். (ஆ.தனஞ்செயன் - குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், ப.189)

இது தொடர்பான நம்பிக்கைகள் சடங்குகள், நடனங்கள், பாடல்கள், வழிபாடுகள் ஆகியவை. வளமை, நம்பிக்கைகள், வழமை சடங்குகள், மந்திர நடனம், மந்திரப் பாடல்கள், வளமை வழிபாடு எனப்படுகின்றன. பாதுகாப்பு தீமையை மாற்றிவித்தல் வெற்றி போன்றவற்றை வழிபாடுகளின் மூலம் பெற முடியும் என நம்பினர்.

தொல்தமிழ் இனக்குழுவினரான பறம்பின் மக்கள் இயற்கையின் ஆற்றல்களைப் பெறப் பல்வகைப் பாவனைச் சடங்குகளையும் மந்திரச் சடங்குகளையும் கையாளுகின்றனர். இவை நிகழ்த்து முறை சடங்குகளாகப் படிவம் கொண்டவை. அவற்றுள் தமிழர் தொல் சமயத்தின் மிக முக்கியமான ஒரு கூறு மந்திரம் ஆகும். இயற்கையின் ஆற்றலைத் தன் வயப்படுத்தித் தான் எண்ணுகின்ற இலக்கை அடைய மந்திரச் செயல்பாடுகள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. வேள்பாரி புதினத்தில்,

**மந்திரச் செயல்பாட்டினை நிகழ்த்துபவர்கள்**

- கொற்றவையாக வேடம் புனைந்த வேள்பாரியின் மனைவி ஆதினி
- பச்சை மண் குடம் சுமந்த இளம் பெண்
- நிறை மாதக் கர்ப்பிணிப் பெண்
- குல நாகினிகள்
- வேள்பாரியும் வீரர்களும்

ஆகியோர் இணைந்து நடத்துகின்ற உரையாடலின் வழிநீராட்டு வழிபாடு பாவனை சடங்காக நிகழ்த்தப்படுகின்றது.

**மந்திரத்தன்மை உடையப் பொருட்கள்**

- இறகு உதிர்த்த நீர்ச் சேவல்.
- நூழிக்கிழங்கு, பனங்கருக்கு.
- முன்னோர் விலா எலும்புகள்.
- குருதி பிசைந்து சாம்பல் உருண்டைகள்.

➢ தேவவாக்கு விலங்கு குரல் எழுப்பி அவர்களுக்கான உத்தரவை கொடுத்தது.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

- பனை ஓலை கூடையில் கனிகள் சடங்கு பொருட்களுடன் உடல் முழுவதும் இறகு உதித்த நீர்ச் சேவல் கால் கட்டப்பட்ட நிலையில் கொண்டுவரப்பட்டது.
- யானை முடியும் புலி மயிரும் கொண்ட பின்னப்பட்ட கயிற்றால் நூழிக்கிழங்கை கட்டி இருந்தனர். சாம்பல் புழுதியில் குருதி பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக எண்ணற்ற உருண்டைகளை உருட்டிவைத்திருந்தனர்.

உடுக்கையின் ஒலியும் குலவை ஓசையும் இணைந்து கூத்துக்களம் உக்கிரமேறி உருமாறிக் கொண்டிருந்தபோது பெரும்குரலெடுத்து ஆதினி கொற்றவை ஏறியவளாக உக்கிரமாகக் கத்தினாள். உடுக்கை ஓசையும் குலவை ஓசையும் மேகம் கூடியதற்கு ஏற்ற ஆதினி கொற்றவை ஏறப்பெற்ற மெல்லச் சிரித்து வேகமாக ஆடத் தொடங்கி வெறியாட்டமாக ஆடினாள். அதுவரை சாய்ந்து கிடந்த நீர் சேவல் எழுந்து நின்று தலைச் சிலுப்பிக் கூறியது அதைக் கண்டவுடன் பாய்ந்து சென்ற மூத்த குலனாகினி அச்சேவலை எடுத்து ஆவேசமாகக் கத்தியபடி அதன் தலையை முறுக்கித் தனியே எடுத்து இடப்புறமும் உடலை வலப்புறமும் வீசி எறிந்தாள். மற்ற குல நாகினிகள்நூழிக் கிழங்கையும் குருதி உருண்டைகளையும் எல்லாத் திசைகளிலும் வீசி எறிந்தனர். ஆதினுக்கு பச்சை மண் குடத்தில் இருந்த முன்னோர் எலும்புகள் இடப்பட்ட நீரைத் தலையில் ஊற்றி நீராட்டு நடத்தினர். முன்னோர்களின் எலும்புகள் அவளது உடலில் நழுவி இறங்கின. முன்னோர் விலா எலும்புகளைக் கையில் ஏந்தி நிற்கும் ஆதினியிடமிருந்து பெற்றுத்தன் மார்பிலே எலும்பினால் பாரி கீறிக்கொண்டபோது கொப்பளித்துப் பெருகியது பாரியின் குருதி. அப்போது சொல் வயிற்றுக்காரி தலையில் சுமந்து வந்த கலயத்தோடு பாறையின் முன்னால் மண்டியிட்டு அமர்ந்தாள் குடத்திற்குள் இருந்த பனங்கருக்கை எடுத்த பாரி கீறிய மார்பின் மீது உரக்கத்தேய்தெடுத்த பொழுது அவனது மேல் சதையைப் பிய்த்துக் கொண்டு வந்தது பனங்கருக்கு.

- கொற்றவையின் பசியடைக்க, தாகம் தீர்க்க எதிரிகளை மலை மலையாய்க் கொன்றளிப்போம் என வேள்பாரி உள்ளிட்ட ஐந்து வீரர்களும் மார்பு குருதி கொண்டு உறுதி அளித்ததால் ஆதினிக்குள் இருந்த கொற்றவை அகம் மகிழ்ந்து காடு அதிரச் சிரித்தாள்.
- நீராட்டு விழா நடக்கின்ற இந்த ஊர் மன்றத்தின் மேடையிலே சூழ் வயிற்றுக்காரியான பெண் ஏறி அமர்ந்து கொற்றவையை அருகில் அழைக்கின்றாள்.

அதற்குக் கொற்றவை தலையை மறுத்து ஆட்டி "விழப்போகும் எதிரிகளின் எண்ணிலடங்கா உடல்களைத் தின்று முடித்து விட்டு வருகின்றேன். அதற்குள் ஏன் அழைக்கிறாய்" என மறுத்துக் கூறுகின்றாள். ஆனால் சூல் வயிற்றுக்காரி அதைவிடப் பெருங்குரலெடுத்து "காலம் தாழ்த்தாதே எனக்கான வாக்கை அளித்துவிட்டு நீ பசியாறிக் கொள்" என்று கேட்கிறாள். குலநாகினிகள் ஒன்று சேர்ந்து கொற்றவையைச் சூல் வயிற்றுக் காரி அமர்ந்த இடம் நோக்கி இழுத்துச் செல்ல முயல்கின்றனர். ஆனால் யாராலும் ஆதினியை அசைக்க முடியவில்லை.

சூல் வயிற்றுக்காரியின் கண்ணில் நீர் வழிந்து கொண்டிருந்தது. ஆதினியைக் குல நாகினிகள் வழு கொண்ட மட்டும் நகர்த்தினர். அமர்ந்திருந்தவள் ஆதினியல்லள். கொற்றவை அவ்வளவு எளிதாக நகர்த்தி விட முடியாது உடுக்கை அடித்துப் பெரும் குரலில் கதறியபடி கொற்றவையை மேடைநோக்கி நகர்த்தினர். தன் எதிரே அமர்ந்து இருந்தவளின் நிறைசூலில் கை வைத்தாள் கொற்றவை. "நிறைசூலுக்குள் இருக்கும் புது உயிருக்கு இந்த மண்ணைக் காத்தளிப்பேன்" எனக் கொற்றவை அழித்த வாக்கு காட்டுயிரின் காதுகளில் எல்லாம் எதிரொலித்தது. (சு.வெங்கடேசன், வேள்பாரி, ப.260)

எதிரிகளைக் கொன்றொழிக்க நிகழும் சூளுரைத்தலும் குருதி குடிக்கத் துடித்தலும் ஆவேசமுமே இந்தச் சடங்கின் உச்சம். பறம்பு மலை எங்கும் சூழ்ந்து நிற்கும் மூவேந்தர்களின் படைகளைப் புதைத்து ஒழிக்க நான் புறப்படுகின்றேன். கொற்றவையின் பெரும் பசிக்குத் திசையெங்கும் விருந்தளிப்போம் என்று சூளுரைத்து வேள்பாரியும் அவனது படைவீரர்களும் புறப்படுகின்றனர். இந்தப் பாவனை சடங்கு, பறம்பு மலையில் வசிக்கும் அனைத்து இனக்குழு மக்களுக்கான பாதுகாப்பினையும் வளமையையும் தீமையை மாற்றி வெற்றி கிடைப்பதற்காக அனைவரும் ஒன்று கூடி நிகழ்த்துகின்ற மந்திரமாக வழிபாட்டு சடங்கு அரங்கேறுகிறது.

**முடிவுரை**

சமயத்தோடு இணைந்திருக்கும் கருத்துருவங்கள் அனைத்தும் தொடர்ந்து நிகழக்கூடிய மனித அனுபவங்களில் இருந்தே தோன்றுகின்றன. இவற்றில் இருந்தே மக்கள் சமூகக் குழுவின் ஆற்றல்களையும் அதன் மகத்துவங்களையும் உணர்ந்து கொள்கின்றார்கள். கண்ணால் பார்க்க முடியாத ஆனால் உணர்வால் அறியக்கூடிய கூட்டுணர்வின் ஆற்றலை விளக்கிச் சொல்வதற்கு முற்படும் வகையில் ஒருமித்து நிற்கும் மக்கள் வழிபாட்டு கூறுகளைக் கட்டமைத்துக் கொள்கிறார்கள். இனக்குழு

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

மக்களின் இனம் புரியாத தெய்வீக உணர்வு நிலை அம்மக்களின் ஐக்கிய நிலையிலிருந்து தோன்றுகின்றன.

வேள்பாரி புதினம் முழுவதையும் இனக்குழு வழிபாட்டுக்கூறுகள் எனும் நோக்கில் நுணுகி ஆராய்ந்தோமெனில் உலகளாவிய வழிபாட்டு நிலையினையும் தமிழ்ச் சூழலில் இனக்குழு மக்களின் வழிபாட்டு நிலையினையும் ஒப்பிட்டு நோக்க முடிகின்றது. உலகளாவிய நிலையில் எண்ணற்ற தொல் குடிகளின் பல்வேறு சமயக்கூறுகளோடு குறிஞ்சித் திணையான பறம்பு மலையில் வாழும் இனக்குழு மக்களின் வழிபாட்டு கூறுகள் ஒன்றுபட்டு விளங்குவதை ஒப்பு நோக்க முடிகின்றது.

அவை முறையே,

- மண்ணையும் குலத்தையும் காக்கக் கொற்றவையிடம் வேண்டுதல்.
- இசை, பாடல், நடனம் நிகழ்த்துதல்.
- படையல் தருதல், பலியிடுதல்.
- தெய்வமேறிய, சக்தியோடு வாக்குரைத்தல்.
- மந்திரம், சடங்குகள் செய்தல்.
- உயிர்பாற்றல் கொண்ட தெய்வத்தன்மை உடைய பொருள்களை வழிபாட்டு சடங்கில் பயன்படுத்தி ஆற்றல் பெறுதல்.
- மகிமை கதைகள் உரைத்தல்.

எனும் பல உட்கூறுகளுடன் அமைந்திருப்பதைப் புதினம் நுட்பமாகப் பதிவு செய்துள்ளது. வளமை, பாதுகாப்பு, தீமையிலிருந்து விடுபடல், வெற்றி போன்றவற்றை வழிபாடுகளின் மூலம் பெற முடியும் என்பதை முன்வைத்து,

- **இயற்கை பொருள் வழிபாடு**
- **அனிமேட்டிசம் அல்லது உயிர்ப்பாற்றல் வழிபாடு**
- **குலக்குறியியம் (டோடோமிசம்)**

எனும் வழிபாட்டு கூறுகளாக வாழ்வியலோடு இனக்குழு மக்கள் கட்டமைத்த பன்முகத்தன்மையை வேள்பாரி புதினத்தில் அறியமுடிகிறது. இயற்கையின் ஆற்றலைத் தன் வயப்படுத்தித் தான் எண்ணுகின்ற இலக்கை அடைய இத்தகு வளமைச் செயல்பாடுகள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதே இவ்வாய்வின் வழி பெறப்பட்ட பொருண்மையாகும்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**பார்வை நூல்கள்**


1. பக்தவச்சல பாரதி - இலக்கிய மானுடவியல்
2. முனைவர் க.பஞ்சாங்கம் - இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்
3. முனைவர் ஞா.ஸ்டீபன் - இலக்கிய இன வரைவியல்
4. ஆ.சிவசுப்ரமணியன் - இன வரைவியலும் தமிழ் நாவலும்
5. தே .லூர்து - நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள்
6. முனைவர் சி.மகேஸ்வரன் – இனக்குழுவரைவியல்
7. ஆ.தனஞ்செயன் - குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும்
8. சு.வெங்கடேசன் - வேள்பாரி

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் பெண்ணிய முரண்கள்



திருமதி **கோ. கமலா**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
தந்தை ஹேன்ஸ்ரோவர்கல்லூரி(தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று)
பெரம்பலூர்-621220.

## முன்னுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். இந்நூல்கள் அறம், அகம், புறம் என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. அறக்கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்து மக்களுக்கு நீதிகளைப் போதித்த அறநூல்களில் பெண்கள் அடிமைகளாகவும், இழிவானவர்களாகவும் சுட்டப்பட்டுள்ளனர் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. சமண, பௌத்த மதங்களின் தாக்கங்களால் பெண்களின் நிலை சங்க இலக்கியங்களைவிடச் சங்கம் மருவிய இலக்கியங்களில் மிகவும் பரிதாபமான சூழ்நிலையில் இருந்ததை அறிய முடிகிறது. இவ்வாறான அறநூல்களில் பெண்ணிய முரணான கருத்துகள் ஆராயப்படுகின்றன.

## ஆய்வுமுறை

அறநூல்களில் பெண்ணிய முரண்கள் பற்றி ஆய்வு செய்யும் நோக்கில் இந்தக் கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முதன்மை நூல்களாகச் அறநூல்கள் வாசிக்கப்பட்டன. துணைமை நூல்களாக செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், மனுதர்மச் சாஸ்திரம், வள்ளுவரும் மகளிரும், புத்தமும் அவர் தர்மமும், தொல்காப்பியம், தமிழ் அற இலக்கியங்களும் பௌத்தச் சமண அறங்களும், தமிழ் இலக்கியப் பிரதிகளில் பெண்ணிய நோக்கு, தமிழிலக்கியத்தில் பெண்ணிச் சிந்தனைகள், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும் ஆகிய நூல்கள் இவ்வாய்விற்குத் தேர்வு செய்யப்பட்டு வாசிக்கப்பட்டுள்ளன. இந்நூல்களில் பெண்ணிய முரண்கள் பற்றிய தகவல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் தகவல்கள் அனைத்தும் பெண்ணிய முரண்கள் பற்றி குறிப்பிடப்பட்டுப் பெண்களின் அடிமைநிலை இன்றைய சூழலில் மாற்றம் பெற்று வருவதை உணர்த்துவதாக அமைகின்றது.

**பெண்ணிய முரண்கள் விளக்கம்**

பெண்களைத் தாழ்வுபடுத்துதல், இழிவுபடுத்துதல், இழிவாகப் பேசுதல் போன்ற மாறுபட்ட கருத்துகளை எடுத்துக் கூறுவது பெண்ணிய முரண்கள் ஆகும். சமூகம், பொருளாதாரம், வெளியுலக வாழ்க்கை, பொது நிகழ்வுகள் ஆகியனப் பற்றி அறியாதவாறு பெண்களை அடிமைப்படுத்திச் சித்தரிக்கப்பட்ட நிலையினை அறநூல்களில் காண முடிகிறது.

**திருக்குறள் நாலடியாரில் பெண்ணிய முரண்கள்**

**திருக்குறள்**

நீதி இலக்கியங்களுக்கு முன்னோடியாக விளங்கும் திருக்குறளில் பெண்ணியம் சார்ந்த முரணான செய்திகள் சில காணப்படுகின்றன. வாழ்க்கைத் துணை, மனைவி, பரத்தை எனப் பலவாறு பெண்கள் பார்க்கப்பட்டார்கள். பெண்கள் ஆண்களை விட உடலளவில் மட்டுமே வேறுபட்டுக் காணப்படுகின்றனர். பெண்கள் தன் கணவனுக்கு அடங்கியவர்களாக இருக்க வேண்டுமென்பதை,

“**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**” (குறள்.55)
“**பெற்றாள்பெறின் பெறுவர் பெண்டீர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு**” (குறள்.58)

என்னும் குறள்கள் பெண்களின் அடிமைத்தனத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. கணவனைத் தெய்வமாகத் தொழுவது, அன்றாட தேவைகளை நிறைவேற்றுவது போன்ற செயல்களால் பெண்கள் மேலுலக வாழ்க்கையை அடைவர் என்று குறிப்பிடுகின்றது. அதாவது மறைமுகமாகப் பெண்கள் கணவனைத் தொழ வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை, “**பெண்கள் அடிமைகளாய் நின்று அகமுடையானை வழிபட வேண்டும். வழிபடுவது அடிமையின் இயல்பெனச் சிலர் கூறினால் அதனையே நல்லோர் உரிமை எனப் புகழ்கின்றனர்**”1 என்கிறார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

பெண்களின் அடக்குமுறை ‘பெற்றால் பெறின் பெறுவர்’ என்ற குறளில் வெளிப்படுகிறது. அறச்செயல், அதற்கான பொருள், முயற்சி, கடமைகள் ஆகியன பெண்களின் ஏவலைச் செய்வோரிடத்தில் கிடையாது என்பதை,

“**அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ஏவல் செய்வார்கண் இல்**” (குறள்.909)

என்கிறார் வள்ளுவர். பெண்ணை விரும்புபவன் பெண்ணின் சொற்படி நடப்பவனுக்கு நல்ல செயல்களை நினைக்கும் எண்ணம் வராது என்று 'பெண்வழிச் சேறல்' அதிகாரம் விளக்குகிறது.

கடமைகளைச் சரியாகச் செய்ய நினைப்பவர்கள் பெண்களை விரும்பக் கூடாது. அவ்வாறு செய்தால் நல்ல பயனை அடையமாட்டார்கள் என்பதை,

**"மனைவிழைவார்மாண்பயன் எய்தார்வினைவிழைவார்**
**வேண்டாப் பொருளும் அது"** (குறள்.901)

என்ற குறள்வழி அறியமுடிகிறது. பெண்கள் ஆண்களைவிடத் தாழ்ந்த நிலையினர் என்பதையும், அவர்களுக்குப் பணிந்து நடத்தலை இழிந்த தன்மையாக ஆண்கள் கருதினர் என்பதையும் உணர முடிகிறது.

**நாலடியார்**

துறவறத்தைப் பெரிதாக வலியுறுத்துவது நாலடியார். பெண்கள் இழிந்த நிலையினர் என்பதால் அவர்கள் துறவு மேற்கொண்டு மோட்சமடைய முடியாது என்ற முரண்பாடான செய்திகள் காணப்படுகின்றன. இதனை, **"பெண்கள் மோட்சமடைய முடியாது. ஏனெனில் அவர்கள் தூய்மையற்றவர்கள், தாழ்வானவர்கள் எனப் பிராமணர்கள் கருதுவதைச் சுட்டிக்காட்டுகிறார்"**2 டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கார். ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது துறவறம். முதுமை, இளமை நிலையாமை அதிகாரத்தில் உள்ள பாடல்கள் பெண்களை மையமாகக் கொண்டு அமைந்துள்ளதை,

**"தாழாத் தளராத் தலைநடுங்காத்தண்டூன்றா**
**வீழா இறக்கும் இவன்மாட்டும் - காழ்இலா**
**மம்மர்கொள் மாந்தர் கணங்காகும்தன்கைக்கோல்**
**அம்மனைக்கோல் ஆகிய ஞான்று"** (நாலடி-13)

என்றும் அடிகள் விளக்குகிறது. தலை நடுங்கி, உடல் மெலிந்து, முதுகில் கூன் விழுந்து தடி ஊன்றி முதுமை நிலையில் இருக்கும் பெண்களும் இளமையில் ஆண்களை வருத்தும் அழகிய தோற்றம் உடையவர்களாக இருந்திருப்பர். எனவே இளமை நிலையில்லாதது என அறிந்து காமம் கொள்ளாமல் அறச்செயல்களில் ஈடுபட வேண்டுமென்பதை,

**"மண்திணி ஞாலத்து வாழ்வோர் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத்தோரே"** 3

என்கிறார் சீத்தலைச் சாத்தனார். உயிர்களுக்கெல்லாம் உணவும், உடையும், உறையுளும் தருவது அறம். அவற்றில் உணவு கொடுத்தல் என்பது பெண்களுக்குரிய அறம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

**நான்மணிக்கடிமை திரிகடுகத்தில் பெண்ணிய முரண்கள்**

**நான்மணிக்கடிகை**

பெண்கள் கணவனைப் போற்றி அவன் வழி நடத்தல் சிறப்பினைத் தரும். இவற்றில் தெய்வத்தை வணங்குவது போலக் கணவனை வணங்க வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்படுகிறது. இதனை,

"**பெண் இனிது பேணி வழிபடின்**" (நான்.39)

என்ற அடியால் அறிய முடிகிறது. பெண்களுக்குக் கற்பொழுக்கம் வலியுறுத்தப்படுகிறது. கற்பில் சிறந்த பெண் பெண்ணினத்தின் தெய்வமாக மதிக்கப்படுகிறாள் என்று புகழ்ந்து அடிமை நிலைக்கு ஆட்படுத்தப்படுவதை,

"**பெண்நன்று பீடிலா மாந்தரின்**" (நான்.15)
"**பிணியன்னர் பின்நோக்காப் பெண்டிர்**" (நான்.34)
"**ஒன்றூக்கல் பெண்டிர்**" (நான்.87)
"**அணங்கல்வணங்கின்று பெண்**" (நான்.89)

போன்ற பாடல்கள் வழி அறிய முடிகிறது. பின்வருகின்ற விளைவுகளை அறியாது செயல்படும் பெண்கள் 'நோய்' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். கணவனோடு ஒன்றுபட்டு வாழ்ந்து தம் கணவரைத் தவிர வேறு தெய்வங்களை வணங்காத கற்புடையவளாக இருக்க வேண்டும் எனப் பெண்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை,

"**கற்பு கடம்பூண்ட இத்தெய்வ மல்லது**

**பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்**" 4

என்கிறார் இளங்கோவடிகள். கற்பின் சிறப்பினால் பெண்கள் சமுதாயத்தில் தெய்வமாகப் பார்க்கப்படுகிறார்கள் என்பது அவர்களை அடிமைப்படுத்தும் நிலை எனத் தெரிகிறது.

**திரிகடுகம்**

மனவுறுதி கொண்ட இல்லறப் பெண்களைக் கோலினால் அடித்து அடிமைப்படுத்தும் செயல், மனைவியைக் காக்காமல் திட்டி இகழ்ந்து பேசுதல்,

 இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

கணவனின் குறிப்பறிந்து மனைவி செயல்படுதல் ஆகியன முரண்பட்ட செய்திகளாகக் காணப்படுகிறது. இதனை,

**“இல்லாளைக் கோலாற் புடைத்தலும்”** **(திரிகடுகம்.3)**

**“ஏவாது மாற்றும் இளங்கிளையும் காவாது”** **(திரிகடுகம்.49)**

**"வைதெள்ளிச்சொல்லுந் தலைமகனும்"** **(திரிகடுகம்.50)**

**“கொண்டான் குறிப்பறிவான் பெண்டாட்டி கொண்டன”** **(திரிகடுகம்.96)**

என்ற அடிகளால் அறிய முடிகிறது. பெண்கள் இல்லறத்தில் தன்னிசைப்படி எச்செயலும் இயற்றலாகாது, கணவனுக்குப் பணிவிடை செய்பவளாக இருக்க வேண்டும் என்பதை, “**இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை ஆகியன உடையவனாயினும் கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேண வேண்டும். வாழ்நாள் முழுவதும் பணிவிடைபுரிதல் வேண்டும், கணவனைப் பேணுதல் பெண்களுக்குரிய நல்லாறு**”5 என்கிறார் திரிலோகச் சீதாராம். ஆண்கள் தவறு செய்பவர்களாயினும் பெண்கள் பொறுமையுடன் இருந்து அவர்களைத் தெய்வமாக வணங்குதல் வேண்டும். அவர்களுக்குரிய பணிவிடைகளைச் செய்ய வேண்டும் என்பது பெண்ணடிமைத் தனத்தை வெளிப்படுத்துகிறது.

**இன்னாநாற்பது இனியவை நாற்பதில் பெண்ணிய முரண்கள்**

**இன்னா நாற்பது**

திருமணம் செய்து கொண்ட பெண்கள் கணவனுக்கு அடங்கி நடக்காமல் இருப்பது துன்பமாகும். உள்ளம் பொருந்தாத மனைவி, கணவனுக்குப் பிணி போன்ற பெண்கள், கணவரை வஞ்சித்தொழுகும் பெண்கள், அழகிய பெண்கள் நாணமின்றி ஒழுகுதல் ஆகியன இன்னா நாற்பதில் முரண்பட்ட கருத்துக்களாகக் காணப்படுவதை அறிய முடிகிறது. இதனை,

**“மணம் செய்த மனைவி அடங்கி நடவாதிருத்தல்” (இன்.நா.3)**

**“பொருந்தாத மனைவியோடு கூடி வாழ்தல்”** **(இன்.நா.12)**

**“நோய் போல்வாருடன் கூடிக் குடி வாழ்தல்”** **(இன்.நா.14)**

**“திரண்டு வளர்ந்த கூந்தலையுடைய மகளிர்”**

**“வஞ்சனை செய்தல்” (இன்.நா.15)**

**“நல்லியல்புடையார் நாணத்தக்க இடத்து நாணாதிருத்தல்”** **(இன்.நா.20)**

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

என்ற அடிகளால் அறிய முடிகிறது. பெண்கள் கணவனுக்கு அடங்கி நடத்தல், நோய் போன்றவர்கள், நாணம் உடையவர்களாக இருத்தல் போன்ற கருத்துக்கள் பெண்களைத் தாழ்வுபடுத்தியும், அடிமைப்படுத்தியும் கூறுவதாக அமைந்துள்ளது. இதனை,

**"தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல்**
**எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை"6**

என்கிறார் தொல்காப்பியர். மனைவி கணவனுக்கு முன் தன்னை, தன் பணியை, கடமையை, திறமையை, தன் வீட்டார் பெருமையைப் புகழ்வது போன்றனவற்றில் உரிமை இல்லை என்பதும் பெண்ணடிமைத்தனத்தை உணர்த்துவதாக அமைகிறது.

**இனியவை நாற்பது**

பெண்களை நஞ்சாகக் கருதும் வழக்கம் இந்நூலில் முளைவிடுகின்றது. இதனை,

**"தடமென்பணைத் தோள் தளிரியலாரை**
**விடம்என்று உணர்தல் இனிது" (இனி.நா.38)**

என்கிறார் பூதஞ்சேந்தனார் வலிமையான தோள்களையும், மென்மையான உடலையும் உடைய பெண்கள் நஞ்சாகக் கருதப்பட்டனர். இங்குத் தான் பெண்ணடிமை முதன்முதலில் ஆரம்பமாகிறது. 'குழந்தைப் பெறுதல் என்னும் உற்பத்தித் தளத்திலிருந்து பெண்ணைப் பிரித்து வீட்டுக்குள் வைத்துவிட்டு அந்த இடத்தில் ஆண் அமர்ந்து கொண்டான்'7 என்பதில் பெண்ணுக்குக் குழந்தைப் பெறுதல் தவிர மற்ற எல்லா அதிகாரத்தையும் ஆண் தனக்கானதாக மாற்றிக் கொண்டான் என்பதிலும் பெண்ணடிமை வெளிப்படுகிறது.

**ஏலாதி சிறுபஞ்சமூலத்தில் பெண்ணிய முரண்கள்**

**ஏலாதி**

பெண்களின் சொற்களைக் கேளாதிருத்தல், நம்பாதிருத்தல், இனிய மொழிகளைப் பேசுகின்ற பெண்களைப் பின்பற்றாமலிருத்தல், இரகசியங்களை அவர்களிடம் கூறாமலிருத்தல் போன்ற கருத்துக்கள் முரணாகத் தெரிகின்றது. பெண்கள் கூறும் நல்ல செயல்களுக்கான சொற்களைக் கேட்பது, நம்புவது, பின்பற்றுவது யாவும் தவறானதில்லை. ஆனால் ஏலாதியில் பெண்களின் சொற்களைக் கேட்கக் கூடாது என்று கூறுவது பெண்ணடிமைத்தனத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை,

**“இழையார் சொல் தேறான்”** (ஏலாதி.5)

**“பண்போல் கிளவியார்ப் பற்றாமை”**
**பண்போலும் சொல்லார்க்குஅருமறைசே ராமை”** (ஏலாதி.15)

**“மின்நேர்இடையார்சொல்தேறான்”** (ஏலாதி.20)

போன்ற அடிகளால் அறிய முடிகிறது. வரலாற்று பார்வையில் பார்க்கும்போது' "**பெண்களின் ஆற்றல், தனித்துவம் ஆகியன படிப்படியாகக் களையப்பட்டன. பொருளியல் நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டார்கள். நன்னடத்தை விதிகள், கடமைகள் ஆகியவற்றுடன் கூடிய இல்வாழ்க்கையுடன் அவர்கள் மட்டுப்படுத்தப்பட்டனர்**”8 என்கிறார். சி. செல்வக்குமார். பெண்கள் இல்லற வாழ்க்கைக்குள் மட்டும் அடங்கியவர்களாக வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**சிறுபஞ்சமூலம்**

தன்னை மணந்த கணவன் சொற்படி 'மனைவி' நடத்தல், அடிமைப்பெண் சமைத்த உணவை அறிவுடையார் உண்ணாதிருத்தல், அடங்காத பெண், அறிவில்லாப் பெண் அழல் போன்றன முரண்பட்ட கருத்துக்களாக வெளிப்படுகிறது. இதனை,

**“கொண்டான் வழிஒழுகல்பெண்மகன்”** (சிறு.மூலம்.13)

**“தொழீஇஅடஉண்ணார்”** (சிறு.மூலம்.36)

**“அரம்போல் கிளை அடங்காப் பெண்”** (சிறு.மூலம்.60)

**“அழல், தண்ணென்தோளாள்அறிவுஇலள் ஆயின்”** (சிறு.மூலம்.96)

போன்ற அடிகளால் அறியமுடிகிறது. கணவன் சொற்படி நடத்தல், அடிமைப் பெண், அடங்காப் பெண், அறிவில்லாப் பெண் என்று குறிப்பிடுவதெல்லாம் பெண்களைத் தாழ்வுபடுத்திக் கூறுவதாக அமைந்துள்ளது.

**“பெண்கள் மணவாழ்வு வரை தந்தை மற்றும்**

**உடன் பிறந்தோர்க்கு அடிமையாகவும் மணவாழ்க்கைக்குப்**

**பிறகு அவளுடைய கணவன் மற்றும் கணவனுடைய**

**குடும்பத்தார்க்கு அடிமையாகவும் வழிநடத்தப்படுகிறார்கள்”9**

என்கிறார் ந. கிருட்டிணமூர்த்தி. பெண்கள் திருமணத்திற்கு முன்னர்ப் பிறந்த வீட்டிலும், திருமணத்திற்குப் பிறகு கணவன் வீட்டிலும் அடிமையாக வாழ்ந்த சூழலை அறியமுடிகிறது.

**ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, முதுமொழிக் காஞ்சி நூல்களில் பெண்ணிய முரண்கள்.**

**ஆசாரக் கோவை**

அறிவுடையோர் விலைநலப் பெண்டிரின் இல்லத்தின் அருகில் தம் மனைவியைக் குடியிருக்க விடமாட்டார்கள். அவ்வாறு இருக்க நேர்ந்தால் மனைவியரின் மனம் வேறாகிவிடும் என்று கருதுதல் முரண்பட்ட கருத்தாகத் தெரிகிறது. இதனை,

**“மிகக் கிழமை உண்டெனினும் வேண்டாவே பெண்டிற்கு**

**உவப்பன வேறாய் விடும்” (ஆ.கோ.82)**

என்ற அடிகளால் அறியமுடிகிறது. விலைநலப்பெண் குடியிருக்கும் இடத்தில் குடும்பப் பெண்களைக் குடியிருக்க வைத்தால் குடும்பப் பெண்களின் மனம் மாறிவிடும் என்று கருதுவது முரணாகத் தெரிகிறது. சூழ்நிலை எதுவாயினும் மனம் மாறாத பெண்களும் காணப்படுகின்றனர்.

**பழமொழி நானூறு**

மேன்மையில்லாத பெண்களைச் சிறையிட்டுக் காவல் காத்து வருவதனால் வசப்படுத்திவிடலாம் என்பது ஒருபோதும் இயலாதது என்பது முரண்பட்ட கருத்தாகத் தெரிகிறது.

**“நிறையான் மிகுகல்லாநேரிழை யாரைச்**

**சிறையான் அகப்படுதல் ஆகா- அறையோ!**

**வருந்த வலிதினின் யாப்பினும் நாய்வால்**

**திருந்துதல் என்றுமோ இல்” (பழ.மொ.நா.262)**

என்ற அடிகளால் அறியமுடிகிறது. பண்பற்ற பெண்களைச் சிறையிட்டுக் காத்தாலும் திருத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் பெண்கள் கல்வியறிவு

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

பெற்றவராக இருந்தால் அவர்கள் பிறர் திருத்தத்திற்கு ஆளாகமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**முதுமொழிக் காஞ்சி**

கணவன் குண இயல்பு தெரிந்து அதற்கு இயைப நடக்காத பெண் அவனுக்கேற்ற 'மனைவி' அல்லள். இதனை,

**"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**

**நீர்அறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள்"** (முது.காஞ்சி. அல்லபத்து -1)

என்ற அடிகளால் அறியமுடிகிறது. கணவனின் குணமறிந்து பெண்கள் செயல்பட வேண்டும் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**"மணமான பெண்ணுக்கு அதாவது ஓர் ஆணுக்கு முற்றும்**

**உடைமையாகிவிட்ட மனைவிக்குக் கணவனது குறைபாடுகளைக்**

**கற்பது கடமையாகிறது"** 10

என்கிறார் ராஜ்கௌதமன். கணவனிடம் குறைகள் காணப்பட்டாலும் பெண்கள் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும் என்னும் அடிமை நிலையை உணர்த்துவதாக அமைகிறது.

**முடிவுரை**

அறநூல்கள் பெண்களுக்கு அறிவுரை கூறுதல், ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தல், புகழ்தல் போன்ற செயல்களை வெளிப்படுத்தி அவர்களை அடிமை நிலையில் வைத்திருந்த நிலையை அறியமுடிகிறது. பெண்கள் ஆண்களுக்கு நிகராக எல்லாத் துறைகளிலும் சாதித்து வரும் நிலையைக் காணமுடிகிறது. எனவே, இந்நூற்றாண்டு பெண்கள் அடிமைத்தளத்திலிருந்து விடுபட்டு ஓரளவு சுதந்திர வாழ்க்கையைப் பெற்றுள்ளனர் என்பதை உணர்த்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. வள்ளுவரும் மகளிரும், ப.123

2. புத்தரும் அவர் தம்மமும் - ப.168

3. செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், மணிமேகலைப் பாத்திரம் பெற்ற காதை, ப. 1397 (பா.95, 96)

4. சிலப்பதிகாரம் (அடைக்காலக்காதை) ப.1304 (பா.143, 144)

5. மனுதர்மச் சாஸ்திரம், பக்.81, 82

6. தொல்காப்பியம் (பொருளதிகாரம்) நூ.178

7. தமிழ் அற இலக்கியங்களும் பௌத்தச் சமண அறங்களும், ப.04

8. தமிழ் இலக்கியப் பிரதிகளில் பெண்ணிய நோக்கு, ப.20

9. தமிழ் இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள், ப.01

10. தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.348

**பார்வை நூல்கள்**


1. வள்ளுவரும் மகளிரும், பேரா.தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், முதற்பதிப்பு 2012. வெளியிடுவோர் எம்.வெற்றியரசி, புதிய கதவு எண் 26, முதல் தளம், குறுக்குத் தெரு, சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
2. புத்தரும் அவர் தம்மமும், டாக்டர். பாபாசாகேப் அம்பேத்கர், தமிழாக்கம், பேரா. வீ. சித்தார்த்தா, முதற்பதிப்பு அக.1996. வெளியீடு. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் பவுத்த ஆய்வு மையம், 590சி, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, அருகம்பாக்கம், சென்னை - 600 106.
3. செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், பதிப்பாசிரியர் ம.வே. பசுபதி, முதற்பதிப்பு சூன் 2010. வெளியீடு தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. மனுதர்ம சாஸ்திரம், ஆசிரியர், திருலோகசீதாராம், முதல் பதிப்பு - 2000, ஆறாம் பதிப்பு 2018, வெளியீடு, அலைகள் வெளியீட்டகம், எண் 5/1ஏ, இரண்டாவது தெரு, நடேசன் நகர், இராமாபுரம், சென்னை - 600 089.

5. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), இளம்பூரணர் உரை, முதற்பதிப்பு மே - 2005, 6ஆம் பதிப்பு, ஜுன்-2008, வெளியீடு சாரதா பதிப்பகம், 6/16, தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
6. தமிழ் அற இலக்கியங்களும், பௌத்த சமண அறங்களும், ஆசிரியர், முனைவர் சு. மாதவன், முதற்பதிப்பு, ஜூலை - 2017. வெளியீடு- நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
7. தமிழ் இலக்கியப் பிரதிகளில் பெண்ணிய நோக்கு, ஆசிரியர் சி. செல்வக்குமார், முதற்பதிப்பு, ஜனவரி - 2008, வெளியீடு, அன்றில் பதிப்பகம், 192, செகசீவன்ராம் சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005.
8. தமிழிலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள் திறனாய்வுக் கட்டுரைகள், ஆசிரியர் முனைவர் ந.கிருட்டிணமூர்த்தி, முதற்பதிப்பு ஆகஸ்ட் - 2012. வெளியீடு-நிக்கி முனைவக வெளியீடு, புதுத்துறை சாலை. காரைக்கால் - 609602.
9. தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ஆசிரியர் ராஜ்கௌதமன், முதற்பதிப்பு-2018, வெளியீடு நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.

# நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணிகளும் அதன் பலன்களும்



திரு. **நவீன் கணேசன்**

இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்,

சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்,

35900, தஞ்சோங்குமாலிம், பேரா,

மலேசியா.

**முன்னுரை**

நாயன்மார்கள் என்பவர் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள். நாயன்மார்கள் மொத்தம் 63 பேர். இவர்கள் சைவச் சமயத்தை வளர்த்தார்கள். நாயன்மார்கள் சிவனுக்கு அடியார்கள் என்று கூறுவது வழக்கம்(சந்தர், 2015). ஆழ்வார்கள் என்பவர் திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள். ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர். ஆழ்வார்கள் வைணவச் சமயத்தை வளர்த்தார்கள். ஆழ்ந்து இறைவனை வழிபட்டதால் ஆழ்வார்கள் என்று கூறுகின்றனர் (சுஜாதா, 2011). இவர்கள் திருமால் அடியார்கள் ஆவார். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல சமயப் பணிகள் செய்துள்ளார்கள். இவர்கள் ஆற்றிய சமயப் பணிகள் எத்தகைய பலன்களைக் கொடுத்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**தரவுப் பகுப்பாய்வு**

**நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணிகளின் பலன்கள்**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய சமயப் பணிகளின் பலனாக **மொழி வளர்ந்துள்ளது**. இவர்கள் தமிழுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் செய்த பணி போற்றத்தக்கதாகும். பக்தி இலக்கியங்களின் வாயிலாகவே இவர்கள் மொழியை வளர்த்தனர். நாயன்மார்களில் அனைவரும் சமய நூல் எழுதவில்லை. மாறாக, ஒரு சிலரே புலமை பெற்று விளங்கினார்கள். திருஞானசம்பந்தர், ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளைத் தூய தமிழில் பாடியுள்ளார். இதில் மொத்தம் 4146 பாடல்கள் இடம்பெறுகிறது. திருநாவுக்கரசர், நான்காம், ஐந்தாம், ஆறாம்

திருமுறைகளை இயற்றியுள்ளார். இதில் மொத்தம் 3064 பாடல்கள் இருக்கிறது. சுந்தரர், ஏழாம் திருமுறையைப் பாடியுள்ளார். இதில் மொத்தம் 1026 பாடல்கள் இடம்பெறுகின்றன. இந்த மூவரும் தூய தமிழில் திருமுறைகளைப் பாடியுள்ளார்கள். சான்றாக,

*'தமிழோ டிசை பாடல் மறந்தறியேன்'* (நான்காம் திருமுறை)

என்று வாரியே தமிழ் மரபைப் பின்பற்றிப் பாடியுள்ளதை நமக்கு உணர்த்துகிறது. ஆனால், ஆழ்வார்கள் அனைவரும் திருமாலைப் போற்றிப் பாசுரங்ககளைப் பாடியுள்ளனர். அவர்கள் இயற்றிய சமய நூல் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ஆகும். இதில் மொத்தம் 4027 பாடல்கள் தீந்தமிழில் இடம்பெறுகிறது. ஆழ்வார்கள் தாய் மொழியிலே திருமாலை அணுக வேண்டும் என்ற அவர்களின் கொள்கையைப் பின்பற்றி வந்தார்கள். சான்றாக, ***"விதையாக நற்றமிழை வித்தியென் உள்ளத்தை நீ விளைவித்தாய் கற்ற மொழியாகிக் கலந்து"*** எனத் தமிழ் பற்றைச் சமயப் பாசுரங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். நாயன்மார்களின் பாடலும், ஆழ்வார்களின் பாசுரங்களும் இறைவனைப் போற்றிப் பக்தி மார்க்கத்தில் பாடப் பட்டிருந்தாலும், அதில் தமிழின் செழுமை நிறைந்து காணப்படுகிறது. இவர்கள் பாடிய பாடல்கள் தமிழைத் தாங்கிச் சென்று புவி முழுவதிலும் பரப்பியது. அவர்கள் இயற்றிய பாடல்கள் பாமர மக்களால் கூடப் புரிந்து கொள்ள முடிந்ததனால், தமிழ் அனைவரிடத்தும் மேலோங்கி வளர்ந்தது. அன்றைய காலத்தில், அரசச் சபையில் வடமொழியே அதிகம் காணப்பட்டது. அரசு எவ்வழியோ குடியும் அவ்வழியே எனும் முதுமொழிக்கேற்ப மன்னர்களையும் மக்களையும் வடமொழி பிடியிலிருந்து விடுபடுத்தினார்கள். தமிழ் மொழியை வழிபாட்டு மொழியாக்கினார்கள். ஆகையால், நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணி வாயிலாகத் தமிழ் மொழியை வளர்த்ததில் இவர்கள் ஆற்றிய பணி மகத்தானது.

அடுத்து, **மனிதனுக்கு வாழ்க்கை நெறிகளை வழங்கியதும்,** நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணியின் பலனாகும். மனிதனுக்குச் சிறந்த மாண்பினைக் கொடுத்தது, இவர்கள் செய்த சமயப் பணி. முதலில், உண்மை, அன்பு நெறியை உணர்த்தியுள்ளனர். அன்பு என்பது ஒருவர் மீது எவ்வித எதிர்பார்ப்புப் பலனின்றிச் செலுத்துவதேயாகும் என்று வெளிப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, குங்குலியக்கலய நாயனார் என்பவர் சாய்ந்த சிவலிங்கத்தை ஒரு கயிற்றை எடுத்துப் பாசத்தோடு பிணைத்து, ஒரு பக்கம் இறைவனின் திருமேனியிலும், மறு புறம் கழுத்தில் கட்டிக்கொண்டு உயிர் பறிபோகும் என்று கூட நினைக்காமல் பலமாக இழுத்தார்.

அன்புக் கயிற்றுக்கு இறைவன் பணிந்து, நிமிர்ந்தார். நாயனார் கழுத்தில் உள்ள கயிறு மாலையாக மாறியது. பிறகு, ஆண்டாளும் கண்ணனிடம் எதிர்பார்ப்பு இல்லாமல்காட்டிய அன்பு, திருமாலுடன் இணைய வைத்தது, எதிர்பார்ப்பு இல்லாத அன்பை வெளிப்படுத்துகிறது. மேலும், துறவறத்தை ஒதுக்கி இல்லறத்தைப் போற்றியவர் ஆவார்கள். அதாவது, திருமணம் செய்தால் பாவம் என்றும், இறைவனை அடைய முடியாது என்ற சமண, பௌத்த எண்ணங்களை அழித்தனர். சான்றாக, இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார், மானக்கஞ்சாறன், திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் ஆகியோர் திருமணம் புரிந்த பின்னர் ஒரு சேர இறைவனை வணங்கி, திருப்பாதம் அடைந்தனர். இதனால், பெண்கள் ஒதுக்கப்படும் சமுதாயமாக மாறுவதைத் தடுத்துள்ளனர். தொடர்ந்து, மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் மன்னிக்கும் மனப்பான்மையை உணர்த்தியுள்ளனர். சான்றாக, திருநாவுக்கரசர் இளமை பருவத்தில் சைவச் சமயத்திலிருந்து சமணச் சமயத்திற்கு மாறிய பொழுதும் சூலை நோய் வந்த சமயம், இறைவன் பொருத்தியருளி மீண்டும் அருள் பாலித்தான். தொண்டரடிப்பொடியாழ்வார், தேவதேவி என்ற பொதுமகளுடன் தொடர்பு வைத்த போதினிலும் பொருத்தியருளி அவரைத் திருத்தி ஆசி வழங்கினார். மன்னிக்கும் குணம் என்பது இறைவனிடத்தே இருக்கும் பெருங்குணமாகும், அதை மனிதன் இடத்தில் புரிய வைத்துள்ளனர். எனவே, நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணி, வாழ்க்கை நெறிகளைப் பலனாக அளித்துள்ளது.

தொடர்ந்து, **சாதி வேறுபாடுகளின்றிக் குடிகளை ஒன்றுபடுத்தியதும்**, நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணியின் பலனாகும். ஒற்றுமையின்மை முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும் என்பதனை உணர்த்தவே, இவர்கள் மக்களிடையே ஒற்றுமையை மேலோங்கும் விதமாகச் சமயப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மனிதர்களிடையே தீண்டாமை, காணாமை போன்ற தீயக் குணங்களை வளரவிடமால் பார்த்துக்கொண்டனர். உதாரணமாக, நாயன்மார்களில் உயர்ந்த குலத்திலும் தாழ்ந்த குலத்திலும் இருப்பதே, இறைவனை அடைய இனம் தடையில்லை என்றும் பிறப்பு ஒருவரின் தாழ்வு நிலையை முடிவு செய்யாது என்றும் உணர்த்தியுள்ளனர். மேலும், பார்ப்பனர் ஒருவர் இனத்தின் பொருட்டு இழிவுபடுத்தின பாணரைத் தன் தோள் மீது சுமந்து வரச் செய்து, திருப்பாணாழ்வாரைத் தன்னுள் ஐக்கியப் படுத்திய இறைவனின் அன்பு அனைவரும் சமம் என்பதைப் புலப்படுத்துகிறது. ***"அமரவோ ரங்கமாறும்வேதமோர் நான்கு மோதித் தமர்களில்தலைவராயச்சாதி.."*** எனத் தொடங்கும் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரமும் பிறப்பில் யாரும் தாழ்ந்தவர்கள் அல்ல, மாறாகக் குணத்தில் தாழ்ந்த

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

நிலையில் உள்ளவர்கள் தான் கீழ்ப்பிறப்பாகும் என்று பறைசாற்றுகிறது. தொடர்ந்து, ஆணும் பெண்ணும் சமம் என்றும் காண்பித்துள்ளனர். சான்றாக, காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார், ஆண்டாள் போன்றவர்கள் இறைவனுக்கு அன்பு செலுத்துவதில் பாலின வேறுபாடு இல்லை என்றும், இறைவன் ஆணோ பெண்ணோ சமமாக அருள் புரிகிறார் என்றும் உணர்த்துகிறார்கள். சைவ, வைணவ ஒற்றுமையின் வாயிலாகவும் இவர்கள் மக்களை ஒன்றுபடுத்தினர். இவர்கள் திருமாலும் சிவனும் ஒருவரே என்று பாடிய பாசுரம், இதனை விவரிக்கின்றது. அது, ***"தாழ்சடையும்நீள்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்... இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"*** என்ற பாசுரமே ஆகும். ஆகையால், நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணியின் பலனாக மக்களிடையே ஒற்றுமை விளைந்துள்ளது.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய சமயப் பணிகளின் பலனாகப் **பக்தியை வளர்த்துள்ளனர்**. பக்தி என்பது இறைவன் மீது வைக்கும் ஆழ்ந்த அன்பினாலே தொடக்கம் காண்கிறது. இறைவன் மீது மனிதன் வைக்கும் பக்தியானது அவனது தீய எண்ணங்களை நல்வழிப்படுத்தி நெறியான பாதையில் அழைத்துச் செல்வதேயாகும். இதற்குப் பக்தி அடிப்படையாகிறது, அந்தப் பக்தியை நாயன்மார்களும் ஆழ்வார்களும் நமக்குக் கூறியுள்ளனர். கடவுளை உணர்வதற்கு அகக்கண்ணே போதும் என்றும், தியானம், உபதேசம், கல்வியறிவு தேவையில்லை என்றும் கண்ணப்பர் நாயனாரின் பக்தி எடுத்துரைக்கிறது. மனத்தால் இறைவனுக்குத் திருக்கோயில் கட்டி, இறைவனை நீராட்டி, உணவளித்து மகிழ்வதும் பக்தி தான் என்று பூசலார் நாயானர் எடுத்துரைத்துள்ளார். மேலும், 'ஏழைகளே, வேதத்தைப் படிக்க முடியாமல் போனாலும் பரவாயில்லை, மாதாவனின் நாமத்தைச் சொன்னாலே போதும் என்றும் அதுவே வேதத்தின் சுருக்கம்' என்று பேயாழ்வாரின் *"ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே உத்தமன்பேர்... மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு"* எனத் தொடங்கும் பாசுரம் நமக்குள் பக்தியை நிலைநாட்டுகிறது. இதில், இறைவன் நாமத்தைக் கூறுவதே வேதத்திற்குச் சமம் என்று பக்தி செலுத்தும் எளிய முறையை உணர்த்துகிறது. தூய மனத்தால் இறைவனிடம் அன்பு செலுத்துதலே உண்மையான பக்தி என்பதைக் காட்டுகின்றது. இறைவன் தனக்குள்ளே உறைகிறான் என்ற பெரும் தத்துவத்தைக் காட்டியுள்ளனர். எனவே, மானிடர்கள் எளிமையான, உண்மையான பக்தி நெறியைப் பின்பற்றி வாழ்வது, நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணியின் பலனாகும்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய சமயப் பணிகளின் பலனாகச் **சமயமும் வளர்ந்துள்ளது**. இவர்கள் செய்த சமயப் பணியின் காரணமாக இந்து சமயம் அழியாமல் காக்கப்பட்டது. அன்றைய காலக்கட்டத்தில், பல மன்னர்கள் சமணம், பௌத்தம் போன்ற சமயங்களின் தாக்கத்தில் மூழ்கினர். அவர்களை மீண்டும் இந்து சமயத்தில் நிலைபெறச் செய்தவர்களே, நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவார். ஏனென்றால், மன்னன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே ஆகும். பின்னர், மக்களும் சமணம் அல்லது பௌத்தம் போன்ற சமயங்களில் ஈடுபடமால் தடுத்தனர். சான்றாக, மீண்டும் சைவச் சமயம் திரும்பிய நாவுக்கரசரைச் சுண்ணாம்பு அறையில் போடுதல், கல்லில் கட்டிக் கடலில் போட்டல், யானையை விட்டு மிதிக்க வைத்தல் போன்ற செயலில் ஈடுபட்ட பல்லவ மன்னன், இறைவன் அருளால் திருநாவுக்கரசர் மீண்டு வந்தார். இச்செயல் பல்லவ மன்னனைச் சைவச் சமயமே உண்மையான சமயம் என்று உணரச் செய்தது. இதுபோன்ற அற்புதங்களால் மக்கள் சைவ, வைணவச் சமயமே உண்மையான சமயம் என்றுணர்ந்து பின்பற்றினார்கள். மேலும், ***“வெறுப்போடு சமணர் முண்டர் வீதியில் சாக்கியர்கள் நின்பால்..”*** (திருமாலை, எட்டாவது பாடல்) என்று தொடங்கும் ஆழ்வாரின் பாடல் சமண, பௌத்தச் சமயங்களை எதிர்த்துள்ளது என்று விளங்குகின்றது.

வடமொழியில் மூழ்கிய அரசர்களையும் மக்களையும், தாய் மொழியான தமிழ் மொழியின் ஆளுமையில் சைவ, வைணவச் சமயத்தை நிலைநாட்டினார்கள். தாய் மொழி மீதுள்ள பற்று அவர்களை மீண்டும் சைவ, வைணவச் சமயத்தில் வரச் செய்தது. ஆகையால், சைவ, வைணவச் சமயத்தை வளர்த்தது, நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணியின் பலனாகும்.

**முடிவுரை**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சமயப் பணியால் பல பலன் நிகழ்ந்துள்ளன என்பது திண்ணம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழோடு பக்தி இயக்கத்தை வளர்த்தது மகத்தான செயலாகும். பரம்பொருளான இறைவன் மீது அளவில்லாப் பற்று வைப்பதோடு சக மனிதர்களிடமும் அன்பு செலுத்துவோம். அன்பு, மனித நேயம், ஒற்றுமை, பக்தி போன்றவை இவர்கள் நமக்காக விட்டுச்சென்ற சொத்தாகும். எனவே, அதை மறக்கமால் பேணிக் காப்போம்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

## துணைநூற்பட்டியல்

1. சந்தர், எ. (2015). *பெரியபுராணம் (உரைநடை).* சென்னை: உமா பதிப்பகம்.
2. சுஜாதா. (2011). ஆழ்வார்கள்: ஓர் எளிய அறிமுகம். சென்னை: கிழக்குப் பதிப்பகம்.
3. செல்லமுத்து, இ. (2009). பெரிய புராணம் கூறும் நன்னெறிகள். சென்னை: மணிமேகலைப்பிரசுரம்.
4. நடராசன், த. (2015). பெரியபுராணத்தில் வாழ்வியல் நெறி. தமிழ் பேராய்வுஆய்விதழ், 53-54.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# நா.காமராசன் கறுப்பு மலர்கள் கவிதையில் கருத்து வளம்



செல்வி **ரா.ஜெயஸ்ரீ**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வுத் துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி(தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு,
நாமக்கல்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் யாப்பு மரபில் சங்ககாலத்தில் ஆசிரியப்பாவும், நீதியிலக்கிய காலத்தில் வெண்பாவும், காப்பியக்காலத்தில் விருத்தப்பாவும் கோலோச்சியது. ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று யாப்பு அடிப்படையில் பாடிவந்த மரபை உடைத்து எந்த யாப்பு வகையும், இலக்கணமும் இன்றி எழுதப்படுவதே புதுக்கவிதைகள் ஆகும்.

புதுக்கவிதையில் பல்வேறு வகையான கருத்தாக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மரபு வழிச் செய்திகளாகிய நிலையாமை, பக்தி, இயற்கை, பேதம், வருணனை, சாதி, பெண் அவமதிப்பு, தனிமனிதத் தகுதி ஆகியவை இலக்கியத்தில் மரபுக் கருத்துகளாக வெளிப்படுத்தப்பட்டன. தற்காலத்தில் நாட்டுப்பற்று, மொழியுணர்வு, சுதந்திரம், பகுத்தறிவு, சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடைமை போன்ற புதிய கருத்துக்களைப் புதுக்கவிதையில் காண முடிகின்றது. கருத்து என்பது கவிதை மாளிகையின் அடிக்கல், அது சிறக்காமல் கலைப் படைப்பு சிறப்பதில்லை. கருத்தாழும் சிறக்காமல் கலைப் படைப்பு சிறப்பதில்லை. கருத்தாழும் படைக்கக் கவிஞன் சமூகத்தைக் கற்க வேண்டும். அத்தகைய சிறந்த கருத்துவளமிக்க கவிதைகளைப் படைத்துள்ளார் நா.காமராசன் அவர்கள்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்வேறுபட்ட பாடுபொருள்கள் காலம்தோறும் தோன்றி வந்துள்ளன. சங்ககாலத்தில் காதல், வீரம் என்ற பாடுபொருளையும், நீதியிலக்கியத்தில் அறம் மட்டும் பாடுபொருளாகவும், பக்தியிலக்கியத்தில் இறையுணர்வையும், காப்பியக்காலத்தில் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற பாடுபொருள்களும், சிற்றிலக்கியக் காலத்தில் தனிப்பட்ட ஒருவர் வாழ்வியல் பற்றியும்

பாடுபொருளாகப் பாடப்பட்டுள்ளது. இக்காலத்தில் அனைத்துத் துறைகளும் பாடுப்பொருளாக வைத்துப் பாடப்படுகின்றன.

சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் நாம் காணும் பல்வேறு அவலங்களைக் கவிஞனும் காண நேரிடுகிறது. தான் கண்ட சமுதாய அவலங்களைத் தன் கவிதைகள் மூலம் பதிவு செய்து வெளிப்படுத்தி மக்களை விழிப்படையச் செய்யும் பெரும் பொறுப்பு கவிஞனுக்கு உண்டு.

**நா. காமராசன்**

நா. காமராசன் அவர்கள் தேனி மாவட்டம் போடிநாயக்கனூரைச் சேர்ந்தவர். அவ்வூரைச் சேர்ந்த பழுங்கவிஞர் கான்முகமது என்பவரிடம் கவிதை இலக்கணத்தைக் கற்றவர். கல்லூரியில் தமிழ் பணியாற்றியிருக்கிறார். இளமையில் திராவிட இயக்கத்தின் தனித் தமிழ்நாடு கொள்கையால் ஈர்க்கப்பட்டு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்குகொண்டார். அதற்காகச் சிறைக்கும் சென்றிருக்கிறார். சிறையில் அவர் கால்விலங்கு பூட்டப்பட்ட நிலையில் தண்டனை அனுபவித்தார். தாமரை, முரசொலி, மன்றம், காஞ்சி, காதல், சுரதா, தீபம் ஆகிய பத்திரிகைகளில் அவர் கவிதைகள் எழுதி வெளியிட்டார். தம் இலக்கியத் தாய்வீடு என்று தாமரை இதழைக் குறிப்பிடுகிறார்.

எழுத்து இதழில் கவிதை எழுதியவர்கள் புதுக்கவிதையின் உள்ளடக்கத்தோடு தடுமாறிக்கொண்டிருந்த நேரத்தில் நா. காமராசன் மரபுக் கவிதையைப் போன்றே சந்தச் சொற்றொடர்களில் புதுப் பதச் சேர்க்கைகளைத் தம் கவிதைகளில் பயன்படுத்தினார். அந்த உருவம் அப்போதைய காலக்கட்டத்தில் மிகவும் புதிதாக இருந்திருக்க வேண்டும். அப்போதைய காலத்திற்கேற்ற புதுமைகளை அவர் செய்ததால் நா. காமராசனின் கவிதைகள் பெரும் புகழைப் பெற்றன. ஒரு வகையில் அவர் வானம்பாடிகளுக்கே முன்மாதிரியாக இருந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. நம் சமுதாயத்தில் மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

கவிதை என்பது கருத்து, மொழி, நடை என மூன்று பரிமாணங்களைக் கொண்டது. அத்தகைய பரிமாணங்களோடு காணப்படும் நா.காமராசன் கவிதைகளில் புதிய கருத்தாக்கங்கள், சமூகப் பதிவுகள், தலித்தியம் ஆகிய நடப்பியல் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், பெண்ணியம், காந்தியம், தமிழியம், தேசியம் போன்ற

கருத்தியல் வளங்களும் காணப்படுகின்றன. நா.காமராசன் கவிதைகளில் பரவியும் விரவியும் காணப்படும் கருத்து வளத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

**இலக்கியத்தில் கருத்து**

இலக்கியத்தில் கருத்து என்பது புலனுணர்வு அல்லது உணர்வாற்றல், பொருள், சாராம்சம், எண்ணம் எனும் பல பொருள்களைக் கொண்டது. கருத்து என்பது உள்ளடக்கம் எனலாம். உள்ளடக்கமாகிய கருத்து இல்லாத இலக்கியமே இல்லை. ஆனால் இலக்கியத்தின் உள்ளடக்கம், மனிதன், மனித உறவுகள், சமுதாயத்தின் தோற்றம் ஆகியவற்றை எதார்த்த நிலையில் காட்டுவதில்லை. அது உணர்வு, உணர்ச்சி, கற்பனை, உத்தி ஆகிய நான்கு கூறுகளின் தொடர்போடு வெளிப்படுகிறது. அத்தகைய கருத்தை நா.காமராசன் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**சமூகப் பதிவுகள்**

சமூகவியல் நோக்கில் வேறு கவிதைகளைப் படைத்தும் காட்டியுள்ளார் நா.காமராசன். வறுமை, தன்னம்பிக்கை, சமூக அவலம், அரசியல் நிலை, சாதியம் ஆகியவற்றைத் தமது கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

**வறுமை**

சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உலகுக்கு உணர்த்தும் பணி உன்னதமானது. அதனைச் செய்யாதவன் நல்ல கவிஞனில்லை. வாழ்கின்ற காலத்தில் உண்டாகும் மாற்றங்களை இயற்றும் கவிஞனே காலத்தை வென்ற கவியாகின்றான். நாட்டின் வறுமை நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட கவிஞன், நிலாச்சோறு என்ற கவிதையில்

“பூமியாத்தாள் மடியுண்டு

புழுதிப்பொன் விரிப்புண்டு.

புழுதிப் பொன் விரிப்புக்குப்

புத்திரனாய் வந்தவன் நான்.

பூகம்பம் முத்தமழை

புயல் எனக்குத் தாலாட்டு

தண்ணீரே தாய்ப்பாலாம்

கண்ணீர் என் புன்னகையாம்!

பசி எனக்கு விளையாட்டு

பருவங்கள் மாற்றுடைகள்.

இடுகாடே மண்குடிசை

இறப்பெனதுநித்திரையாம்"; (கறுப்பு மலர்கள்,ப.16)

அமாவாசைக்கு முதல் நாள் இரவில் ஒரு பிச்சைக்காரனின் கண்ணீர்க் கதையைப் பதிவு செய்துள்ளார்.

"நாளைக்கோ அமாவாசை

நரைத்த நிலாக்கல்லறைநாள்

நரைத்த நிலாக் கல்லறைக்குள்

நான் தூங்க வருகின்றேன்.

துண்டுநிலா சோறாக.

துளிவிண்மீன் கறியாக

கண்டுபசிநோய் கொண்டேன்!

காலன்தேர் என்றுவரும்?" (கறுப்பு மலர்கள், ப.17)

என்ற கவிதையில் இந்தியா சுதந்திரம் அடைந்தும் நாட்டின் நிலை மாறவில்லை என வறுமை நிலை குறித்துச் சாடியுள்ளார்.

**சமூக அவலம்**

நம்நாட்டு சமுதாய வாழ்க்கையில் மேலை நாட்டுக் கலாச்சாரங்களின் தாக்கம் நம்மிடையே பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இம்மாற்றம் மனிதச் சமுதாயத்தைப் பல்வேறு இன்னல்களுக்கு இட்டுச் செல்லுதல் கண்கூடு. 'அலிகள்' எனச் சமுதாயத்தில் ஓரம் கட்டப்பட்டவர்கள். பின் அரவாணிகள் என்றும், இன்று திருநங்கைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களை நா.காமராசன் அவர்கள் காகிதப் பூக்கள் என்கிறார். அவர்களைப் பற்றி எழுதிய உருவகக் கவிதை,

"சந்திப்பிழை போன்ற

சந்ததிப்பிழை நாங்கள்

காலத்தின் பேரேட்டைக்

கடவுள் திருத்தட்டும்

தலைமீது பூவைப்போம்

தாரணியோர் கல்லறையில்

பூவைத்தல் முறைதானே?

பூத்தஉயிர்க் கல்லறைகள் நாங்கள்!

தாய்ப்பெண்ணோமுல்லைப்பூ

தனிமலடி தாழம்பூ

வாய்ப்பந்தல் போடுகின்ற நாங்கள்

காகிதப் பூக்கள் ” (கறுப்பு மலர்கள், ப.15)

திருநங்கைகள் பற்றிய உருவகக் கவிதை. இதில் காலம் என்ற மழைத்தூறலில் களையாகப் பிறப்பெடுத்துள்ளோம். தாய்ப்பாலின் சரித்திரத்தில் சதுராடும் புதிராக ஆனோம். விதை வளர்த்த முள்ளாக ஆனோம். சுடர் விளக்கின் இருளாக ஆனோம். சதை வளர்க்கும் பிணங்கள் நாங்கள். சாவின் சிரிப்புகள் ஆனோம். ஊமை பாட்டிசைக்க, கையில்லா முடவன் அதை எழுதிவைக்க, முழுக்குருடர் அதனைப் படிப்பதால் என்ன பயன் விளையும்? அப்படிப்பட்ட பயனற்ற வாழ்வு எங்களுடையது.

நாங்கள் சந்திப்பிழை போன்ற சந்ததிப் பிழைகள். காலமென்னும் ஏட்டில் நிகழ்ந்துவிட்ட பிழைகள். எங்கள் வாழ்வு பிழையுள்ள, பொருளற்ற வாழ்வு. நாங்கள் பூச்சூடினால் கல்லறைக்குப் பூ வைத்ததுபோல் இருக்கும். பூச்சூடி உலவினாலும் கூட, நாங்கள் பூத்த கல்லறை போன்று உயிரற்ற சடலத்தின் மீது பூ வைத்தது போல இருக்கும்.

எங்களைப் பெற்றெடுத்த தாய்மார்கள், தாய்மை மணப்பதனால் மணம் வீசும் முல்லைப்பூ போன்றவர்கள். தனிமலடியாக விளங்கும் ஒவ்வொருவரும் தாழம்பூ போன்றவர்கள். வாய்ப்பேச்சால் வக்கணையாகப் பேசும் நாங்களோ மணம் சிறிதும் அற்ற காகிதப்பூக்கள்.

இன்றைய காலகட்டத்தில் அரசு திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கிகரித்துள்ளது. திருநங்கை என்ற அழகான பெயர் சூட்டியுள்ளது. சமுதாயத்திலும் மக்களிடையே இவர்களுக்கு அங்கிகாரம் கிடைத்துவருகிறது. ஆயினும், நா.காமராசனின் இக்கவிதை அவர்களது மனக்குமுறலை அழகாக எடுத்துக் கூறுகிறது.

**பெண்ணியம்**

நா.காமராசன் தம் கவிதைகளில் எண்ணிலடங்காக் கருப்பொருட்களைக் கையாண்டிருந்தாலும், பெண்மையைச் சரியான புரிதலோடு விளங்கிக் கொண்டிருக்கிறார். பெண்ணியச் சிந்தனைகளைப் பல பரிமாணங்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஆணைப் போலவே பெண்ணும் தன் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்பச் சுதந்திரமாக வாழும் வாழ்வியல் முறையே பெண்ணியம். பெண்களின் உரிமையை வற்புறுத்தும் ஓர் இயக்கம் - பெண்ணியம் என்பர். "பெண்களைப் புருசனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல், மனிதச் சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும், கீர்த்தி புகழ் பெறும் பெண்மணியாக்கவும் வேண்டும். பெண்ணும் தன்னைப் பெண்ணினல் என்று கருத இடமும், எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கவே கூடாது. நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம், ஏன் நிபந்தனை, உயர்வு தாழ்வு ஏன் என்ற எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எழு வேண்டும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் நம் பெண்கள் வெறும் போகப் போருள் ஆக்கப்படக் கூடாது. அவர்கள் புது உலகத்தைச் சித்தரிக்க வேண்டும் என்று பெரியார் எழுதுகிறார்."(ஈ.வே.ரா.,1990)

இத்தகைய பெண்ணியத்தை நா.காமராசன் வலியுறுத்துகிறார். நா.காமராசன் அவர்கள் சபதம் என்ற கவிதையில்,

"சபதம் ஏற்றுக் கொள்கிறேன் - நான்
சாவை எற்று கொள்கின்றேன்
சமஉடைமைப் பூக்களின் - மண்
சாரமாகச் செல்கிறேன்" (கறுப்பு மலர்கள்,ப.21)

என்ற கவிதையில் பெண்ணின் சம உரிமை பற்றி பதிவு செய்துள்ளார்.

**விலை மகளிர்**

பெண்களின் பல்வேறு நிலைகளைப் பாடிய கவிஞர்கள் விபச்சாரத் தொழில் புரியும் விலை மகளிரைப் பற்றியும் பாடியுள்ளனர். எந்த ஒரு பெண்ணுப் விலை மகளிராகப் பணியாற்ற மனம் விரும்பி இப்பணியை ஏற்றுக் கொள்வதில்லை. சங்க இலக்கியங்களில் கூடப் பரத்தையரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். சங்ககாலப் புலவர்கள் தொல்காப்பியர் பரத்தையரைக் காமக்கிழத்தியர் என்றும், வள்ளுவர் பெருமகனார் வரைவின் மகளிர் என்றும் குறிப்பிடுவார். இவ்வாறான பரத்தமைத்

தொழில் நடைபெறக் காரணம் பெரும்பாலும் ஏழ்மையின் கொடுமையே ஆகும். “பெண்களைப் போகப் பொருளாகவே வைத்திருக்கும் கொடுமை இச்சமுதாயத்தில் மண்டிக்கிடக்கிறது" (தமிழ்க்குடிமகன், 1986) என மு.கத்தமிழ்க்குடிமகன் அவர்கள் குறிப்பிடுகின்றார். இதைப் போலவே பெண்கள் எவ்வாறு பெண்கள் ஆண்களின் போகப் பொருளாக நடத்தப்படுகின்றார்கள் என்று நா.காமராசன் தம் கவிதைகளில் குறிப்பிடுகின்றார். விலை மகளிர் என்ற கவிதையில்,

“பாற்கடல் அமுதத்தைத் தேவர்கள் சுவைத்து

விட்டதால்தான்

எங்கள் இதழ் அமுதத்தை அரக்கர்களுக்கு

வழங்குகிறோம்.

எங்களுடைய நீதிமன்றத்தில்தான்

ஒழுக்கம் தண்டிக்கப்படுகிறது.

நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்

ஆடை வாங்குவதற்காக.” (கறுப்பு மலர்கள், ப.85)

என்று விலை மகளிரின் துன்பத்தைப் பதிவு செய்துள்ளார்.

**மது**

மதுவினால் ஏற்படும் தீமையைச் சுட்டிக் காட்டி என்றும் அது இந்தியாவில் தொடரும் என்று குடிகாரன் என்ற கவிதையில் வருந்திப் பாடுகிறார்.

“இந்தியாவில்

கங்கை வற்றிப் போனாலும்

மதுவெள்ளம் பாய்ந்து கொண்டுதான் இருக்கும்.” (கறுப்பு மலர்கள், ப.34)

**வேலையில்லாத் திண்டாட்டம்**

சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைச் சூழலும் பல்வேறு எதிர்பார்ப்புகள் நிறைந்ததாகவே அமைந்திருக்கின்றன. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பல்வேறு சூழ்நிலைகள் அவனது வாழ்க்கைப் போக்கை மாற்றும் காரணிகளாகிவிடுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்குப் பெரும்பாலும் சமூக அவலங்களே முதன்மைக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உலகுக்கு உணர்த்தும் பணி உன்னதமானது. அதனைச் செய்யாதவன் நல்ல கவிஞனில்லை. வாழ்கின்ற காலத்தில் உண்டாகும் மாற்றங்களை இயற்றும் கவிஞனே காலத்தை வென்ற கவியாகின்றான். நாட்டின் வறுமை நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட கவிஞன்.

நம் நாட்டில் நிலவும் தலையாய பிரச்சனைகள் பலவற்றில் முன்னணியில் இருப்பது இளைய சமுதாயத்தில் பெரும்பாலானவர்கள் திறமைகள் பலவற்றைப் பெற்றிருந்தும் தகுந்த வேலைவாய்ப்பைப் பெறமுடியாத நிலையில் ஆதரவின்றி அநாதைகளாக உள்ளனர். இதனை, அனாதைகள் என்ற கவிதையில்,

“அனாதைகளே உங்கள் பாடகன் பாடுகிறான்

அரை வெண்ணிலவின் மீன்களின் ஒளியில்

ஆயிரம் நுரைமலர் ஆற்றங் கரையில்

ஆவியின் நாக்கில் மௌனத்தின் குரலில்

அவன் பாடுகிறான்!

அனாதைகளே, உங்கள் பாடகன் பாடுகிறான்!

சூனியம் ஏந்திய தீபங்களே!

சூரியன் தூங்கிய துருவங்களே!

ஊமையன் பாடிய பாடல்களே

உயிர்நிழல் இல்லாக் கோடைகளே

உறவெனும் பூமியின் தூசுகளே

ஆவியின் நாக்கில் மௌனத்தின் குரலில்

அவன் பாடுகிறான்!

அனாதைகளே, உங்கள் பாடகன் பாடுகிறான்!” (கறுப்பு மலர்கள், ப.23)

அநாதைகளாக வாழ்பவர்கள் மனம் நொந்து இறுதியில் பிச்சையெடுக்கின்றனர் என்பதைப் பிச்சைக்காரி என்ற கவிதையில்,

“இரவுகூட விடியலில் மன்னிக்கப்படுகிறது

இன்றும் நாங்கள் மன்னிக்கப்படவில்லை.

கால்நடைகள்

கட்டுத்தறிகளை நோக்கிப்

போவதைப் போல

நாங்கள் சிறைச்சாலைகளை நோக்கிப்

போய்க்கொண்டிருக்கிறோம்

எமக்கு

இந்த உலகில் பெறுவதற்கு என்ன இருக்கிறது..

கைவிலங்குகளைத் தவிர…?

உனது விசாரணையே 'கூண்டு'களில்

தொடங்கும் போது

தீர்ப்பு

சிறைச்சாலைகளில் முடிவதில்

வியப்பொன்றும் இல்லை.

நீ நீதிதேவனின் ஆலயமென்று

நம்பினேன் ஆனால்,

நீதி தேவனுக்கு நீ வெறும் 'தபால் நிலையம்' தான்!" (கறுப்பு மலர்கள் ப.32)

**சாதிப் பாகுபாடு**

பழைய சமுதாயத்தில் மக்கள் அவரவர் செய்யும் தொழில்களின் அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டிருந்தார்கள். பின்னாளில் இது செய்தொழில் அடிப்படையில் சிதைவுற்றுப் பல்வேறு சாதிப் பிரிவுகளாக உருப்பெற்றது. பண்டைக்காலந்தொட்டு இன்றுவரை சாதிப்பாகுபாடுகளால் மக்களுக்கு நேரும் பிரச்சனைகள் சமுதாயத்தில் நிரம்பக் காணப்படுகின்றன. சமுதாயத்தில் தோன்றும் வன்முறைகளுக்குக் காரணம் சாதி வெறியே ஆகும். பழங்காலத்தில் தொழில் முறையினால் ஏற்படுத்தப்பட்ட பாகுபாடுகள் இன்று பிறப்பினால் ஆனவையாகக் கருதப்படுகிறது.

தலித்தியம் தமிழ்க் கவிதைகளில் புதிய குரலாகத் தலித் இலக்கியம் ஒலிக்கிறது. தலித் இலக்கியம் பற்றி, 'தல' என்னும் சொல் மராத்திய மொழிச்சொல், மண்ணைக் குறித்தது. மண்ணில் வேர்பிடித்த பொருளைக் குறித்தது. இதன்படி மண்ணில் வேர்

கொண்ட மனிதர்களது இலக்கியமே தலித் இலக்கியமாகும்:. சாதி மோதல்கள் இல்லாத சமூகத்தை உருவாக்கத் தலித்தியம் உதவுகிறது. சமூக நீதியை முன்னிறுத்திய இட ஒதுக்கீட்டு கிளர்ச்சிகள், பொருளாதாரச் சமத்துவத்தை எதிர் நோக்கிய எழுச்சிகள் ஆகியவற்றைக் கருவாகக் கொண்டே தலித் இலக்கியங்கள் உருவாகி வந்து கொண்டிருக்கின்றன. நா.காமராசன் தலித் கவிதைக் களங்களிலும் இத்தகைய கருத்துகள் வெளிப்படுகின்றன.

சாதிப் பாகுபாடுகளினால் மக்களுக்குத் தீமைகளும் அவலங்களுமே மிகுதியாக ஏற்பட்டிருக்கின்றன. ஒரு சேரிக்கிராமமும் தபால்காரனின் மரணமும் என்ற கவிதையில்,

“மாசி பிறையடிக்கும்

ராத்திரிகள் சொல்லவேணும்

மசங்கலிலே விளையாடும்

மழைமேகம் சொல்லவேணும்

எழுத்துச் சுமைக்காரர்

எங்க ஊரு தபால்காரர்

எழுத்துமங்கும் சாயங்காலம்

எமனோடு போனதென்ன?

தரை அழுகும் பறைச்சேறித்

தரைமெழுகவந்ததுரை

தரைக்குள்ளே போனதென்ன

தனித்தூக்கம் ஆனதென்ன?

நீண்டசையும் மருதாணி

நிழல் எழுதும் எழுத்தாணி

எழுத்தாணி சாய்ந்தபின்னால்

எங்கும் வெளியில் வெள்ளெழுத்து” (கறுப்பு மலர்கள் ப.47)

என்று சேரிமக்கள் பாதிப்புக்குள்ளான நிலையைக் காட்டுகிறார்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

## முடிவுரை

இலக்கியத்தில் கருத்து என்பது இன்றியமையாத கூறாகும். சமூக நிகழ்வுகளையும், மனித உறவுகளையும் கற்பனை. உணர்ச்சி, உத்தி ஆகிய கூறுகளோடு தம் படைப்பில் கருத்து வளத்தை வெளிப்படுத்தியுள்ளார். கவிதை இன்றைய சமத்துவம், படைப்பாளர்களால் நாட்டுப்பற்று, பகுத்தறிவு, பொதுவுடைமை ஆகிய மொழியுணர்வு, கருத்துருக்கள் பொதுநிலையில் பேசப்பட்டு வருகின்றன. நா.காமராசன் கவிதைகள் வறுமை, தன்னம்பிக்கை, சமூக அவலம், அரசியல் நிலை, சாதிப்பாகுபாடு ஆகிய சமூகம் சார்ந்த செய்திகளைக் கவிதைகளில் பதிவுசெய்துள்ளார்.

## சான்றெண் விளக்கம்


1. பொன்மணி வைரமுத்து, சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள், சென்னை - 2002.
2. நா.காமராசன், கறுப்புமலர்கள், கவிதா பப்ளிகேசன்ஸ், பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 600 017, ஐந்தாம் பதிப்பு-2022.
3. மு.க. தமிழ்க் குடிமகன், பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள், அறிவொளி பதிப்பகம், 238, வடக்கு மாசிவீதி, மதுரை, முதற்பதிப்பு ஆகஸ்ட் - 1986.
4. ஈ.வே.ரா, சுயமரியாதைத் திருமணம் ஏன்?, திராவிடர் கழக வெளியீடு, சென்னை-1990.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# தொகையிலக்கியக் காலக் குடும்ப அமைப்பில் தந்தையும் மகளும்



ச. கண்மணி கணேசன் (ப.நி.),
முன்னாள் முதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி, சிவகாசி.

## முன்னுரை

தொகையிலக்கியத்தில் தந்தை, மகள் உறவுநிலை சார்ந்த விழுமியங்களை எடுத்துக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அக இலக்கியம் எங்கும் தந்தை பேசவுமில்லை; நேரடியாக இடம் பெறவுமில்லை. இந்நிலையில் தந்தைக்குக் குடும்ப அமைப்பில் இருந்த பங்கை அறிந்து கொண்டால் பண்டைத் தமிழ்ச் சமூக வரலாற்றைத் தெளிவாக வரைய இயலும் என்பதால் இவ்ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

சமூகவியல் கோணத்தில் அமையும் இக்கட்டுரைக்கு அகப் பாடல்களில் தலைவியைத் தந்தையோடு இணைத்துப் பேசும் பாடல்கள் சான்றுகளாக அமைகின்றன. புறச்செய்திகளும் உளவியல் கருத்துகளும் துணைநிலைச் சான்றுகளாக அமைகின்றன.

## உறவுநிலை வெளிப்படுமாறு

களவு கற்புக்காலங்கள் தொடர்பான நிகழ்வுகள், பின்புல வருணனை, உவமை ஆகியன தந்தை, மகள் உறவுநிலையை வெளிப்படுத்துகின்றன.

செவிலியிடம் தலைவியின் களவொழுக்கத்தை மறைக்கும் போதும் (அகம்.158); பகற்குறி (அகம்.80,308), இரவுக்குறி பற்றிப் பேசும் போதும் (நற்.98; அகம்.298); தாய்க்குத் தெரிந்தால் ஏற்படும் ஏதத்தை உரைக்கும் போதும் (நற்.317); பிரிவுக் காலத்தில் தலைவியின் விருப்பம் பற்றிச் சொல்லும் போதும் (ஐங்.6) தோழி கூற்றில் தலைவியின் தந்தை இடம் பெறுகிறான். மகள் தன் தோழியிடம் பகற்குறி (குறு.269), இரவுக்குறி குறித்துப் பேசும் போதும் (அகம்.370); அறத்தொடு நிற்க வற்புறுத்தும் போதும் (கலி.111) தந்தையைக் குறிப்பிடுவதால் தந்தை, மகள் பிணைப்பின் இறுக்கம் தெரிகிறது. அறத்தொடு நிற்க வலியுறுத்தும் போது தந்தை மதிப்புடன்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

சுட்டப்படுகிறார் (குறு.374). தலைவன் மாலையில் தன் காதலியைச் சந்திக்கத் திட்டமிடும் போதும் (நற்.204); உடன்போக்கில் அவளை மகிழ்விக்கும் போதும் (நற்.202, 362; அகம்.99) தந்தையுடன் சேர்த்தே குறிப்பிட்டுப் பேசுகிறான்.

ஆயத்துடன் விளையாடும் பரதவப் பெண்கள் மீன் வேட்டை முடிந்து வரும் திமில்களைக் காட்டி;

"எந்தை திமில் இது நுந்தை திமில் என" (நற்.331)

தம் தந்தை திமிலையும் பிறர் திமிலையும் அடையாளம் கண்டு சுட்டிப் பேசும் பின்புலத்தில் தந்தை சிறப்பிடம் பெறுகிறார்.

தந்தை உப்பு விற்கச் செல்லும் போது; சேற்றிலே சிக்கிய வண்டியை அரிதின் முயன்று இழுக்கும் பகடு போல் முனைந்தும்; மீள இயலாதபடி அவளது கண்கள் என் உயிரை நோகச் செய்கின்றன எனத் தலைவன் கூறுகிறான்.

"எவ்வம் தீர வாங்கும் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி"யும் (அகம்.140)

தவிர்க்க இயலாத தன் வருத்தத்தைத் தெரிவிக்க; தந்தையின் தொழில் அடிப்படையிலான உவமையைக் கூறுகிறான் தலைவன்.

### இனத்தோடு காட்டப்படும் அடையாளம்

பரதவர், குறவர், கிழார், ஆயர், உமணர், பாணர், வேளாண்மை செய்வோர் எனக் குறிப்பாகவோ; வெளிப்படையாகவோ தத்தம் இனத்தோடு அடையாளம் காணப்படும் தந்தையுடன் சேர்த்தே மகள் பேசப்படுகிறாள். தந்தை பற்றிய குறிப்புகள் வாழுமிடம், செய்யும் தொழில் ஆகியவற்றைத் தாங்கியுள்ளன. அப்பெருமைகள் எல்லாம் மகளுக்கும் உரித்தாக அமைகின்றன.

“தேன்நாறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை” (அகம்.58)

எனும் பின்புலத்தில் குறிஞ்சித் திணை சார்ந்த குறவர்குலத் தந்தை குளிர் காலத்தில் வீட்டின் உள்ளே புலித்தோல் படுக்கையில் தூங்குபவனாகக் காணப்படுகிறான். ‘அறுவடை தொடங்கி விட்டதால் தலைவி தினைப்புனம் காக்க வரமாட்டாள்; அவளைப் பகலில் சந்திக்க இயலாது’ என்று தலைவனுக்கு உணர்த்தும் தோழியின் கூற்றில்;

"தந்தை வித்திய மென்தினை" (நற்.306)

என்பது தந்தையின் தொழிலைச் சிறப்பிக்கிறது.

காட்டில் ஆடு மேய்க்கும் தந்தைக்குக் கறவைக்கலம் கொண்டு கொடுக்க வேண்டிய தன் கடமையை உணர்ந்து தலைவனிடம்;

“இனத்துளான் எந்தைக்குக் கலத்தொடு செல்வதோ” (கலி.108)

எனக் கூறுகிறாள் தலைவி. ‘உன் நெஞ்சை என் இருப்பிடமாகக் கொள்வது எப்படிச் சாத்தியம் ஆகும்? அப்படிக் கொண்டால் என் தந்தைக்குக் கறவைக்கலம் கொடுப்பது எப்படி?’ என்று வினவுபவளின் தந்தை முல்லை நிலத்து ஆயனாகிறான்.

தன் தந்தைக்கு ஆற்றில் பிடித்த வரால் மீனை வஞ்சி விறகில் சுட்டு ஊட்டும் காட்சியைப் பின்புலமாகக் காட்டும் பாடல்;

“நாரரி நறவுண்டு இருந்த தந்தைக்கு”ப் (அகம்.216)

பாசத்துடன் உணவளித்த பாணர்குல மகளைப் புனைந்துரைக்கிறது.

இரவுக்குறி நேரும் தோழி;

"நல்லோள் தந்தை சிறுகுடிப் பாக்கம்" (நற்.323)

பற்றித் தொடரும் போது அத்தந்தை பரதவன் எனத் தெளிகிறோம். தலைவன் சிறைப்புறமாக நிற்கத்; தலைவியுடன் பேசிக்; குறியிடத்தைத் தேர்வு செய்யும் தோழி; தந்தையின் பெருமை புலப்பட;

“பெருநீர் அழுவத்து எந்தை தந்த கொழுமீ”னை (அகம்.20)

‘வற்றலாக உணக்க நாங்கள் கடற்கரை மணல்மேட்டில் உள்ள புன்னை மரநிழலில் இருப்போம்’ என்று கூறுங்கால்; தந்தை கடலில் மீன் பிடிக்கும் தொழில் சிறப்பு பெறுகிறது. பரதவத் தந்தையின் பெருமை சுறாமீனைக் கொன்ற வினைத்திறன் என்பதைக்;

“கடும் சுறா எறிந்த கொடும்தாள் தந்தை” (நற்.392)

எனப் போற்றுவதால் அறிகிறோம்.

உப்பிற்கு மாறாகப் பெற்ற நெல்லைச் சோறாக்கி அயிலைமீன் குழம்பு ஊற்றி உண்ணக் கொடுக்கும் உமட்டியை;

“… தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் தடியோடு குறுமகள் கொடுக்கும்” (அகம்.60)

என்று பாடல் புனைவதால் அவளது தந்தை உமணன் ஆகிறான்.

உடன்போனவளைத் தேடி அலையும் தாய்;

"கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பின்" (அகம்.145)

‘செல்வ வாழ்க்கையும்; நடந்தால் கூட அடி வருந்தும் மென்மையும் கொண்ட மகளைக் கோலால் முதுகில் நையப் புடைத்தேனே’ என்று தன்னையே நொந்து கொள்கிறாள். இங்கே ‘கூழுடைய தந்தை’ என்பதால் அத்தந்தை கிழான் என்று குறிப்பாக அறிய

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

முடிகிறது. கிழார் பாரம்பரியமாகப் புன்செய் வேளாண்மை செய்பவர் என்ற கருத்து இக்கட்டுரை ஆசிரியரால் ஏற்கெனவே நிறுவப் பெற்றது (ச.கண்மணி கணேசன், "பாடல் பெற்ற கிழார்கள்", Journal of Valartamil, Vol.1 No.2, 2020. pp.13-24)

வேளாண்மையால் செல்வந்தன் ஆன தந்தையை; 'ஏர்கெழு செல்வத்து எந்தை' (அகம்.282) என அடையாளம் காட்டி; 'எதிர்ந்தனன் கொடையே' என்று மகள் விரும்பிய தலைவனுக்கே அவளை மணமுடிக்கச் சம்மதித்தான் என்கிறாள் தோழி.

**தந்தையும் மகளும் ஒருவருக்கு ஒருவர் அடையாளம் ஆதல்**

ஒரு மகளுக்குரிய அதிகாரபூர்வ அடையாளமாக அவளது தந்தையே இருந்தார். மகள் வளர்ந்த வீடும் ஊரும் 'தந்தையின் மனை' என்றும்; 'தந்தை ஊர்' என்றும் அழைக்கப்பட்டன. ஒரோவழி மகள் தந்தையை அடையாளப்படுத்துவதையும் காண இயல்கிறது.

தலைவியைக் கண்டு காதல் வயப்படும் தலைவன்,

"யார் மகள்கொல் இவள் தந்தை வாழியர்" (நற்.8)

என்று வாழ்த்துவது தலைவியைப் பெற்றவனின் சிறப்பையும் அவளது வாழ்வில் தந்தை பெறும் முதன்மையையும் புலப்படுத்துகிறது.

தொகையிலக்கியக் காலச் சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயம் ஆதலால்; குடும்பத் தலைவனாகிய தந்தையே குடும்பத்தில் முதன்மை பெறுகிறான். தலைவி வளர்ந்தவீடு 'தந்தையின் மனை' எனப்படுகிறது. தலைவி தலைவனோடு செல்லும்போது;

"… நுந்தை
மனைவரை இறந்து வந்தனை" (நற்.362)

என்கிறான் தலைவன். இன்று வழங்கும் 'தாய்வீடு' என்ற தொடரைக் காண இயலவில்லை.

குறிஞ்சி சார்ந்த தலைவியின் வேங்கைப்பூ உதிர்ந்த வீட்டுமுற்றம்;

"… எந்தை வேங்கை வீஉக விரிந்த முன்றில்" (நற்.232)

எனப்படுவதால் தந்தையே மகளின் முகவரி ஆகிறான்.

தலைவியது ஊரைச் சுட்டும் முறையிலும் அதே நடைமுறை புலப்படுகிறது. உடன்போன மகளைப் பிரிந்த சோகம் தீராத தாய்; தான் தேடிச் சென்ற சுரத்தின் இடைவழியில் இன்னொரு இணையரான தலைமக்களைப் பார்த்தவுடன்; தன்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

மகளை ஒத்த அப்பெண்ணை அவள் காதலனுடன் அழைத்து வந்து விருந்து உபசரிக்கிறாள். தன் மகளது,

"தந்தை தன்ஊர் இதுவே" (நற்.198)

என அறிமுகப்படுத்தும் போது மகளுக்குரிய முகவரி தந்தையே என்பது மீண்டும் உறுதியாகிறது.

"கவின்பெறு சுடர்நுதல் தந்தை ஊரே" (ஐங்.94)

என்று தலைவன் சொல்வதும் தலைவிக்குரிய அடையாளமாக அவளது தந்தையையே கூறுகிறது. தலைவியிடம் பேசும் போது; அவளது தந்தை திட்டவட்டமாகப் பெண் கொடுக்கச் சம்மதிப்பாரெனின்;

"நுந்தை நும் ஊர் வருதும்" (ஐங்.92)

எனத் தந்தையின் மனநிலை அறிய ஆவலுறுகிறான்.

ஐயையின் தந்தை தித்தன் எனும் வரலாற்று செய்தி,

"இழையணி பணைத்தோள் ஐயைத் தந்தை
மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்" (அகம்.6)

எனும் பாடலடிகளில் உள்ளது. இது உறந்தையை ஆண்ட குறுநில மன்னன் பற்றியது. இங்கு மகள் தந்தைக்கு அடையாளம் தருவது நோக்கற்குரியது.

**தந்தை மகள் கடமைகள்**

மகள் பாதுகாக்கப்பட வேண்டியவளாக இருந்தமை குறித்துத் தந்தையரிடையே இருவேறு நிலைகளைக் காண இயல்கிறது. மகளது திருமணத்தைத் தந்தை முடிவுசெய்தான். மகளின் ஆசையை நிறைவேற்றவும்; நல்வாழ்வு அமைத்துத் தரவும் பொறுப்பேற்றான். தந்தையின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டியது தன் பொறுப்பு என மகள் உணர்ந்து இருந்தாள்.

செல்வந்தன் தன் மகளைக் காத்து நிற்பதே முதன்மைக் கடப்பாடு என இருந்தான்.

"... தந்தை
அருங்கடி காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை" (அகம்.2)

எனத் தோழி தலைவனிடம்; 'இரவுப்பொழுதில் தந்தையின் காவலர் சோர்ந்து இருக்கும் நேரத்தில் வரவேண்டும்' என அறிவுறுத்துகிறாள். தந்தையின் காவலை

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

மீறித் தன் காதலியை இரவுக்குறியில் சந்தித்தமை தலைவனுக்குப் பெருமிதத்தைக் கொடுக்கிறது.

"அருங்கடிக் காவலர் இகழ்பதம் நோக்கிப்
பனிமயங்கு அசைவளி அலைப்ப தந்தை
நெடுநகர் ஒருசிறை நின்றனென்" (அகம்.162)

என்று தனது தீரச்செயலாகவே; தலைவியைச் சந்தித்த நிகழ்வைத் தலைவன் வருணிக்கிறான். நள்ளிரவில் பனிக்காற்றில் நடுங்கி; காவலர் சேரும் நேரத்திற்குக் காத்திருந்து; தலைவியது தந்தையின் மாளிகைப் புறத்தில் நின்றதை மனக்குறை ஏதுமின்றிச் சாதனையாகக் கூறுகிறான்.

செவிலியிடம் அறத்தோடு நிற்கும் தோழி,

"நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி"க் (குறி.அ.20)

தலைவி தலைவனுடன் கொண்ட களவொழுக்கம் பால்வயத்தான் தந்தையின் காவலை மீறி நிகழ்ந்தது என்று கூறிடினும்; தந்தையின் செல்வவளத்தையும், மகளைக் காக்கும் பொறுப்புணர்வையும் உடன்சேர்த்துச் சுட்டுவது நோக்கத்தக்கது.

மகட்போக்கிய தாயின் வாய்மொழியில்; தன்மகள் நற்பெயர் பெற்ற தந்தையின் அரிய காவலைக் கடந்து; என்னையும் நினைக்காமல்; தோழியரையும் பிரிந்து எவனோ ஒருவனுடன் சென்று விட்டாளே எனும் புலம்பல் வெளிப்படுகிறது.

"நெடுமொழித் தந்தை அருங்கடி நீவி" (அகம்.17)

என்ற பாடலடி தந்தையின் புகழையும், மகளை அவன் காத்த பொறுப்பையும் ஒருங்கு சொல்கிறது.

புன்செய் வேளாண்மை செய்த தந்தையர் தேவைக்கேற்ப மகளை அனுப்பித் தினைப்பயிரைக் காத்தனர்; ஏவல் கொண்டனர்.

"எந்தை வந்து உரைத்தனனாக அன்னையும்" (நற்.206)

சேர்ந்து தம்மைப் புனக்காவலுக்கு அனுப்பியதாகத் தான் தோழி தலைவனிடம் உரைக்கிறாள். அறுவடைக்காலத்தில் தலைவி வீட்டில் பாதுகாப்புடன் இருக்க வேண்டி வரும் என்பது தொடரும் செய்தியாகும். தந்தை தினைப்புனம் காக்கச் சொன்னமையை நற்.134இல் சொல்கிறது.

பாணர் குலத்தந்தை மகள் பாதுகாப்பைக் கடனாகக் கொண்டமை;

"அருங்கடி அயர்ந்தனன் காப்பே எந்தை" (நற்.295)

என்ற ஔவையாரின் பாடலடியில் புலனாகிறது.

தலைவியின் காதலொழுக்கம் அறிந்து தந்தையும் தமையன்மாரும் தீர விசாரித்துச் சம்மதித்ததைத் தலைவியிடம் தெரிவிக்கிறாள் தோழி.

"பொய்யில் பொதுவர்க்கு
அடைசூழ்ந்தார் தந்தையொடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு" (கலி.107)

எனத் திருமணம் உறுதி செய்யப்பட்டதைக் கூறும் சொற்கள்; அந்நிகழ்வு அடைக்காய் என்று அழைக்கப்படும் பாக்கு வெற்றிலையோடு ஈராயிரம் ஆண்டுக் காலமாக நடைபெறுவதையும், அதைத் தந்தை முன்னின்று நடத்தினார் என்பதையும் புலப்படுத்துகின்றன. தந்தை தன் மகளை மணம் செய்து கொடுக்க உடன்பட்டமை குறித்துப் பேசும் பிற பல பாடல்களும் உள (கலி.41,107; குறு.51).

உடன்போகும் முன் தலைவனோடு தான் கொண்ட நட்பு தன் வாழ்வின் திசையை மாற்றப் போகிறது என்று புரிந்த பொழுது; தன்னால் தந்தையின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படப் போவதை எண்ணி வருந்துகிறாள் மகள்.

"பெரும்பெயர் எந்தை அருங்கடி நீவித்" (அகம்.268)

தானெய்திய கேண்மையால் பழி ஏற்பட இருக்கும் கவலையில் சோர்கிறாள் தலைவி. தன் கடமையில் தவற நேர்ந்ததே தலைவியின் சோர்வுக்குக் காரணமாக அமைகிறது.

**தந்தையின் பெருமைகள்**

தலைவியின் தந்தைக்குச் செல்வம் முதல் பெருமை ஆகும். அச் செல்வத்தைப் பலருக்கும் ஈந்து நற்பெயர் பெற்றான். பங்காளிகளை எல்லாம் தாங்கி வீரம் மிகுந்தவனாகவும் இருந்தான்.

பிறந்த வீட்டில் தலைவி ஆடம்பரத்துடன் வாழ்ந்தாள் என்று சொல்லித் தொடரும் போது தந்தையின் பெருமைக்குச் செல்வமே காரணம் என உணர இயல்கிறது (கலி.57). காதல் வயப்பட்ட தலைவன் தன் காதலியின் இளமை நலமும், செல்வச் செழிப்பும் பற்றித் தனக்குள் பேசிக் கொள்ளும் போது;

"பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்து" (நற்.140)

பந்தாடும் பருவத்தையும், செல்வத்தின் அடையாளமாக வளமனை முற்றத்தில் இருந்த தேரையும் காட்சிப்படுத்துகிறான். தோழியிடம் உடன்போக்கிற்கு மறுக்கும்போது,

"பெரும்பெயர் தந்தை நீடுபுகழ் நெடுநகர்" (நற்.162)

என மாளிகை வாழ்வும், தந்தையின் நற்பெயரும் அவளுக்குரிய பெருமைகள் என எடுத்துச் சொல்லித் தலைவன் தயங்குகிறான். பாங்கனிடம் தான் விரும்பும் தலைவியின் பெருமை பேசும்போதும் உண்ண மறுத்து ஓடி ஒளிந்து தாயை அலைக்கழிக்கும் அவளது;

"செல்வத் தந்தை இடனுடை வரைப்பின்" (நற்.324)

வளமான வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது.

"தந்தை அல்குபதம் மிகுந்த கடியுடை வியனகர்" (அகம்.49)

என்ற தாயின் மொழி வயிற்றுப்பசிக்கு வாய்ப்பில்லாத செல்வமுடைய தந்தையைத் தான் நமக்குக் காட்டுகிறது.

"...இவள்தந்தை

காதலின் யார்க்கும் கொடுக்கும் விழுப்பொருள்" (கலி.61)

என அவன் புகழப்படுகிறான். தலைவியின் ஊரைப் பாங்கனுக்கு அறிமுகம் செய்யும் தலைவன்; அந்தணர்க்கு 'நீரோடு சொரிந்து ஈந்த பின்னர் எஞ்சிய பொருளுடன் சோற்றையும் எல்லோர்க்கும் தரும் பெருமையன்' என்கிறான் (குறு.233).

"முளையணி மூங்கிலிற் கிளையொடும் பொலிந்த

பெரும்பெயர் எந்தை" (அகம்.268)

எனப் போற்றுங்கால் மூங்கில் முளைகளைப் போல் பல கிளைகளைக் கொண்ட குடும்ப அமைப்பு புரிகிறது.

"அஞ்சாயோ இவள் தந்தை கைவேலே" (ஐங்.60)

என்று தலைவனிடம் தோழி கேட்பது தந்தையின் பெருமைக்குக் காரணமான வீரத்தை அவன் கைவேலால் அடையாளம் காட்டுகிறது.

**தந்தைமகள் உறவும் செல்வமும்**

திருமணத்தின் போது தந்தை மகளுக்குப் பொன்நகை போட்டு அனுப்பும் வழக்கம் ஈராயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்ததாக இருக்க; புகுந்த வீட்டில் இருந்துகொண்டு தந்தையின் செல்வத்தை வாங்குவது கணவனுக்குப் பெருமை சேர்க்காது என்ற கொள்கையும் நிலவியது.

தன் தந்தை தனக்குச் செய்து கொடுத்த வளையலும் ஆரமும் இன்னொரு பெண்ணை அலங்கரித்து இருப்பதைக் கண்டவுடன் (பரி.20) 'இவை உனக்குக் களவு வழியில் வரவில்லை எனில்; இவற்றைத் தந்தவனை எனக்குக் காட்டு' என்கிறாள் தலைவி. பரத்தையைக் குறி வைத்த அவளது கேள்வியில் ஒரு மகளது வாழ்க்கையில் தந்தை பெற்றிருந்த சிறப்பிடம் புலனாகிறது.

இல்லறத்தில் ஈடுபடும் தலைவியின் குடும்பம் வறுமையில் வாடும் போது அதைத் தந்தையின் செல்வவளத்துடன் முரண்படுத்திக் காட்டி;

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்

கொடுத்த தந்தை கொழுஞ்சோறு கொள்ளாள்" (நற்.110)

என்று பாடும் பகுதி நோக்கற்குரியது. தந்தை கொடுத்தனுப்பிய வளமிகு உணவை ஏற்க மறுத்த போக்கு மணவாழ்விற்குப் பெருமை சேர்ப்பதாக இப்பாடலில் தொனிக்கிறது.

**தந்தைமகள் ஈர்ப்பு**

உளவியல் வல்லுநர் தந்தைக்கும் மகளுக்கும் இடையே இயல்பாக எழும் பாசப்பிணைப்பு பற்றிக் கூறி உள்ளனர் "Fathers and daughters share a unique bond" என்கிறார் ஜே ஹில். (The Role a Father Plays in His Daughter's Life, https://www.lifehack.org/588520/the-father-daughter-relationship-how-he-affects - her - life). இயற்கையான இவ் உந்துதலைப் பாடல்கள் அழகுறக் காட்டுகின்றன.

மகளின் வளர்ப்பில் தந்தை பெருஞ் சிறப்பு பெற்றிருந்தார். தன் செல்லமகள் தரையில் நடந்தால் கூடத் தாங்கமாட்டாமல் 'தரையில் நடக்கிறாயே! கால்கள் சிவந்து விடும்' என அங்கலாய்க்கும் தந்தையது அன்பின் ஈர்ப்பைத் தோழி தலைவனிடம்;

"எந்தையும் நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவனில குறுமகள் இயங்குதி என்னும்" (அகம்.12)

என உரைக்கிறாள். அதனால் 'உடன்போக்கு வேண்டாம்; பெண்கேட்டு வந்து மணந்து கொள்' எனத் தூண்டுகிறாள்.

மகட்போக்கிய தாய் குழந்தைப் பருவத்தில் அவளை உண்ண வைக்கத் தான் விடாது முனைந்தக்கால் 'தந்தை பங்கிற்கு இதை உண்' என்று வற்புறுத்தியமை பற்றிக் கூறுகிறாள் (அகம்.219). மகளின் வளர்ப்பில் தந்தை பெறும் சிறப்பைத் தாயின் வாய்மொழி தெளிவாக்குகிறது.

தந்தை மகள் பாசம் புறச்செய்தியிலும் இடம்பெற்றுள்ளது. குழந்தை பாலுண்ண மறுக்குங்கால் சிறு கோலால் ஓச்சும் பாசமிகு தந்தையின் செயலைப் பொன்முடியார் வருணிக்கிறார் (புறம்.310).

மணமுடிக்குமுன் செல்லமகள் தந்தையிடம் நகை கேட்டுக் கொஞ்சுவது உண்டு. மகள் விருப்பப்படி தந்தை நகை செய்து போட்டு மகிழ்வது உண்டு. சங்கு வளையல் கேட்டு அழுத மகளுக்குத் தந்தை செய்து போட்ட பொற்றொடி அவள் தன் கணவனைப் பிரிந்து இருந்தக்கால் புறத்தார் இவளது தோள்மெலிவை உணரா வகையில் உதவியது என்று நற்றங்கொற்றனாரின் பாடல் சித்தரிக்கிறது (நற்.136).

தன் தந்தையின் தகுதியைப் பெருமைபட எண்ணுவதும்; தன்னால் அவரது நற்பெயருக்குக் களங்கம் நேரக் கூடாது என்று பதறுவதும்; தனது ஒழுக்கம் களவு

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

சார்ந்தது எனினும்; அவரது மனம் குளிர்ந்து நிறைவுற வேண்டும் என எதிர்பார்ப்பதும் மகளின் இயல்பாகக் காணப்படுகிறது.

களவுக்காலத்தில் பிரிந்து இருக்கும் தலைவனை எண்ணி ஆற்றி இருக்கும் தலைவி ஆற்றோடு பேசுகிறாள். 'என் விருப்பத்திற்கு உரிய காதலனின் மலையிலிருந்து உன்னைப் பூவால் மறைத்துக் கொண்டு வருகிறாய். ஆரியரின்,

"பொன்படு நெடுவரை புரையும் எந்தை
பல்பூங் கானத்து அல்கி இன்று இவண்" (அகம்.398)

'வேங்கை மரநிழலில் தங்கி; மழை பொழியப் பெருகிப் பின்னர்ச் செல்வாயாக' என்கிறாள். தன் தந்தையின் காடு இமயமலைக் காட்டை ஒத்தது என்னும் பெருமிதம் அவள் பேச்சில் விஞ்சி நிற்கிறது. திருமணத்திற்குப் பின் தன் வீட்டு முற்றத்தில் நிற்கும் பலா மரத்துக் கனிகளைக் குரங்குகள் உண்ணாதபடி அங்கே இருந்து உரலில் குற்றும் கொடிச்சியின் உலக்கைப்பாட்டு அவளது தந்தையின் மலை பற்றியது.

"தந்தை மைபடு நெடுவரை பாடினள்" (நற்.373)

எனும்போது தந்தைபால் அவளுக்கு இருந்த அன்பின் தொடர்ச்சி வெளிப்படுகிறது.

களவுக்காலக் கேண்மையில் தலைவனை நன்கு புரிந்து கொண்டு,

"கொள்ளாது போகாக் குணன் உடையன் எந்தை தன்" (கலி.61)

'மனம் குறைவுறாதபடி வேண்டுவன கொடுத்து; என்னைக் கைப்பற்றாமல் போக மாட்டான்' என்கிறாள். நினைத்ததைச் சாதிக்கும் அவனது பண்பைப் பற்றித் தோழியிடம் பேசுங்கால்; காதலனின் பெருமைமிகு பண்பால் தந்தை மனம் குளிரும் என்ற எதிர்பார்ப்புடன் தலைவி பேசுகிறாள்.

அகப்பாடல்களில் விரவிக் கிடக்கும் பண்டைத்தமிழகப் புறச் செய்திகளில் தந்தைக்காக மகள் செய்த போரும் பெற்ற வெற்றியும் ஆவணமாகி உள்ளன. அன்னி மிஞிலியின் வரலாறு அவள் தந்தை மேல் கொண்டிருந்த பாசம், மனஉறுதி, வீரம் ஆகியவற்றைக் காட்டுகிறது. கோசர் இரக்கமின்றித் தன் தந்தையின் கண்களைப் பிடுங்கி விட்டதால் (அகம்.262) அவள் வஞ்சம் கொண்டு பழி தீர்த்துக் கொண்டதை,

"... தந்தை
கண்கவின் அழித்த தன் தப்பல் தெறுவர" (அகம்.196)

எனக் கூறியவழி அறிகிறோம்.

**முடிவுரை**

தலைவியைத் தந்தையோடு இணைத்துப் பேசும் பாடல்கள் தொகையிலக்கியக் காலக் குடும்பத்தில் தந்தைமகள் இடையே நிலவிய நுட்பமான பாசப் பரிமாற்றம்,

கடமை, பொறுப்பு ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டித்; தந்தையே மகளின் அதிகாரபூர்வமான அடையாளம் என எடுத்துரைக்கின்றன. பரதவர், குறவர், கிழார், ஆயர், உமணர், பாணர், வேளாண் தொழிலில் ஈடுபட்டோர் எனக் குறிப்பாகவோ; வெளிப்படையாகவோ தத்தம் இனத்தோடு அடையாளம் காணப்படும் தந்தையுடன் சேர்த்தே மகள் பேசப்பட்டாள். தந்தை பற்றிய குறிப்புகளில் இடம்பெறும் வாழுமிடம், செய்யும் தொழில், சார்ந்த இனம் ஆகியவற்றால் பெற்ற பெருமைகள் மகளுக்கும் உரிய அடையாளங்களாக அமைகின்றன. ஆணாதிக்கச் சமுதாயம் ஆதலால்; மகள் வளர்ந்த வீடும் ஊரும் 'தந்தையின் மனை' என்றும்; 'தந்தை ஊர்' என்றும் அழைக்கப்பட்டன. மகள் தந்தையால் பாதுகாக்கப்பட வேண்டியவளாக இருந்தாள். புன்செய் வேளாண்மையில் தந்தை தேவைப்படும் பொழுதெல்லாம் மகளைக் காவல் காக்க அனுப்பினான். செல்வமும் அதை ஈதலும் கிளை தாங்கலும் தந்தையின் பெருமைகளாம். பரதவத் தந்தையின் பெருமை சுறாமீனைக் கொல்லும் வினைத்திறன் ஆகும். தலைவியின் உடன்போக்கு தந்தைக்குப் பழி ஏற்படுத்தியது. திருமணத்தின் போது தந்தை தன் மகளுக்குப் பொன்நகை போட்டு அனுப்பினார். மண உறுதியைப் பாக்கு வெற்றிலையோடு தந்தை முன்னின்று நடத்தினார். புகுந்த வீட்டில் வாழ்ந்து கொண்டு தந்தையின் செல்வத்தை வாங்குவது கணவனுக்குப் பெருமை சேர்க்காது என்ற கொள்கை நிலவியது.

**துணைநூற் பட்டியல்**

1. அகநானூறு களிற்றியானை நிரை, முதல்பதிப்பின் மறு பதிப்பு 2009. கழக வெளியீடு, சென்னை.

2. அகநானூறு மணிமிடைபவளம், முதல்பதிப்பின் மறுபதிப்பு 2007. கழக வெளியீடு, சென்னை.

3. அகநானூறு, நித்திலக்கோவை, 2008. கழக வெளியீடு, சென்னை.

4. ஐங்குறுநூறு, முதற்பதிப்பின் மறுபதிப்பு- 2009, கழக வெளியீடு, சென்னை.

5. கலித்தொகை, முதல்பதிப்பின் மறுபதிப்பு- 2007- கழக வெளியீடு, சென்னை.

6. குறுந்தொகை- 2007, கழக வெளியீடு, சென்னை.

7. நற்றிணை, நாராயண சாமி ஐயர் (உ.ஆ.), 2007, கழக வெளியீடு, சென்னை.

8. பத்துப்பாட்டு தொகுதி ii, 2008. கழக வெளியீடு, சென்னை

9. பரிபாடல், பொ.வே.சோமசுந்தரனார்(உ.ஆ.), கழக வெளியீடு -2007.

10. புறநானூறு பகுதி -II, கழக வெளியீடு, சென்னை. முதல்பதிப்பின் மறுஅச்சு - 2007.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

11. Jay Hill, "The Role a Father Plays in His Daughter's Life", https: // www.lifehack.org/588520/the-father-daughter-relationship-how-he-affects-her-life

12 ச.கண்மணி கணேசன், "பாடல் பெற்ற கிழார்கள்", Journal of Valartamil, Vol.1 No.2, 2020. pp.13-24

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# கட்டுரையாளராக - வ.சுப.மாணிக்கம்



முனைவர் **வா.வெ.கோவிந்தம்மாள்**
உதவிப் பேராசிரியர்,
சாரதா கங்காதரன் கல்லூரி,
புதுச்சேரி - 605004.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் அவர்கள் எளிமையின் உருவமாக, புலமையின் இயக்கமாக, வரம்பில்லாப் பெருமை கொண்டவர். இவர் தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், கம்ப இராமாயணம், பாரதீயம் ஆகியவற்றில் தனித்த ஈடுபாடு கொண்டவர். இந்நூல்களின் தாக்கத்தாலும், மக்களிடையே வழங்கி வந்த வாய்ச்சொற்களின், வழக்குச்சொற்களின் தாக்கத்தாலும் பல கட்டுரைகளைப் படைத்துள்ளார். இக்கட்டுரைகளின் தொகுப்பான, "தொல்காப்பியப் புதுமை" என்ற நூலினைப் பற்றிய ஒரு பருந்துப் பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

**நூல் அமைப்பு**

இந்நூலில் தொல்காப்பியப் புதுமை, தொல்காப்பியன்: ஒரு மொழியறிஞன், தமிழ் முதல் நூல், காவியப் பேச்சு, சாத்தனார், தியாகம், அழகியல், மணிநாவொலி, பாவம், அருஞ்சொற்கள், வாழ்க்கைத் துணை, பாரதியின் புலமை, பாரதியின் பழமை ஆகிய பொருண்மைகளில் எழுதப்பட்ட பதிமூன்று கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவை 1945 முதல் 1958 வரை பல்வேறு காலங்களில் எழுதப்பட்டவை. கட்டுரைகளின் வரலாறு நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

**தொல்காப்பியப் புதுமை**

இக்கட்டுரையில் கலித்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதியார் பாடல்கள் ஆகியவற்றில் தொல்காப்பிய நூற்பாக்கள் எந்தெந்த இடங்களில் பொருந்தி வந்துள்ளன என்பதைச் சுட்டியுள்ளார். மேலும் தொல்காப்பியத்தை இக்காலத்தோடு பொருத்தி ஆராய்ந்து, இன்றும் என்றும் கொள்ளத்தக்க அடிப்படைப் புதுமைகளையும், அதன் நிலைப்பாட்டையும் கூறியுள்ளார்.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என்ற தொடர் தமிழ்நாட்டின் எல்லைக் கிளர்ச்சிக்கு இலக்கிய முதற்சான்றாக நிற்கின்றது எனக் கூறியுள்ளார். மக்கள் இயல்பில் சிதைத்துப் பேசும் மரூஉச் சொற்களுக்கும் இலக்கணம் கூறும் தமிழ் மொழியில் வகர மெய் ஈறான சொற்கள் நான்கே எனக் கூறுவதால் தொல்காப்பியரை 'தமிழ் அளந்த பெருமாள்' எனச் சிறப்பித்துக் கூறுகிறார்.

மேலும் கார்டுவெல் முதலாய மொழி நூலறிஞர்கள், உயர்திணை, அஃறிணை என்ற பொருட்பிரிவு தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ளது என உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளனர். இதனை,

"உயர்திணை என்மனார்மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார்அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே" (தொல்:484)

இந்நூற்பா மனிதவுடம்பெடுத்தும் அதற்கேற்ற ஒழுக்கமில்லாதவர் மக்களாக மதிக்கப்பட மாட்டார் என்பது குறிப்பு. மேலும் எனது மாடு, எனது வீடு என்பதுபோல எனது மக்கள், எனது மனைவி என 'அது' என்னும் வேற்றுமை உருபு சேர்த்து வழங்குவதைத் தவிர்த்து,

"அதுவென் வேற்றுமை உயர்திணை தொகைவயின்
அதுவென்உருபுகெடக்குகரம் வருமே" (தொல்:577)

என்ற சூத்திரப்படி என் மக்கள், என் மனைவி எனத் தொகுத்தோ அல்லது எனக்கு மக்கள், எனக்கு மனைவி என விரித்தோ நடைமுறையில் பயன்படுத்துங்கள் எனக் கூறியுள்ளார்.

**தொல்காப்பியன் ; ஒரு மொழியறிஞன்**

இக்கட்டுரையில் மொழி வழக்கை அடிமுதலாக வைத்து விதி செய்யும் இலக்கணமே சிறப்புக்குரியது. அது இன்றும் நின்று நிலைப்பதற்குக் காரணம் அதன் நல்லடிப்படையாகும். வகர மெய் ஈறான சொற்கள் நான்கே, ஞகர மெய்யீறாகும் சொல் ஒன்று, அளவுப் பெயரினும் நிறைப் பெயரினும் வரும் மொழி முதல் எழுத்துகள்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

ஒன்பது எனச் சொல்வரம்பு பல காட்டுபவர் தொல்காப்பியர். செய்யுள் வழக்கு, உலக வழக்கு என இரு வழக்குகளையும் நிகராக மதித்த மொழியறிஞர்.

"கடிசொல்லில்லை காலத்துப் படினே" தொல்:934)

இந்நூற்பா சொற்கள் அவ்வக்காலத்து வழக்கில் இறப்பின் அவை காக்கப்படுதலில்லை. சொற்கள் அவ்வக்காலத்து வழக்கில் தோன்றின் அவை தள்ளப்படுதல் இல்லை என்ற இரு பொருளும் உணர்த்துகிறது. வாழ்க்கையில் செல்வம் வரும் போகும் ஆதலால் இரு வினைகளையும் ஏற்றுக்கொள்பவன் மெய்யறிஞன். அதுபோல ஒரு மொழியில் சொற்செல்வம் வரும் போகும் ஆதலால் இரண்டிற்கும் இடங்கொடுக்க வேண்டும் என்று வழக்காடுபவன் மொழியறிஞன் என விளக்கியுள்ளார்.

**தமிழ் முதல் நூல்**

தமிழ் முதல் நூல் தொல்காப்பியமாகும். இதைப் படித்த பின், திருக்குறள் முதலான தமிழ் நூல்களைக் கற்பார் அழுத்தமான புதிய அறிவு விளக்கம் பெறுவர். தொல்காப்பியம் தனக்குப் பின்தோன்றிய தமிழ் நூல்களை ஆட்சி செய்திருக்கின்றது. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப இராமாயணம், பாரதியார் பாடல்கள் இவற்றில் தொல்காப்பியத்தின் தாக்கத்தைச் சான்றுகளோடு விளக்கியுள்ளார்.

**காவியப் பேச்சு**

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப இராமாயணம் ஆகிய காவியங்களில் காவிய மாந்தர்களின் பேச்சு பின்பு நடக்கக் கூடிய நிகழ்ச்சியை முன்பே உணர்த்துவதாகக் காணப்படும் பாடல்களைச் சுட்டிக் காட்டுகிறார். இதன்மூலம் உலகப் பேச்சு காவியப் பேச்சிற்கு அடிப்படை என்றும், தமிழ்க் காப்பியம் உலக வழக்கோடு ஒட்டியது என்றும் உணர்த்துகிறார்.

**சாத்தனார்**

நம் பழந்தமிழ் மக்கள் தொழிற்கல்வியும் புலமைக்கல்வியும் ஒருசேரப் பெற்றிருந்தார்கள். சாத்தனார் பாடியது மணிமேகலை என்ற காப்பியம். இவர் சங்கப் புலவர்க்கும், திருவள்ளுவர்க்கும் பின்பு தோன்றியவர். இவர் மதுரை என்ற ஊரில் தானியங்கள் விற்கும் வணிகர். இதைச் சிலப்பதிகாரப் பதிகத்து வரும் 'மதுரைக் கூலவாணிகன் சாத்தன்' என்ற தொடரால் அறியலாம். வழக்கு நடையும், கற்பனை நடையும் கலந்த நூல் மணிமேகலை. இவ்விரு வகை நடையும் விரவி வந்த இலக்கியங்களே விளக்கமும் சுவையும் பயக்கும். இந்நூல் ஒரு தனி மனிதனுக்கும்,

ஒரு தனி நாட்டிற்கும், உலகம் முழுவதற்கும் நலம் தரும் அறங்களை நெஞ்சிற்பதியும்படி திறம்படச் சொல்லுகின்றது. நூலின் தொடக்கத்து,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க"

என்று உயர்ந்த குறிக்கோளை உலகம் கொள்ளக் காட்டுகின்றது. மேலும் மக்களுக்குக் கீழ்மையைத் தரும் என்று மதுவொழித்தலை,

"மயக்குங்கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்"

என்று விளக்கித் தண்ணீராகக் கள்ளைக் குடித்த நாகர்களை மது விலக்கும்படி செய்தான் சாதுவன். இது மணிமேகலை காட்டும் சீர்திருத்தக் காட்சி. பிறப்பில் வேற்றுமையில்லை என்று இன்று நாம் பேசுவது சாத்தனார் காலத்துப் பேசிய பழம் பேச்சே. அந்தணர்கள் ஆபுத்திரனைப் பசுவுக்குப் பிறந்தான் என்றும், தீயொழுக்கமுடைய ஒருத்திக்குப் பிறந்தான் என்றும் இழித்துரைத்தார்கள்.

"ஆவோடு வந்த அழிகுல முண்டோ
சாலிக்கு உண்டோ தவறு"

என்று சான்று காட்டிப் பிறப்பில் மக்கட்கேயன்றி எவ்வுயிர்க்கும் உயர்வு தாழ்வில்லை என்று ஆபுத்திரன் நிலை நிறுத்தினான். இது மற்றொரு சீர்திருத்தம். மேலும் உயிரினுஞ் சிறந்த ஒழுக்கம் நிலைபெறப் பரத்தை ஒழிப்பும் வேண்டும் என்று ஒரு புதிய அறம் காட்டுகிறது. இவ்வாறு வாழ வேண்டியவற்றையும் ஒழிய வேண்டியவற்றையும் உலகம் உய்ய எடுத்துக் காட்டும் புலவர் பெருமான் சாத்தனார் எனக் கூறியுள்ளார்.

**தியாகம்**

தியாகத்திற்கு விளக்கம் தருகிறார். 'பசிப்பிணிக்குச் சோறும், வறுமையுடையவனுக்குச் செல்வமும் கொடுப்பதே தியாகம்' என வள்ளுவர் கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் கோவலன் உடல், பொருள், உயிர் என்ற மூன்றையும் வழங்கும் வாய்ப்பு பெற்றவன்.

"மையிருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்
பிடர்த்தலையிருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிறடக்கிய கருணை மறவ."

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

"அஞ்சல் உன்தன் அருந்துயர்களைகேன்
நெஞ்சுறு துயரம் நீங்குக."
"கட்டிய பாசத்துக் கடிதுசென்றெய்தி
என்னுயிர் கொண்டீங்கு இவனுயிர்தா"

இவ்வடிகளில் வறியவர் உடல்(முயற்சி) கேட்பின் உடல் கொடுத்தல், பொருள் இரப்பின் பொருள் வழங்கல், உயிர் வேண்டின் உயிர் துறத்தல் என எதனால்தன் துன்பம் நீங்கும் என்று யார் எதனைக் கேட்கிறாரகளோ அதனை விட்டுக் கொடுத்து அவர் துன்பத்தைத் தொலைப்பதுதான் தியாகம். இதைச் செய்தவன் கோவலன்.

வேந்தன் கோப்பெருஞ் சோழனோடு அவன் மக்கள் இருவரும் அரசுபற்றிப் போர் தொடுத்தனர். தந்தையும் விடாப்பிடியனாய் மக்களை எதிர்த்து நின்றனன். இந்நிலை கண்ட புலவர் எயிற்றியனார்,

"நின்ற துப்பொடு நிற்குறித்தெழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே." (புறம்:213)

எனத் தந்தைக்கு முறை சுட்டி மூதுரை செய்வர். போரில் நீ வெற்றி பெற்றாலும், இறுதியில் அச்செல்வம் உன் மக்களுக்கே வந்து சேரும். ஒரு கால் நீ தோற்றால் அரசையும் இழந்து பழியையும் அடைவாய். எனவே தியாக உணர்வோடு முன்னே விட்டுக்கொடு என்று புலவர் ஏதுமுடிவு காட்டுகின்றார்.

இராமாயணத்தில் பரதனைத் தம்பியருள் சிறந்தவன் என்று இராமன் புகழ்வான். அதற்குப் பரதனின் தியாகமே காரணம். பாரி வள்ளல், மரம், விலங்கு, மக்கள் என வரையாது முல்லைச் செடியின் நிலை கண்டதும் ஈரநெஞ்சோடு தேரீந்ததை தியாகத்தின் உயிர் நாடி என்கிறார் கபிலர். சாத்தனார் பிறர் பசி போக்கலும், உண்டபின் அவர் முகங்காணும் கோட்பாடு நிறைவேறாததால் தன்னைத்தானே அழித்துக்கொண்ட ஆபுத்திரனின் தியாகம் பெரிது என்கிறார். ஔவைக்கு யானையைக் கொடுத்த நாஞ்சில் வள்ளுவன், மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன், மனைவியைத் தவிர அனைத்தையும் விட்டுக் கொடுத்த திருமுடிக்காரி ஆகியோர் பெரும் தியாகிகள் எனக் கூறியுள்ளார் மூதறிஞர் வ.சுப.மாணிக்கம்.

**அழகியல்**

பொருட்பற்று வேண்டும்:, உடைமைப் பற்று கூடாது என்பது அழகப்பர் கண்ட கொடையியல் அல்லது அழகியல் என அழகப்பரின் கொடைப் பண்பை விவரித்துக் கூறியுள்ளார் வ.சுப.மாணிக்கம்.

**மணிநாவொலி**

முகிலனைய பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரின் புலமையும், தமிழிற் சுவைகாணும் புதுமுறை காட்டிச் சொற்பொழிவால் தமிழ் பைங்கூழ்தழையச் செய்த தன்மையைப் போற்றி பாராட்டியுள்ளார்.

**பாவம்**

பாவம் என்ற புதுச்சொல்லை உள்ளக்குறிப்பு என்ற பொருளில் இன்று நாம் ஆண்டாலும் 'பாவம்' என்ற பழைய தீவினைப் பொருளே கேட்பார்க்கு முன் தோன்றும். குறிப்புப் பொருள் தானே ஒழிந்து போகும். ஆதலால் பாவம் என்ற புதுச்சொல்லை தமிழ் எழுத்தாளர், சொல்லாளர் பயன்படுத்த வேண்டாம் என வ.சுப.மாணிக்கம் கூறியுள்ளார்.

**அருஞ்சொற்கள்**

வளி, பொதி, பா, மாடு, புரவி, முல்லை, வாவு, நாற்று, ஓட்டாஞ்சில், மாணி, மாரியம்மை, கார்கார்த்தார், முருகன், காவடி. கழைக்கூத்து, கீரையாய்தல், ஆவுடையார், புடைவை மடைப்பள்ளி போன்ற சொற்களைச் சான்று காட்டி அதன் பொருளை எவ்வாறு வழக்கில் பயன்படுத்தியுள்ளனர் எனத் தெளிவுபடுத்தியுள்ளார். மக்கள் வாய்ச்சொற்களுக்கும், வழக்குச் சொற்களுக்கும் பொருளை அறிந்து கொண்டால் இலக்கியத்தில் வரும் சொற்களுக்குப் பொருள் தானே விளங்கிவிடும் எனக் கூறியுள்ளார் வ.சுப.மாணிக்கம்.

**வாழ்க்கைத் துணை**

வாழ்க்கைத் துணை என்பது ஆண், பெண் இருபாலருக்கும் உரியது. 'வாழ்க்கை துணை' என்னும் சொல் திருக்குறளில் மனைவியைக் குறிக்கிறது. கணவன் மனைவி என்னும் இல்லற உறுப்பினர் அறிவோர்க்குக் கட்டுப்பட்டவர் என்றும் அவர்கள் குடும்பத்திற்கு மாறாக நடப்பரேல் அவரைத் திருத்தும் கடப்பாடு அறிவோர்க்கு உரியது எனத் தொல்காப்பியக் கற்பியல் கூறுகிறது. செவிலி, தோழி ஆகியோரும் தலைவன், தலைவி தவறு செய்யும் காலங்களில் இடித்துரைத்து நல்வழிப்படுத்துகின்றனர். வள்ளல் பேகன் அவன் மனைவி கண்ணகியைத் துறந்தபோது, கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய சான்றோர்கள் குடும்ப நல்வாழ்விற்குச் சிறுபெருந்தடைகளை அகற்றினர் எனப் புறநானூறு குறிப்பிடுகிறது. பெரியாரைத் துணைகோடல் அரசாட்சிக்கேயன்றி

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

இல்லாட்சிக்கும் இன்றியமையாதது எனப் பல தமிழ் இலக்கியப் பாடல்களைச் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

**பாரதியின் புலமை**

பாரதியின் புலமையை அவர் பாட்டின் வழி திருவள்ளுவர், இளங்கோவடிகள், அப்பர், திருத்தக்க தேவர், கம்பர் ஆகியோரின் தாக்கத்தையும், கூத்து நடை, ஏளன நடை, எச்சரிக்கை நடை, காதல் நடை, பெருமித நடை, சின நடை, அன்பு நடை, ஆண்மை நடை, வெறி நடை, இசை நடை, அடுக்கு நடை, ஒலிநயம், சொல்லாட்சி, ஒரே பாடலில் சினவுணர்ச்சி, மானயுணர்ச்சி, மறவுணர்ச்சி, மகிழ்வுணர்ச்சி போன்ற நாலுணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் தன்மை ஆகியவற்றை அவர் பாடல்களின் வழி சிறப்பாக விளக்கியுள்ளார்.

**பாரதியின் பழமை**

தொல்காப்பியம் முதல் பாரதீயம் வரை தமிழ் பெருநூல்கள் பழமைப் பற்றுடையனவாகவே காணப்படுகின்றன. பாரதியார் எழுதிய நாளையும் இருந்த சூழ்நிலையும் அறிந்து படித்தால் அவர் தனிப்புலமை, அறிவுவீறு புலப்படும். அவர் கண்ட நனவெனத்தக்க நாட்டுக் கனவுகள் புதியனவாயினும் அவற்றைச் சொல்ல அவர் மேற்கொண்ட நடை தொல்காப்பியப் பழமையுடையது என்பதைப் பல பாடல்களைச் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

**முடிவாக**

படைப்பாளன், படைப்பு, படிப்போன் எண்ணங்களால் ஒன்றுபடும்போது அப்படைப்பு வெற்றி பெறுகிறது. அவ்வகையில் எடுத்துக் கொண்ட தலைப்புக்கேற்ற கருத்துகளை நிரலாகத் தொகுத்துக் கட்டுரையைச் சிறப்பாக அமைத்துள்ளார். கட்டுரைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இந்நூல் சிறந்த சான்றாகும். இவர் கூறிய முறையில் கட்டுரைகள் படைக்கப்படும்போது பல புதிய எண்ணங்கள் தோன்றுவதுடன், தமிழ்ச் சமூக வளர்ச்சிக்கான வழிவகைகளும் புலப்படும். இந்நூல் கருத்தூன்றிப் படிப்போர்க்கும் ஆய்வுத் தேடலை மேற்கொள்வோர்க்கும் புதையல் போன்றது. பன்முகத்திறன் கொண்ட வ.சுப.மாணிக்கம் மிகச்சிறந்த சிந்தனையாளர். அவரது சிந்தனைச் செழுமையை இந்நூலில் காணமுடிகிறது.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# இலக்கிய நட்பாராய்தல்



திருமதி **கனகபுஷ்பம்,**

ஈரோடு.

**முன்னுரை**

உலகிலுள்ள பழமையான இனங்களில் ஒன்று தொல்பெருமைவாய்ந்த நம் தமிழினம். தமிழ் தொண்டாற்றிய பெருங்கவிகளுள் பலர் பெருங்காப்பியங்களையும், பல்சுவையுடைய நல்ல அறநெறிக் கருத்துகளையும் இன்னும் பிற நீதிநூல்களையும் இயற்றியுள்ளனர். தமிழிலக்கியத்திலுள்ள சொற்சுவையிலும், பொருட்சுவையிலும் மனதைப் பறிகொடுக்காதவர் எவருமிலர். அத்தகைய பெருமைக்குரிய தமிழிலக்கியங்களில் அன்பு, வீரம், கொடை முதலிய வாழ்வியல் கருத்துகள் நிரம்பக் கிடைக்கின்றன. இதன் வரிசையில் மற்றுமொரு அற்புதத்திற்கும் இடமுண்டு. அந்த அற்புதத்தின் பெயர்தான் நட்பு. நட்பின்றியமையாவுலகு என்பதே நாம் நம் வாழ்வில் கற்றுக்கொண்ட பெரிய கருத்துருவாயிருக்கும். நட்புசூழ் உலகில் மக்களாகிய நாம்மட்டுமில்லாது மாக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கூடிவாழும் உயரிய பண்பு நட்பிலிருந்தே துவங்குகிறது. இத்தகைய நட்பினைப் பற்றி நம் பைந்தமிழ் இலக்கியங்கள் யாது இயம்புகின்றன என்பதும் நட்பைப் பற்றிய இலக்கியப் பாடல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை ஆய்ந்து தெளிவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நட்புவிளக்கம்**

நட்பு எனும் சொல்லின் வேர்ச்சொல் **'நள்'** என்று கொள்ளலாம். 'நள்' என்பதன் பொருள் 'செறிந்த' என்பதாகும். அன்பினாலும் ஒத்தகருத்தினாலும் செறிந்தவர்களை நண்பர்கள் என்று கூறலாம். நட்பு என்ற சொல்லுக்குத் தமிழ்இலக்கிய அகராதியில் கெழி, கெழுதகை, கெழுவு, கேண்மை, தோழமை என்று வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் பொருள் கூறியுள்ளார். மனிதர்களிடம் அன்பு, கருணை, உதவும் மனப்பாங்கு போன்ற நற்சிந்தனைகளை ஊக்குவிப்பது நட்பேயாகும். பறவையினங்கள் கூட்டமாகவே வாழ்ந்து வருகின்றன. இரை தேடியும் செல்கின்றன. கிடைக்கும் இரையையும் பகிர்ந்தே உண்கின்றன. காகங்களை நாம்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

எடுத்துக்காட்டாய் கொள்ளலாம். விலங்கினங்களும்கூடக் கூட்டமாய் வாழ்கின்றன. ஒத்த கருத்துடையவர்கள் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்தலையே நட்பென்று கூறுகிறோம்.

**நட்பின்தன்மை**

இலக்கியங்களிலே நட்பு மிக அழகாகவும், அழுத்தமாகவும் எழுதப்பட்டுள்ளது. இலக்கியங்கள் காதலுக்கு அடுத்தபடியாக அதிகம் கொண்டாடிய உறவு நட்பு. சங்கக்கால இலக்கியங்களில் மட்டுமல்லாது, அதற்குப்பின் வந்த அறநெறி நூல்களிலும் நட்பிற்கு இடம் இருந்தது. எவ்வித எதிர்பார்ப்புமின்றி ஒருவர்பால் கொண்ட அன்பினால் விளையும் நற்பயனே நட்பாகும். இன்பம் வரும்காலத்திலே நம்மோடு இணைந்திருந்து நம்மை மகிழ்விப்பது மட்டுமின்றி, நமக்குத் துன்பம் வரும் காலத்திலும் நம்மைக் காக்கும் அரணாய்ச் செயலாற்றுபவர்கள்தான் நண்பர்கள். அத்தகைய நல்ல நட்பினைப் பெற்றவர்கள், செயற்கரிய செயலைச் செய்தவராகின்றனர். இதைத்தான் உலகப்பொதுமறையாம் திருக்குறளிலே,

“**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**

**வினைக்கரிய யாவுள காப்பு**” (குறள்எண் : 781)

என்று வள்ளுவப் பெருந்தகை இயம்பியிருக்கிறார்.

நல்ல மனிதர்களிடையே நாம் ஏற்படுத்திக்கொள்ளும் நட்பைப்போல, செயற்கரிய செயல் எதுவுமில்லை. அதைப் போன்றதொரு நட்பை ஏற்படுத்திக்கொண்டால் அதைப்போல் தகுந்த பாதுகாப்பு ஏதுமில்லை என்று வள்ளுவர் நட்பின் தன்மை குறித்துக் கூறியிருப்பது மிகையன்று. நட்பின் தன்மை குறித்து,

“**உயிர் ஓரன்ன செயிர்தீர் நட்பின்**” (நற்றினை 72:3)

“……………………… **யாக்கைக்கு**

**உயிர் இயைந்து அன்ன நட்பின்**” (அகநானூறு 339:11-12)

என்றும் இலக்கியங்கள் கூறுவதன் வாயிலாகக் குற்றமற்ற நட்பை உயிருக்கு இணையாகக் கூறியிருக்கிறார்கள். மேற்கண்ட அகநானூற்று பாடலில் உடம்போடு உயிர்சேர்ந்து இருப்பது போன்ற நட்பு என்றும், ஒருவரையொருவர் இன்றியமையாத நட்பு என்றும் எடுத்துரைத்து நட்பிற்குப் பெருமை சேர்க்கிறார், இப்பாடலைப் பாடிய

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

நரைமுடி நெட்டையார். தம் சிந்தையில் ஒத்த கருத்துடைய நன்மக்களே நல்ல நண்பராகவும் இருக்க முடியும் என்பதை வள்ளுவப் பெருந்தகை

"**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**

**நட்பாங் கிழமை தரும்**" (குறள்: 785)

இரு உயிர்களுக்கிடையே நட்பு மலர்வதற்கு முன்பே அறிமுகமோ, பழக்கமோ தேவையில்லை, இருவரின் ஒத்த மன உணர்வே போதுமானது என்று இயம்பியிருக்கிறார்.

வாழ்வியல் கருத்துகளை நம் இலக்கியங்கள் அகம், புறமென்று வகுத்துள்ளது. அகத்திணை எனப்படுவது தலைவன் மற்றும் தலைவிக்கு இடையிலுள்ள காதலைப் பற்றியதாகும். தொல்காப்பியரும் தமது பொருளதிகாரத்திலே அகத்திணையில் தோழி மற்றும் தோழனின் சிறப்புகளைஎடுத்துரைக்கிறார்.

"**தாங்கருஞ்சிறப்பின்தோழிமேன**" (தொல் : பொருள் : 11)

என்று தொல்காப்பியம் தோழியின் மேன்மையைப் பற்றி கூறுகிறது. அன்பு, அறிவு, அறம் இம்மூன்று பண்புகளைச் சொல்லிலும் செயலிலும் கொண்ட நட்பின் வடிவமாகத் திகழ்கின்றாள் தோழி. தோழமைப் பண்பின் உயர்ந்த வடிவமே சங்க இலக்கியங்கள் காட்டும் தோழி.

அகநானூற்று பாடல்களில் தோழமை பற்றிய சிந்தனைகள் நிறம்ப கிடைக்கிறது. அகத்திணைப் பாடல்களில் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தலைவனுக்கு அறிவுரை கூறவும் தேவைப்பட்டால் அதட்டவும் முயன்றிருக்கிறாள் தோழி. அப்படி அதட்டிப் பேசும் தோழியைத் தலைவன் அவமரியாதை செய்து பேசுவது போன்ற பாடல்கள் இலக்கியங்களில் எங்கேயும் நம்மால் காணமுடியாது. அதட்டும் தோழியிடம் அவள் கூறும் கருத்துரையை ஏற்பதாகவே தலைவனோ தலைவியோ கூறுவதாகவே பாடல்களை எழுதியிருப்பார்கள். அதன்மூலம் நட்பின் பெருமையைத் தமிழ்பெருமக்கள் எடுத்தியம்ப முற்பட்டிருப்பார்கள். இதன்மூலம் அக்காலத்திலே நட்பிற்கு எத்தகைய முக்கியத்துவம் தரப்பட்டிருக்கின்றது என்பதை அறியலாம். இதற்கு உதாரணமாக,

"**யாயேகண்ணினும் கடுங்காதலளே**

**எந்தையும் நிலனுறப் பொறாஅன்**

**சீறடிசிவப்ப**

**எவனிலகுறுமகள் இயங்குதிஎன்னும்**

**யாமே, பிரிவின்றியைந்ததுவரா நட்பின்**

**இருதலைப்புள்ளின் ஓருயிரம்மே"** (அகம் : 12)

இப்பாடலிலிருந்து நட்பின் ஆழத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

**நட்பாராய்தல்**

அன்பு தன்னலம் கருதாதது. ஒருவர் மற்றொருவர் மீது பயன்கருதாது வைக்கும் அன்பின் பெயரே நட்பு. அப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த நட்பின் தன்மை குறித்து "குற்றமற்ற நட்பு" என்று இயம்புகின்றன. வள்ளுவரும்,

**"மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்**

**ஒருவுக ஒப்பிலார் நட்பு"** (குறள் எண் : 800)

மனத்தில் மாசு இல்லாதவர்களையே நண்பர்களாகப் பெறவேண்டும் என்று கூறுகிறார். மொழி, இனம் இவைகளால் வேறுபட்டிருந்தாலும் மக்கள் அனைவரையும் ஒன்றிணைப்பது நட்பே என்றால் அது மிகையில்லை. அடிப்படையில் மக்களுக்கிடையிலான இணைப்புக் கருவியாக நட்பு செயல்படுகிறது. ஒருமனிதரால் பல்வேறு நபர்களுடன் நட்புரவாக பழகமுடிந்தாலும் அவர்களில் ஒருவரோடு மட்டுமே நெருக்கமான நட்பைப் பேண முடியும். இதனை, படிக்காசுப் புலவர் இயற்றிய தண்டலையார் சதகம் எனும் நூலின் கண் அறிய முடியும்.

**"ஊரிலொருவன் தோழன்! ஆரும் அற்ற**

**தேதாரம்! உண்மைதானே?"**

என்ற வரிகளுக்குத் **திரு.புலவர். அரசு** அவர்கள் "ஊரில் ஒருவனே நண்பனாகத் தக்கவன்; பலர் இருக்கவியலாது" என்று உரை எழுதியுள்ளார். அப்படிப்பட்ட நட்பை நாம் பழகும் யாரிடமும் கொள்ளலாகுமா? என்றால் ஆய்ந்து தெளிந்து நட்புகொள்தலே சிறப்பு. இதையே வள்ளுவப் பெருந்தகை,

**"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**

**தான்சாம் துயரம் தரும்"** (குறள் எண் : 792)

என்று எச்சரிக்கிறார். இதற்கு உரையாசிரியர் பரிமேலழகர் ஆய்ந்து தெளிந்து கொள்ளாத நட்பும், அது தரும் துன்பமும் மரணம் போன்றது என்று எழுதியுள்ளார். அதாவது ஒரு மனிதரைப் பற்றியும் அவரின் பண்புநலன்களைப் பற்றியும் முழுதாகத்

தெரிந்திடாமல் கொள்ளும் நட்பு, அம்மனிதரின் தீயபண்புகளால் நமக்கு மரணத்தைப் போன்ற துன்பத்தைக் கொடுத்துவிடும் என்று எச்சரிக்கிறார். அப்படியாயின் எப்படிப்பட்டவருடன் நட்புகொள்வது சிறந்தது என்று பார்த்தோமானால்,

**"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**

**இனனும் அறிந்தியாக்க நட்பு"** (குறள் எண் : 793)

என்று வள்ளுவர் விளக்குகிறார். அதாவது ஒருவருடன் பழகும்போது, அவரின் குணம், குடிப்பிறப்பு, குற்றங்கள் என்ன? அவரின் இயல்புகள் என்ன? என்று அனைத்தையும் அறிந்தபின்பே நட்புகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். சிறிய செயல்களைச் செய்யும் சிற்றினத்தாரோடு நட்பு கொள்வதைவிட முயற்சியுடைய பெரியோரின் நட்பையே ஏற்க வேண்டும். இதையே புறநானூற்றின் நூற்றி தொன்னூறாவது பாடலில்,

**"எலிமுயன்றனையராகி, உள்ளதம்**

**வளன்வலி உறுக்கும் உளம்இலாளரோடு**

**இயைந்தகேண்மை இல்லாக்கியரோ!**

………………………………………………………

……………………………………………………….

**புலிபசித்தன்ன மெலிவில் உள்ளத்து**

**உரனுடையாளர் கேண்மையொடு**

**இயைந்தவைகல் உளவாகியரோ!"** **(புறம் : 190)**

சிறு எலியைப்போன்று முயற்சி எதுவும் இல்லாதவரோடு நட்பு கொள்வதைவிடவும்; களிறை வீழ்த்தி உண்ணும் புலியைப் போன்ற முயற்சியுடையவர்களின் நட்பே சிறந்தது என்று இதற்குப் **புலியூர்கேசிகனார்** உரை எழுதியுள்ளார். தன்முயற்சியால் அறவழியில் பொருளீட்டி உண்ணும் வலியோரின் நட்பே சிறந்ததாகும்.

**நட்பைக்காத்தல்**

உலக உயிர்கள் அனைத்தும் பெற்ற பெரும் வரம் நட்பே என்பதில் அறிஞர் பெருமக்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த நட்பை ஏற்படுத்திக் கொள்வது சிறப்பு என்றால் அதைப் பாதுகாப்பது அதனினும் சிறப்பாகும். நட்பைப் பாதுகாத்தல் என்பதை நண்பரைப் பாதுகாத்தல் என்றே

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

எடுத்துக்கொள்ளலாம். நட்பிலே பொய், பொறாமை, புறங்கூறல் போன்ற தீயப்பண்புளுக்கு நாம் இடம் கொடுத்தோமேயானால் நட்பென்னும் அற்புதம் சிறப்பு பெறாது. இதையே விளம்பி நாகனார் இயற்றிய நான்மணிக்கடிகைஎனும் நூலில்நாம்காணலாம்.

**“பொய்த்தல்இறுவாயநட்புக்கள்”**

என்று நட்பிற்குள் பொய்யுரைத்தால்; அது நட்பிற்கே கேடாய் முடியும் என்றும்,

**“……………………….பிறனைக்**

**கொலைஒக்கும்கொண்டுகண்மாறல்”**

என்றும் கூறியுள்ளார். அதாவது, தம் நண்பரைப் பற்றி பிறரிடம் புறங்கூறுதல் தம் நண்பரைத்தாமே கொன்றதற்குச் சமம் என்று விளக்கியுள்ளார். தம்முடைய நண்பரைப் பற்றித் தாமே புறங்கூறுதல் என்பது எத்தகைய இழிவானதொரு செயல் என்பதை இயம்பியுள்ளார்.

நமது பெருங்க விவள்ளுவப்பெருந்தகை,

**“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு”** (குறள்எண் : 788)

என்று எடுத்துரைக்கிறார்.

நாம் அணிந்திருக்கும் ஆடை நழுவும்போது அதைத்தாங்கிப் பிடிக்கும் நம் கைகளைப் போல், நமக்குத் துன்பம் வரும் காலத்தில் விரைந்து செயலாற்றி நம்துன்பம் துடைப்பவராய் நம் நண்பர் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறனர். மேலும்,

**“நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**

**மேற்சென் றிடித்தற் பொருட்டு”** (குறள்எண் : 784)

என்றும் கூறுகிறார். நட்பென்பது சிரித்துப்பேசி மகிழ்வதற்கு மட்டுமில்லாது, தம் நண்பர் வழி தவறிச் செல்லும் பொழுது, இடித்துரைத்துத் திருத்த வேண்டும் என்று இயம்புகிறார். நாம் தவறு செய்யும் போதோ, தவறான வாழ்க்கைப் பாதையைத் தெரிவு செய்யும்போதோ நம்மைக் கடிந்துகொள்ளும் உரிமை நம் நண்பர்களுக்குண்டு. நம்மைத் தட்டிக்கொடுத்து, எடுக்கும் முயற்சிகளில் வெற்றிபெற வைப்பதைப் போல;

நம் தவறுகளைச் சுட்டிக்காட்டி நல்வழிப் படுத்துபவராகவும் நம் நண்பர்கள் இருக்க வேண்டும். அத்தகையோரையே நாம் உற்ற துணையாக ஏற்க வேண்டும்.

**கூடாநட்பு**

நல்ல பண்பாளர்களிடத்துக் கொண்ட நட்பு பொங்கிப் பெருகும் நீரூற்றைப் போன்றது. ஆயினும் தீயவர்களிடம் நாம் பழக நேர்ந்தால் என்செய்வது?. இதற்கும் நம் வள்ளுவப் பெருந்தகையே தீர்வு சொல்கிறார்.

"**பகை நட்பாங்காலம் வருங்கால் முகநட்**

**டகநட் பொரீ இவிடல்**" (குறள் எண் : 830)

பகைவருடன் பழகிடும் காலம் வருமேயானால் அகத்தளவில் இல்லாமல் முகத்தளவில் மட்டும் நட்பு செய்து பின்னர் அந்த நட்பையும் விட்டுவிட வேண்டும். உள்ளத்திலே பகைவைத்துக் கொண்டு பேச்சிலே உறவு காண்பித்துக் காலத்தைக் கழிப்பவரது உறவை கைவிட வேண்டும், என்று படிக்காசுப் புலவர் தண்டலையார் சதகம் எனும் நூலில் கூறியுள்ளார்.

இவ்வகையிலான கருத்தையே வள்ளுவர்,

"**எனைத்தும் குறுதல் ஓம்பல்மனைக் கெழீஇ**

**மன்றில் பழிப்பார் தொடர்பு**" (குறள் எண் : 820)

என்று கூறுகிறார். அதாவது நம் வீட்டிற்கு வந்து நம்மிடம் இனிமையாகப் பேசிப் பின், பலர் கூடியிருக்கும் பொதுமன்றத்தில் பழித்துப் பேசுபவரின் நட்பை விலக்க வேண்டும் என்று தமிழறிஞர் மு. வ அவர்கள் கூறியுள்ளார்.

**நட்பின்பெருமை**

தீநட்பை விலக்க வேண்டும் என்று கூறியதைப்போல் நல்ல நட்பின் பெருமையையும் அறிஞர் பெருமக்கள் எடுத்துரைக்கத் தவறவில்லை. நல்ல பண்பாளர்களின் நட்பு தோண்டத் தோண்டப் பெருகும் நீரூற்றைப் போன்றது. இக்கருத்தையே வள்ளுவப் பெருந்தகை,

"**நவில் தொறும் நூனயம்போலும் பயில்தொறும்**

**பண்புடை யாளர் தொடர்பு**" (குறள் எண் :783)

என்னும் குறளில் வாசிக்கும் போதெல்லாம் இன்பம் தரும் நல்ல நூலினைப்போல்; புகழ் தருவது பண்பாளர்களிடத்துக் கொண்ட நட்பு என்று விளக்குகிறார். பின்னும்,

**“நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**

**பின்னீர பேதையார் நட்பு”** **(குறள்எண் : 782)**

என்றும் கூறுகிறார். இதன் பொருள் யாதென்றறிந்தால் கற்றறிந்த பெரியோர்களிடத்துக் கொண்ட நட்பு பிறை நிலவாகத் துவங்கி முழுநிலவாய் வளரும். அறிவிற் சிறியோர்களிடத்துக் கொள்ளும் நட்பு முழுமதி போல் முளைத்துப் பின் தேய்பிறையாய்க் குறையும் தன்மையது என்பதாகும்.

நாலடியார் எனும் நல்வகை நூலின்கண் இக்கருத்தையே வலியுறுத்தும் வகையில்

**“கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை; எஞ்ஞான்றும்,**

**குருத்திற் கரும்பு தின்றற்றே; குருத்திற்கு**

**எதிர்செயத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்**

**மதுரம் இலாளர் தொடர்பு”**

என்று இயம்பப்பட்டுள்ளது. இதன் கருத்தை நோக்குவோமானால், நன்கு கற்றறிந்த பெரியோர்களிடத்து நாம் கொள்கின்ற நட்பானது; கரும்பைக் குருத்திலே துவங்கி அடிநோக்கித் தின்பது போலாகும். இனிய தன்மை இல்லாதாரின் நட்போ அடிக்கரும்பிலிருந்து நுனிநோக்கித் தின்பது போலாகும் என்று கூறப்பட்டுள்ளது. தமிழ் கூறும் நல்லுலகின் பெருங்கவிகளில் ஒருவராகிய நமது ஔவை பெருமாட்டி நட்பைப் பற்றி பின்வருமாறு பாடியிருக்கிறார்.

**“அட்டாலும் பால்சுவையில்குன்றா(து)**

**அளவளாய்**

**நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்**

**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களேசங்கு**

**சுட்டாலும் வெண்மை தரும்”**

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள், நம்நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்த முறையிலேயே பழகிவருவர் என்று இயம்பியிருக்கிறார். இவையனைத்தையும் ஒப்புநோக்குகையில் நன்கு கற்றறிந்த பண்பாளர்களின் நட்பே நம்மைப் பாதுகாக்கும் அரணாயிருந்து செயல்படும் என்று அறிகிறோம்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

## முடிவுரை

நல்ல நட்பின் வகையறிந்து, ஆய்ந்து, தெளிந்து, நன்கு கற்றறிந்த பண்பாளர்களைத் தமது நண்பர்களாக ஏற்போமானால், நாம் கொண்ட நட்பும் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பைப்போல் புகழ்பெறும் என்பதைத் தெள்ளற தெரிந்து கொண்டோம்.

இன்றைய அவசரக்கதி உலகில் நண்பர்களைத் தேர்ந்தெடுப்ப தே சவாலான செயலாயிருக்கிறது. நம் பிள்ளைகளின் நல்வாழ்வினைப் பற்றி சிந்தித்து, அவர்கள் நல்ல நட்பினைப் பெற்று வாழ்வில் புகழடைய நம் அழகு தமிழ்பாக்களைக் கற்கச் செய்து நம் இளைய சமுதாயம் பயனடையச் செய்வோம்.

## மேற்கோள் நூல்கள்


1. தமிழ் இலக்கிய அகராதி – வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், 1957, ப.எண்-144.
2. திருக்குறள், மூலமும் உரையும், பரிமேழலகர்.
3. தண்டலையார் சதகம், படிக்காசுப் புலவர், திரு. புலவர். அரசு உரை.
4. புறநானூறு, மூலமும் உரையும், புலியூர்கேசிகனார்.
5. நான்மணிக்கடிகை, மூலமும் பழைய உரையும்.
6. திருக்குறள், மூலமும் உரையும், மு. வ.
7. நாலடியர், மூலமும் உரையும், புலியூர்கேசிகனார்.

# வாழ்வின் வெற்றிக்கு வள்ளுவரின் ஊக்க மொழிகள்



திரு. **சி.பாலாஜி**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
பாரதியார் பல்கலைக் கழகம், கோவை
பட்டதாரி தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
கலசபாக்கம் வட்டம், திருவண்ணாமலை.

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய இளைஞர்களில் பலர் தன்னம்பிக்கை இல்லாததால் வாழ்க்கையில் வெற்றிபெற இயலாமல் மது முதலான தீய பழக்கங்களுக்கு அடிமையாகி வாழ்க்கையை இழந்து நிற்கின்றனர். சிலர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, தற்கொலை செய்துகொள்ளவும் முயல்கின்றனர். அத்தகைய தன்னம்பிக்கை இல்லாத இளைஞர்களை ஊக்கப்படுத்தி வழிநடத்தக்கூடிய அரிய பல ஊக்கமொழிகள், பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் முதன்மை நூலான திருக்குறளில் நிறைந்துள்ளன. அவற்றில் சிலவற்றை வெளிக்கொண்டுவந்து இளைஞர்களின் பார்வைக்கு முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

திருவள்ளுவர், திருக்குறள், அறநூல், தன்னம்பிக்கை, முயற்சி.

**முன்னுரை**

தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் திருவள்ளுவரால் எழுதப்பெற்ற திருக்குறள் என்னும் அறநூல், தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத்திறனை வளர்க்கின்ற அரியதோர் ஊக்கநூலாக அமைந்துள்ளது. இன்றைய இளைஞர்களில் பெரும்பகுதியினர் தன்னம்பிக்கை இழந்தவர்களாகவும் ஆளுமைத்திறன் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்பகங்கள் பலவும் தற்போது மிகுதியான அளவில் சுயமுன்னேற்ற, ஆளுமைத்திறன் வளர்க்கும் நூல்களை வெளியிட்டு வருவதிலிருந்தே இது நன்கு உறுதியாகின்றது. இன்றைய மேலைநாட்டு அறிஞர்கள் எடுத்துரைக்கின்ற தன்னம்பிக்கையூட்டும் சிந்தனைகள் பலவும் திருவள்ளுவரால் இருபது நூற்றாண்டுகட்கு முன்னரே எடுத்துரைக்கப் பெற்றவையாகும். மனிதவாழ்வின்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

வெற்றிக்குத் தேவையான, திருவள்ளுவரின் எழுச்சிமிகு ஊக்கமொழிகளில் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

**தோன்றின் புகழோடு தோன்றுக**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் "பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் மறைந்தோம்" என்று வீணர்களாய் வாழ்ந்து மறைவதால், அவர்களுக்கோ சமுதாயத்திற்கோ ஒரு நன்மையும் இல்லை. ஒவ்வொரு மனிதனும் தான் இந்த உலகில் பிறந்து, வாழ்ந்து, மறைந்த பின்னர்; இந்த உலகம் அவர்களை என்றென்றைக்கும் மறக்க இயலாத வகையில், தன்னால் இயன்ற அருஞ்செயல்களைச் செய்து புகழ்பெறுதல் வேண்டும். அவர்களையே இவ்வுலகம் 'பெரியர்' என்று மதித்துப்போற்றும். இதனை வள்ளுவர்,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள் - 236)

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" (குறள் - 26)

என்னும் குறள்களில் எடுத்துரைத்துள்ளார். வாழ்க்கையில் எவ்விதப் பிடிப்புமில்லாமல் காலந்தள்ளுகின்ற இளைஞர்களுக்கு வாழ்வின் குறிக்கோளை, பிறந்ததன் பயனை மேற்கண்ட குறள்களில் எடுத்துக் கூறி, அவர்களை நெறிப்படுத்துகின்றார்.

**ஞாலம் கருதினும் கைகூடும்**

இன்றைய இளைஞர்களின் தலையாய சிக்கல்கள் வறுமையும், வேலையின்மையுமாகும். வறுமைக்கு வேலையின்மையும், வேலையின்மைக்கு முயற்சியின்மையும், முயற்சியின்மைக்கு தன்னம்பிக்கையின்மையும் காரணமாய் இருக்கின்றன. ஆக, ஒரு மனிதனின் வறுமைநிலைக்கு அடிப்படைக் காரணமாவது அவனிடமுள்ள தன்னம்பிக்கை இன்மையேயாகும். ஊக்கமொழிகளின் கருவூலமாய் விளங்கும் திருக்குறளில், மனம் சோர்வடைந்த மனிதர்கட்குத் தேவையான தன்னம்பிக்கை மொழிகள் பலவும் இடம்பெற்றுள்ளன. சான்றாக,

"அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்" (குறள் - 483)

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" (குறள் - 484)

என்னும் குறள்களைச் சுட்டலாம். ‘தகுந்த கருவிகளைக்கொண்டு, தக்க காலத்தினையறிந்து செய்தால், முடியாத செயல்களேயில்லை. இவ்வுலகையே வெல்லக் கருதினாலும் அது கைகூடும்’ என்னும் தன்னம்பிக்கை வரிகள், சோம்பிக்கிடக்கும் இளைஞர்களைத் தட்டியெழுப்பும் வல்லமை கொண்டவையாகும்.

**பொறியின்மை யார்க்கும் பழியன்று**

மனிதர்களில் ஒருசிலர் பிறக்கும்போதே உடல்உறுப்பு குறைபாடுகளோடு பிறந்துவிடுகின்றனர். அவர்களில் ஒருசிலர், அக்குறைபாடுகளை நினைந்து நினைந்தே மனம் வருந்தியவர்களாய் வாழ்ந்து வருகின்றனர். உடல் ஊனத்தைவிட அவர்களின் மனவூனமே எவ்வித அருஞ்செயலிலும் ஈடுபடவிடாமல் அவர்களை முடக்கி விடுகின்றது. அப்படிப்பட்ட மனிதர்களை ஊக்குவிக்கும் வகையில் வள்ளுவர்,

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி" (குறள் - 618)

என்னும் குறளில், ‘உடல்குறைபாடு மற்றவர் பழித்துப் பேசத்தக்கதன்று. ஆனால் அக்குறைபாட்டினைக் காரணம் காட்டி முயற்சி செய்யாமல் இருப்பதே பழித்துப் பேசத் தக்கதாகும்’ என்ற தம் கருத்தினை எடுத்துக்கூறி, ‘அருஞ்செயல் புரிவதற்கு ஊனம் ஒரு தடையன்று’ என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

**செய்கப் பொருளை**

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே பொருளின் தேவையை அறிந்தவர். பொருளின் இன்றியமையாமையை உணர்ந்தவர். ‘பொருளில்லையெனில் இவ்வுலக வாழவேயில்லை’ என்பதை நன்கறிந்த தொலைநோக்குச் சிந்தனையாளர். மதிப்பில்லாத ஒருவரைச் சமுதாயத்தில் மதிப்புடைய ஒருவராக மாற்றக்கூடிய பொருள் பொருளேயாகும். இதனை வள்ளுவர்,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்" (குறள் - 751)

என்னும் குறளில் தெளிவுபடுத்தியுள்ளார். பொருள் பெற்றவரையே அனைவரும் மதிப்பர், போற்றிப் புகழ்வர். பொருளற்றவரை அவர்தம் உறவினரும் மதியார். பொருளில்லாதவரை உறவினர்களே மதிக்காத நிலையில் பகைவர் எப்படி மதிப்பர்? அதனால்தான் வள்ளுவர்,

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

"செய்கப் பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்

எஃகதனில் கூறியது இல்" (குறள் - 759)

என்னும் குறளில், பகைவர்களின் செருக்கினை அடக்கியொடுக்கும் வலிமையான படைக்கலன் (ஆயுதம்) பொருளே' என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். தன் தேவைகளை நிறைவேற்றவும், அருஞ்செயல்களின்மூலம் தன் குறிக்கோளை எட்டவும் மனிதனுக்குக் கண்டிப்பாகப் பொருள் தேவை. எனவேதான் வள்ளுவர் மேற்கண்ட குறளில் "பொருளைச் செய்க" என்று அறிவுரையாகக் கூறாமல், "செய்கப் பொருளை" என்று ஆணையிட்டுக் கூறியுள்ளார்.

**முயற்சி திருவினை ஆக்கும்**

பொருளிட்டுவதென்பது ஒவ்வெரு மனிதனுக்கும் தவிர்க்க இயலாத தலையாய கடமையாக அமைந்துள்ளது. மனிதருக்குப் பொருளை உருவாக்கித் தருவது அவரது முயற்சியேயாகும். முயற்சியின்றி எச்செயலும் நடைபெறுவதில்லை. முயற்சி செய்துகொண்டே இருப்பவன் ஒருபோதும் தோல்வியடைவதில்லை. முயற்சி செய்யாதவன் எப்போதும் வெற்றி காண்பதில்லை. 'முயற்சியே பொருளைத் தரும், முயற்சியின்மை வறுமையைத் தரும்' என்னும் கருத்து உண்மையானதாகும். இதனை வள்ளுவர்,

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்" (குறள் -616)

என்னும் குறளில் தெளிவுபடுத்தியுள்ளார். ஒருவன் பெருமுயற்சியுடன் உழைத்தும் வெற்றிகாண இயலவில்லையெனில், அவனது முயற்சி தகுந்த முறையில், சரியான வழியில் அமையவில்லை என்று பொருள். இடையில் தோல்வி வந்தாலும் மனந்தளராமல் சரியான வழியில் இடைவிடாமல் முயற்சி செய்வோரிடம் பொருள்தானே சென்று சேரும். இதனை வள்ளுவர்,

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா

ஊக்கம் உடையா னுழை" (குறள் - 594)

என்னும் குறளில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். பொருளீட்ட நினைக்கும் ஒரு மனிதனுக்கு இடைவிடாத முயற்சியும், முறையான உழைப்பும் இன்றியமையாதவையாகும்.

### முயற்சியால் ஊழையும் வெற்றி காணலாம்

பண்டைக் காலந்தொட்டே மனிதர்கள் ‘ஊழின்’ மீது நம்பிக்கைகொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். தமிழின் முழுமுதற் காப்பியமான சிலப்பதிகாரத்தில் ‘ஊழ்’ பெரும்பங்கு வகித்ததாகக் கூறப்படுகின்றது. மனிதனின் அனைத்துச் செயல்களும் ஊழோடும், இறையருளோடும் ஒன்றிணைத்துப் பார்க்கப்பட்டன. நல்லூழும், இறையருளும் இருந்தால்தான் ஒருவனுக்கு எச்செயலிலும் வெற்றி கிடைக்கும் என்று நம்பப்பட்டது. திருவள்ளுவரும் ‘ஊழ்’ என்னும் அதிகாரத்தில் ஊழ் மிக வலிமை உடையதென உரைத்துள்ளார். எனினும் அவரே ‘இடைவிடாமல் முயற்சிசெய்தால் வலிய ஊழையும் வென்று புறங்காணச் செய்யலாம்’ என்ற கருத்தை,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" (குறள் - 620)

என்னும் குறளில் எடுத்துரைத்துள்ளார். இதனால் ஊழைவிட முயற்சி வலிமையானது என்பதை அவர் உணர்த்தியுள்ளார். அதுமட்டுமன்றி, ‘ஒரு செயலைச் செய்வதற்குத் தெய்வத்தின் துணையில்லாமல் போனாலும், விடாமுயற்சியின் துணையோடு அச்செயலைச் செய்து முடித்து, அதற்கான உழைப்பின் ஊதியமாக வெற்றியைப் பெறலாம்’ என்ற கருத்தை,

"தெய்வத்தான்ஆகாத் தெனினும்முயற்சிதன்
மெய்வருத்தக்கூலிதரும்" (குறள் - 619)

என்னும் திருக்குறளில் வள்ளுவர் உறுதிபட எடுத்துக்கூறி, ’முயன்றால் முடியாததில்லை’ என்னும் முதுமொழிக்கு அரண் சேர்த்துள்ளார். மேற்கண்ட இரு குறள்களின்மூலம் முயற்சியின் வலிமை நன்கு தெரியவருகின்றது.

### உள்ளம் உடைமையே உடைமையாகும்

முயற்சிக்கு அடிப்படையாக அமைந்திருப்பது அவனுடைய உள்ளஊக்கமே. ஒருவனிடம் உள்ளஊக்கம் மிகுதியாக இருந்தால்தான் அவனால் அருஞ்செயல்கள் செய்து புகழ்பெற முடியும். உள்ளஊக்கத்தின் மற்றுமொரு பெயர்தான் தன்னம்பிக்கையாகும். ’மனிதர்கட்கு உண்மையான செல்வமாவது அவர்தம்உள்ள ஊக்கமே’ என்பதை,

"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்" (குறள் - 592)

"உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலார்
மரம் மக்களாதலே வேறு" (குறள் - 600)

என்னும் குறள்களில் வள்ளுவர் உறுதிபடக் கூறியுள்ளார். பொருட்செல்வம் நிலையற்றது. எளிதில் நீங்கிவிடும் தன்மை கொண்டது. உள்ள ஊக்கமெனும் தன்னம்பிக்கைச் செல்வமே ஒருவருக்கு நிரந்தரமானது. அதுவே மாந்தருக்கு மனவலிமை தந்து பொருட்செல்வம் தேடுவதற்கும் அடிப்படைத் துணையாக அமைந்திருக்கின்றது. நெஞ்சில் உள்ள ஊக்க மில்லாதவர்கள் வாழ்வில் எந்நாளும் வெற்றிகாண்பது அரிது. எனவே உள்ள ஊக்கம் உடையவரே செல்வம் உடையவராகக் கருதப்படுவார்.

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்**

'எண்ணம்போல் வாழ்வு' என்பது பழமொழி. மாந்தர்களின் அத்தனை வெற்றிகளுக்கும் அவர்களின் எண்ணங்களே அடிப்படையாக அமைகின்றன. எனவே மனிதர்கள் தம் மனதில் உயர்ந்த குறிக்கோள்களையே எப்போதும் எண்ணிக் கொண்டிருத்தல் வேண்டும். ஒருவேளை அவை விரைவாகக் கைகூடாமல் போனாலும், அக் குறிக்கோள்களை மட்டும் நெஞ்சிலிருந்து புறம் தள்ளிவிடாமல் காத்துவர வேண்டுமென்பதை,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" (குறள் - 596)

என்னும் குறளில் வலியுறுத்தியுள்ளார். உயர்ந்த குறிக்கோள்களே மனிதவாழ்வினை உயரத்தவல்லவை யாதலால், மனிதரின் எண்ணங்கள் உயர்வானவையாக இருக்கவேண்டு மென்பதை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

**துணிவே துணை**

ஒருவன் ஓர் அரியசெயலைச் செய்யும்போது இச்செயலை நம்மால் செய்து முடிக்க முடியுமா? என்று மனதில் எண்ணி அஞ்சுதல் கூடாது. அவ்வாறு எண்ணினால் அவனுக்கு மனச்சோர்வு ஏற்பட்டு, அச் செயலைச் செய்து முடிக்க இயலாமற் போகும். செயல் செய்யும் முன், துணிவையே துணையாகக் கொண்டு, செயலைத் தொடர்ந்து செய்து வெற்றிகாண வேண்டும். துணிவைத் தவிர உற்றதுணை ஒருவனுக்கு வேறு எதுவுமில்லை. இதனை வள்ளுவர்,

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டாஎஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்" (குறள் - 497)

என்னும் குறளில் உறுதிபட மொழிந்துள்ளார். 'ஒரு செயலைச் செய்யும்போது அச்செயல் நிறைவேறாமல் இடையில் தடைகள் பல ஏற்பட்டாலும், துன்பங்கள்

வந்தாலும் மனம் கலங்காமல், துணிவோடு அச்செயலைச் செய்து முடிக்க வேண்டும்' என்னும் கருத்தை,

"துன்பம் உறவரினும் செய்கத் துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" (குறள் - 669)

என்னும் குறளில் வள்ளுவர் தெளிவாக உரைத்துள்ளார். ஒருவன் அரிய செயல்களைச் செய்யும்போது, இடையில் இடையூறுகள் ஏற்படுவது இயற்கையான ஒன்றே. இடையூறுகளைக் கண்டு மனம் தளர்ந்துவிடாமல், துணிவைத் துணையாகக் கொண்டு, அச்செயலைச் செய்துமுடித்தால் முடிவில் அச்செயல் அவனுக்கு இன்பத்தைத் தருவதாக அமையும்.

**முடிவுரை**

எந்நாட்டவரும், எம்மதத்தவரும், எம்மொழியினரும் ஏற்றுப் பின்பற்றத்தக்க பொதுவான அறக்கருத்துகளைத் திருக்குறள் உரைத்துள்ளதால் அந்நூல் 'உலகப்பொதுமறை' என்று அழைக்கப்படுகின்றது. திருக்குறள் ஓர் அறநூலாக மட்டுமல்லாமல் இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டும் ஊக்கமொழிகளின் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. நாளைய வாழ்க்கையை வளமாக்க நினைக்கின்ற இளைஞர்களுக்கு அந்நூலில் இடம்பெற்றுள்ள ஊக்க மொழிகள் ஒரு புதிய நம்பிக்கையை அளிக்கும் என்பது உறுதி.

**துணைநின்ற நூல்கள்**

1. திருக்குறள் மூலமும் உரையும், பரிமேலழகர்(உ.ஆ), அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை-600049. முதல் பதிப்பு - 2015.

2. திருக்குறள் தெளிவுரை, வரதராசனார்.மு (உ.ஆ), திருநெல்வேலி தென்னிந்தியச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை - 600018. 216 ஆவது பதிப்பு - 2014.

3. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், சுப்புரெட்டியார்.ந., அவ்வை பதிப்பகம், சென்னை-600083. முதல் பதிப்பு 2004.

4. குறள் கண்ட வாழ்வு, ஞானசம்பந்தன்.அ.ச, கங்கை புத்தக நிலையம், சென்னை-600017, முதல் பதிப்பு- 1994.

5. வள்ளுவர் காட்டும் வாழ்க்கைப் பாதை, முனிசாமி.வீ., திருக்குறளார் பதிப்பகம், சென்னை-600035, இரண்டாம் பதிப்பு - 1987

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# தொல்காப்பிய மகட்பாற் காஞ்சி: உரை வேறுபாடுகள்



திரு. **மு. அரவிந்**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை

மாநிலக் கல்லூரி (தன்னாட்சி),

சென்னை - 600005

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியப் புறத்திணையியலில் காஞ்சித் திணையானது அதன் நிலையாமைப் பண்பின் காரணமாக ஆய்வுக்குரியதாக உள்ளது. அத்திணையுள் அமையும் மகட்பாற் காஞ்சி என்னும் துறையை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கம். அதன்படி காஞ்சித் திணையும், அது புறத்திணையியலில் அமைந்துள்ள முறைமையும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் போக்கு மகட்பாற் காஞ்சித் துறைக்கு அமையும் உரைகளின் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டது. அவ்வாறு உரையாசிரியர்கள் கூறும் கருத்துகளை ஒப்பிட்டு ஆராய்ந்து மகட்பாற் காஞ்சியின் பொருண்மையை இவ்வாய்வு விளக்க முற்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** நிலையாமை, ஒப்பாய்வு, மகட்கொடை, இளம்பூரணர், நச்சினார்க்கினியர்

**முன்னுரை**

தமிழியல் ஆய்வுச் சூழலில் உரை மரபு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. சங்கப் பனுவல்களையும் இலக்கணங்களையும் விளங்கிக்கொள்வதற்கு அடிப்படையாக இருப்பது உரைகளே. உரையாசிரியர்களின் பார்வையிலேயே அவற்றை நாம் அணுகுகிறோம். வெவ்வேறு உரைகளை ஒன்றோடொன்று ஒப்பிடுவதும், அவை கூறும் கருத்தை மறுப்பதும், மாற்றுக் கருத்தைக் கூறுவதும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழியல் ஆய்வில் ஏற்பட்ட பாய்ச்சலாகும். அதன் தொடர்ச்சியாகத் தொல்காப்பியக் காஞ்சித் திணையில் அமையும் மகட்பாற்

காஞ்சி என்னும் துறையின் பொருண்மையை உரை வேறுபாடுகளின் வழியே காணலாம்.

**காஞ்சித் திணை**

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் புறத்திணையியலுள் காஞ்சித் திணையை ஆறாவது திணையாக வைத்துக் கூறுகின்றார். இக்காஞ்சி திணையுள் மகட்பாற் காஞ்சி என்னும் துறையானது ஒன்பதாவது துறையாக அமைந்துள்ளது. மகட்பாற் காஞ்சியின் இலக்கணத்தை ஆராயும்போது காஞ்சித் திணையின் பொருண்மையினையும் அறிந்துகொள்வது தேவையாகிறது.

“போர்/மூர்க்கம் ஆகியவற்றின் விளைவுகள் குறித்த பல்வேறு நிலைகள் பற்றி, (விரிவான விளக்கங்களாகவும்), அமையக்கூடிய இலக்கியங்களே காஞ்சி இலக்கியம். சாவு குறித்த எழுத்து, சாவினால் ஏற்படும் வாழ்வு நிலையாமை குறித்தது.” (சீனிச்சாமி, 2016: 44) தொல்காப்பியர் காஞ்சித் திணையின் இலக்கணத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்.

“காஞ்சி தானே பெருந்திணை புறனே

பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்

நில்லா உலகம் புல்லிய நெறித்தே” (தொல்.பொருள்.இளம்.76)

காஞ்சி என்னும் புறத்திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாக அமைந்தது ஆகும். பல வழியிலும் நிலையில்லாத உலகத்தைப் பலவகையான சிறப்பினால் பொருந்தியது என்று இதற்குப் பொருள் கொள்ளலாம்.

தொல்காப்பியர் குறிப்பிடும் நிலையாமையை இளம்பூரணர் இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என மூன்றாகப் பகுத்து நாலடியார் பாடல்களை எடுத்துக்காட்டு கூறி விளக்குகிறார் (இளம்பூரணர், 1969: 127). மேற்கூறிய காஞ்சித்திணை நூற்பாவை நச்சினார்க்கினியர் இரண்டாகப் பிரித்துப் பொருள் கூறுகிறார். மேலும் இளம்பூரணர் இளமை, செல்வம், யாக்கை என்று மூன்றாகக் கூறும் நிலையாமையை உயிர், யாக்கை, செல்வம், இளமை என்று நான்காகக் கூறுகிறார் (நச்சினார்க்கினியர், 2007: 262-264).

“காஞ்சித்திணையாவது, தனக்கு ஒப்பில்லாத சிறப்பென்னுஞ் செம்பொருளைப் பெறுதல் காரணமாக யாக்கை, இளமை, செல்வம் என்பவற்றால் நிலைபேறில்லாத இவ்வுலகியலைப் பற்றிக்கொண்டு அதனால் உளவாம் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றலாகிய ஒழுகலாறாம். நில்லாதவற்றால் நிலையுடையதனை அடையும் முயற்சியே காஞ்சித்திணை” (வெள்ளைவாரணன், 2017: 271) என்று க.வெள்ளைவாரணன் காஞ்சித்திணையை விளக்குகிறார்.

**திணை வைப்பு முறை**

காஞ்சித் திணையின் நிலையாமை என்பதை அதன் திணை வைப்பு முறையை நோக்கும்போது மேலும் உய்த்துணர முடிகிறது. புறத்திணையியலில் காஞ்சித் திணையை வாகைத் திணைக்கு அடுத்து ஆறாவது திணையாக வைத்துள்ளார் தொல்காப்பியர். நச்சினார்க்கினியர் இதனை “வாகையோடு மயங்கிய காஞ்சி” (நச்சினார்க்கினியர், 2007: 267) என்று கூறுகிறார்.

“தன்னாட்டின் மேற் படையெடுத்துவரும் வஞ்சிவேந்தனது படையினை எதிர்சென்று தடுத்து நிறுத்துதலாகிய இப்போர் செயல், பல்லாற்றானும் நில்லா வுலகியலைப் புல்லிநிற்றலாகிய காஞ்சித்திணையுள் அடங்குவதாகுதலின் ஆசிரியர் தொல்காப்பியனார் எதிரூன்றலாகிய இதனைத் தனித்திணையாக வகுத்துரைத்திலர்” (வெள்ளைவாரணன், 1983: 116) என வஞ்சித்திணைக்கு அடுத்துக் காஞ்சித்திணை அமையாத தன்மையினை விளக்குகிறார் க.வெள்ளைவாரணன். இச்சூழல் புறப்பொருள் வெண்பாமாலை காலத்தில் மாறுதல் பெறுவதைக் காண முடிகிறது. அந்நூல் வஞ்சி படலத்திற்கு அடுத்துக் காஞ்சிப் படலத்தைக் கூறுவது நோக்கத்தக்கது.

“உயிர், நிலையாமையை உணராத போது அது தோல்வியைச் சந்தித்ததாக அமையும். அது எப்பொழுது நிலையுடைய ஒரு பொருளைப் பற்றுகிறதோ அப்பொழுதே வெற்றி பெற்றதாகிறது. இதனால் வாகைக்குப் பிறகு காஞ்சி இடம்பெற்றுள்ளது” (சிவநேசன், 2007: 43) எனக் காஞ்சித் திணையின் வைப்பு முறையை விளக்குகிறார் பா. சிவநேசன்.

“வாழ்வின் துறைதோறும் பெறும் வெற்றிக்கூறுகளை வாகைத்திணை என வகுத்து உரைத்த தொல்காப்பியர் தொடர்ந்து, நிலையாமைக் கூறுகளைத் தொகுத்துக்கூறப் புகுதல் சிந்தித்தற்குரியது. நிலையாமையினை விளக்கும்

நச்சினார்க்கினியர் 'கணந்தோறும் கெடுவனவும் கற்பந்தோறும் கெடுவனவும் ஆம் என்றற்கு ஆறு' என்றார் என்பர். வெற்றிச் செருக்கில் மனிதனின் வாழ்வு முற்று பெற்றது என மயங்காமை கருதியும், வாகை நிலைபெற வேண்டுமேல், நிலையாமை நிலைகளை உணர்தல் வேண்டும் என எண்ணியும் தத்துவநோக்கில் காஞ்சித் திணையினை அமைத்த திறம் போற்றற்பாலது" (கந்தசாமி, 2016: 14) என விரிவாக விளக்குகிறார் சோ.ந. கந்தசாமி.

"வெட்சி சிறு போர்த் திணையாக அமைய, வஞ்சியும், உழிஞையும், தும்பையும் பெரும்போர் பற்றிய திணைகளாக வாகை வெற்றி மேம்பாடுகளைப் பேச, காஞ்சித்திணை இழவுத்திணையாக அமைகிறது" (பாலசுப்பிரமணியன், 2018: 54) எனக் கு.வெ. பாலசுப்பிரமணியன் ஒட்டுமொத்தப் புறத்திணையியலின் திணை வைப்பு முறையையும் விவரிக்கின்றார்.

**காஞ்சித் துறைகள்**

துறைகள் என்பன ஒரு பெரிய நிகழ்வின் உட்கூறுகள். தொல்காப்பியர் காஞ்சித் திணைக்கான துறைகளை மொத்தம் இருபதாகத் தொகுத்துக் கூறுகிறார். காஞ்சித் துறைகளைத் தொல்காப்பியர் விளக்கும் இடம் ஆய்வுக்குரியதாக உள்ளது. முதலில் பத்துத் துறைகளைக் கூறி 'ஈரைந்து ஆகும்' என்று கூறியதுடன் மீண்டும் பத்துத் துறைகளைக் கூறி 'துறை இரண்டுடைத்தே' என்கிறார். பின்வரும் நூற்பா இதனை விளக்கும்.

"மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமைங்
கழிந்தோ ரொழிதோர்க்குக் காட்டிய முதுமையும் ....."
(தொல்.பொருள்.இளம். 77: 1-2)

இதனைச் சூத்திரம் பல்காமல் இருப்பதற்காக ஒரே நூற்பாவில் இரண்டையும் அடக்கிக் கூறினார் என்கிறார் நச்சினார்க்கினியர். மேலும் முதல் பத்துத் துறைகளை ஆண்பால்துறை என்றும் பிற்கூறிய பத்தும் பெண்பால்துறை என்றும் அவர் பகுத்துரைக்கிறார் (நச்சினார்க்கினியர், 2007: 273-274).

"காஞ்சித்திணையின் முதல் பத்துத் துறைகள் போரியல் இழவு குறித்தன. பின் பத்துத் துறைகள் உலகியல் இறப்பு குறித்தன." (பாலசுப்பிரமணியன், 2018: 71) என்று

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

விளக்கம் தருகிறார் கு.வெ. பாலசுப்பிரமணியன். இரண்டாவதாக இடம்பெறும் பத்துத் துறைகளும் பிற்காலச் சேர்க்கைகள் என்று கூறுவாரும் உளர்.

ஆனால் முதலில் கூறிய பத்துத் துறைகள் என்பன தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு வழக்கில் இருந்தவை என்றும் பின்னர்க் கூறிய பத்துத் துறைகள் அவர் காலத்தில் வழக்கில் இருந்தவை என்றும் இரண்டையும் தொகுத்துக் கூறியுள்ளார் எனக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

**மகட்பாற் காஞ்சி**

மகட்பாற் காஞ்சியின் இலக்கணத்தைக் காஞ்சித் திணையின் முதல் பத்துத் துறைகளுள் ஒன்பதாவது துறையாக வைத்து வரையறுக்கிறார் தொல்காப்பியர். தம்மைப் பகைத்துப் படையெடுத்துச் செருக்குடன் வந்த வேந்தனுக்கு, முதுகுடிப் பெருமக்கள் தம் மகளை மணம் செய்து கொடுக்க மறுப்பது மகட்பாற் காஞ்சி என இந்நூற்பாவிற்குப் பொருள் கொள்ளலாம்.

“நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி

மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்” (தொல்.பொருள். இளம். 77: 14-15)

**இளம்பூரணர்**

“ஒத்து மாறுபட்டுத் தன் மேல் வந்த வேந்தனொடு தன் தொல்குலத்து மகட்கொடை அஞ்சிய மகட்பாற்காஞ்சி” என்று இளம்பூரணர் இந்நூற்பாவிற்குப் பொருளுரைக்கிறார். மேலும்,

“நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்

கடியக் கூறும் வேந்தே .....” (புறம். 349: 1-2)

என்ற புறநானூற்று பாடலையும் மகட்பாற் காஞ்சிக்கு உதாரணமாகக் கூறுகிறார் (இளம்பூரணர், 1969: 131-132).

**நச்சினார்க்கினியர்**

மகட்பாற் காஞ்சிக்கு நச்சினார்க்கினியர் கொடுக்கும் விளக்கம் விரிவானதாக உள்ளது. அவர், “பெண்கோளொழுக்கத்தினொத்து மறுத்தல் பற்றிப் பகைவனாய் வலிந்துகோடற்கு எடுத்துவந்த, அரசனொடு முதுகுடித் தலைவராகிய வாணிகரும்

வேளாளருந் தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற்காஞ்சியானும்” (நச்சினார்க்கினியர், 2007: 272) என்னும் இடத்தில், இளம்பூரணர் தன் விளக்கத்தில் தொல் குலத்து என்று மட்டும் குறிப்பிட்ட நிலையில், நச்சினார்க்கினியர் முதுகுடித் தலைவர் என்று குறிப்பிடுகிறார். மேலும் முதுகுடித் தலைவர் என்போர் வாணிகர், வேளாளர் என்று அதற்கு விளக்கமும் தருகிறார்.

வேத்தியலாவது உயிர்போற்றாது வாழ்தலின், அவரது நிலையின்மை நோக்கி, அவரோடொத்து மகளிரைப் படுத்தற் கஞ்சி மறுப்பாராதலின் 'அஞ்சிய' வென்றும், 'மேல்வந்த' வென்றுங் கூறினார். அம்முதுகுடிமகள் தாம் பொருது படக் கருதலின் உயிரது நிலையாமை உணர்ந்த காஞ்சியாயிற்று. பாலென்றதனான் முதுகுடிகளேயன்றி 'அனைநிலைவகை' யெனப்பட்டார்கண்ணும் இத்துறை நிகழ்தல் கொள்க. (நச்சினார்க்கினியர், 2007: 272) என்ற பகுதியில் முதுகுடித் தலைவர்கள் ஏன் மகட்கொடை மறுத்தனர் என்ற காரணத்தை நச்சினார்க்கினியர் விளக்குகிறார்.

அதன்படி அரசர்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாமல் போர் செய்யும் காரணத்தினால் அவர்களது நிலையாமை எண்ணி மகட்கொடை மறுத்தனர் என்பது அவரது கூற்று. மேலும் மகட்கொடை மறுத்தல் என்பது முதுகுடித் தலைவர்களுக்கு மட்டுமே உரியதன்றி, 'அனைநிலைவகை' என்று கூறி, வாகைத் திணையுள் குறிக்கப்பெறும் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், தவம் செய்வோர், பொருநர் போன்ற பிறர்க்கும் இத்துறை உரியது என்று கூறுகிறார்.

இளம்பூரணர் கூறியதைப் போன்று புறம். 349 ஆம் பாடலை உதாரணமாகக் கூறி,

“களிறணைப்பக் கலங்கின காஅ

தேரோடத் துகள்கெழுமின தெருவு” (புறம். 349: 1-2)

என்ற புறநானூற்று பாடலையும் எடுத்துக்காட்டு கூறுகிறார். மேலும் அப்பாடலின்கீழ், “இதனுள் 'நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென' என்றலின், அரசர்க்கு மகட்கொடை குரியரல்லாத 'அனைநிலைவகை' யோர்பாற்பட்டது” (நச்சினார்க்கினியர், 2007: 273) என்று முன்னர்க் கூறிய 'அனை நிலை வகை' என்பதற்கு உதாரணமாக இப்பாடலைக் கூறுகிறார்.

**பொருண்மை**

மகட்கொடை வேண்டி நின்ற அரசர்களுக்கு மகட்கொடை தராமல் முதுகுடித் தலைவர்கள் எதிர்த்து நிற்பது என்று மகட்பாற் காஞ்சிக்குப் பொருள் காண்கிறோம். ஆனால் இதுவரை காஞ்சித் திணை குறித்துக் கண்ட அதன் திணை வைப்புமுறை, பொருண்மை, அதன் துறைகள் ஆகியன அனைத்தும் நிலையாமையை உணர்த்தும் பொருட்டு, நிலையாமைப் பொருளினதாக அமைத்துள்ளார் தொல்காப்பியர். அவ்வாறு நோக்கும்போது மகட்பாற் காஞ்சியானது போர் பற்றிய செய்திகளை விளக்குகிறதா அல்லது நிலையாமை பற்றி விளக்குகிறதா என்ற வினா இயல்பாக எழுகிறது.

“இருபது துறைகளில் வஞ்சினக் காஞ்சி, மகட்பாற் காஞ்சி ஆகிய இரு துறைகளைத் தவிர ஏனைய பதினெட்டும் இறப்பு குறித்தனவே” (பாலசுப்பிரமணியன், 2018: 54) எனக் கு.வெ. பாலசுப்பிரமணியன் மகட்பாற் காஞ்சியைப் போர்ச் செய்திகளைக் கூறும் துறை எனத் துணிந்து கூறுகிறார்.

“குடித்தொன்மையில் ஒவ்வாநிலையில் ஒத்தானாகக் கருதி மகள் கொள்ளப் படையொடு வந்த மன்னனொடு தொல்குடி மகளைப்படுத்தலஞ்சி அதை விலக்க அவள் தன்னையர் வந்தவனொடு தம்முயிரைப் பொருட்படுத்தாது பெரும் மகட்பாற்காஞ்சியும்” (வெள்ளைவாரணன், 1983: 252) என்று ச. சோமசுந்தரப் பாரதியார் மகட்பாற்காஞ்சியின் போர்ச்சூழலை விளக்குகிறார்.

“திருமூலர் உயிரின் தன்மையாகிய உணர்வு நிலையாமையைக் குறிப்பிட்டுள்ளார். வஞ்சினக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, தலைப்பெயல் நிலை என்னும் மூன்று துறைகளும் இதனைக் குறிப்பால் உணர்த்துவனவாம்” (வெள்ளைவாரணன், 1983: 252) என்ற பா. சிவனேசனின் கருத்தைப் பார்க்கும்போது அவர் மகட்பாற் காஞ்சியை நிலையாமைப் பொருளாக எடுத்துரைக்கிறார்.

போர்க்களத்தில் உயிருக்கு அஞ்சாது போரிடுவதால் அவர்களின் வாழ்க்கை நிலை எண்ணி, அவர்கள் விரும்பிக் கேட்ட தத்தம் மகள்களை முதுகுடித் தலைவர்கள் தர மறுத்தனர். என்ற நச்சினார்க்கினியர் கருத்தைப் பார்க்கும்போது அவர் போரின் காரணமாக ஏற்படும் நிலையாமையை விளக்குகிறார் என்பது தெளிவாகிறது (நச்சினார்க்கினியர், 2007: 272).

காஞ்சித்திணையின் முதல் பத்துத் துறைகள் போரியல் இறப்பு குறித்தன என்றும் இரண்டாம் பத்துத் துறைகள் உலகியல் இறப்பு குறித்தன என்றும் கூறுகிறார் கு.வெ.பாலசுப்பிரமணியன் (பாலசுப்பிரமணியன், 2018: 55). அவரது கருத்தைக் காணும்போது மகட்பாற் காஞ்சியானது முதல் பத்துத் துறைகளுள் இடம் பெற்றுள்ளது. அதன்படி மகட்பாற் காஞ்சியானது போரின் காரணமாக ஏற்படும் இறப்பைப் பேசுகிறது.

### முடிவுரை

இதுவரை கண்டதில் நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கு.வெ பாலசுப்பிரமணியன், ச.சோமசுந்தரப் பாரதியார் ஆகியோர் கருத்துக்களை அடியொற்றிப் பார்க்கும்போது மகட்பாற் காஞ்சியானது போர்ச் செய்திகளைக் கூறி அதனூடே நிலையாமையை விளக்குகிறது என்றும், அந்த நிலையாமைப் பொருளின் காரணமாகக் காஞ்சித் திணையுள் அமைந்துள்ளது என்றும், அதிலும் போர் நிலையாமையைக் கூறுவதன் காரணமாக முதல் பத்துத் துறைகளுள் உள்ளது என்றும் மகட்பாற் காஞ்சியின் பொருண்மையை உய்த்துணரலாம்.

### தொகுப்புரை

காஞ்சித் திணையின் பொருண்மையும் அதன் திணை வைப்பு முறை மற்றும் துறைகள் குறித்தும் விளக்கப்பெற்றுள்ளது. நிலையாமையை அடிப்படையாகக் கொண்டு பண்டைய உரையாசிரியர்கள் முதல் தற்கால ஆய்வாளர்கள் வரை கூறும் கருத்துகளைப் பகுத்தாய்ந்து மகட்பாற் காஞ்சித் துறையின் பொருண்மை நிறுவப்பெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாக காஞ்சித் திணை மற்றும் அதன் துறையான மகட்பாற் காஞ்சி ஆகியவற்றைப் பற்றி இவ்வாய்வின் வழி விரிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

### துணை நூற்பட்டியல்

1. சங்க இலக்கியத்தில் புறப்பொருள், பாலசுப்பிரமணியன், கு.வெ., 2018, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

2. தமிழிலக்கணச் செல்வம், கந்தசாமி, சோ.ந., 2016, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

3. தமிழ் இலக்கிய வரலாறு (தொல்காப்பியம்), வெள்ளைவாரணன், க., 2017, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

4. திணைக் கோட்பாடு, சீனிச்சாமி, துரை., 2016, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

5. தொல்காப்பியம்: புறத்திணையியல் - உரைவளம், வெள்ளைவாரணன், க. (தொ.ஆ.), 1983, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

6. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் (உ.ஆ.), 1969, திருநெல்வேலித் தென்னிந்தியச் சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

7. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (பாகம் - ஒன்று), நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கணேசையர் (ப.ஆ.), 2007, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

8. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், சிவநேசன், பா., 2007, சீதை பதிப்பகம், சென்னை.

# சிறுதெய்வ வழிபாட்டில் கொம்புகாரன் தெய்வம்



முனைவர் **கி. நீலகண்டன்**
உதவிப் பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்,
முதுகலை தமிழாய்வுத்துறை,
காதிர் முகைதீன் கல்லூரி, தஞ்சாவூர்.

## ABSTRACT

Deity worship has its roots in Paganism and Land worship, primarily practiced by the Hunting Society and Agrarian Community respectively. At present, Deity worship can be classified as Great Deity Worship and Minor Deity worship. The Minor Deity worship is Structured with social life practices which makes it unique and in turn attracts huge followers which is a vindicate to its growth. In that regard, a Deity named Kombukkaran in Kandiyankadu village of Tanjore District is being worshipped for giving his life for the welfare of the society. Even today, the sacrifices are still remembered and worshipped with harmony. Since, this Deity has a special feature and imbibed the tenets of Minor Deity worship it is taken for further research.

**Keyword** : Minor Deity Worship, Folklore, Fieldwork, Kombukkara Deity, Ancestral culture, Agrarian social welfare, Thanksgiving tradition

### முன்னுரை

இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கண்ட மனிதன் இயற்கை கண்டு அஞ்சி வழிபடத் துவங்கியிருக்கலாம். மனித இனம் கூட்டாக வாழ முற்பட்ட பொழுது தலைமை மற்றும் தனித்திறன் முன்னிறுத்தப்படுவதுடன் இறப்பிற்குப் பிறகு நினைவாக அடையாளப்படுத்தி வழிபட்டு வந்ததை வழிபாட்டு வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன எனலாம். இயற்கை வழிபாடு, நிலம் சார் தலைமை வழிபாடு, நடுக்கள் வழிபாடு, வழிபாடுகள் பிரித்தறிய முற்பட்ட பொழுது சிறுதெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடு எனக் கட்டுக்குள் ஆட்படுத்தியிருக்கலாம். அவ்வகையில்

தெய்வ வழிபாட்டில் சில ஒழுகலாறுகளைப் பின்பற்றிச் சிறுதெய்வம் பெருந்தெய்வம் என அடையாளப்படுத்தியதை வரலாற்றுவழி அறியமுடிகிறது. கட்டமைக்கப்பட்ட சிறுதெய்வம் மற்றும் அவை சார்ந்த கூறுகளில் மனிதச் சமூகத்திற்கு உகந்த குறிப்பாக வாழ்வியல் நடைமுறைகளுக்கு ஏதுவான வழிபாட்டு நெறிமுறைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது சிறு தெய்வ வழிபாடு என்று கூறினால் அது மிகையாகாது. வழிபாட்டு நெறிமுறைகள் கட்டாயப்படுத்தப்படாமல் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் தளர்வுகளைக் கொண்டிருப்பதால் சிறுதெய்வ வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது எனலாம். அவ்வகையில் தனித்துவம் கொண்ட சிறுதெய்வ வழிபாட்டில் மதுக்கூர் ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள “கொம்புக்காரன்” தெய்வ வழிபாடு பொருந்தி வருவதை இக்கட்டுரை சுருக்கமாக விளக்க முற்படுகிறது.

**சிறுதெய்வ வழிபாடு**

சிறுதெய்வ வழிபாடு என்பது பெரும்பான்மையாக நாட்டுப்புறத்தார் எனப்படும் கிராமியச் சூழலில் வாழ்வியல் காணும் சமூகத்தினர் வழிபடும் முறை எனலாம். எளிமையான சூழலில் வழிபடப்படும் சிறுதெய்வ வழிபாட்டில் “வீட்டுத் தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு”[1] எனப் பலவகைக் காணப்படுவதாகச் சு.சக்திவேல் குறிப்பிடுகிறார்.

சிறுதெய்வம், பெருந்தெய்வம் எனப் பாகுபடுத்தி இரண்டு தெய்வ வழிபாடுகளுக்கு இடையில் காணலாகும் நெறிமுறைகளை ஒப்புநோக்கும் பொழுது பெருந்தெய்வ வழிபாட்டில் கட்டாயப்படுத்தப்படுவதும், சிறு தெய்வ வழிபாட்டில் அவற்றிலிருந்து தளர்வுகள் வழங்கப்படுவதும் ஒப்புமை காரணியாக இருப்பதை அறிய முடிகிறது. அனுதின உழைப்பு, போதிய நாகரீக வசதி இல்லாமை என வாழ்வியல் காணும் கிராமியச் சூழல் மற்றும் பொருளாதாரச் சூழலுக்கு ஏற்றவாறு சிறு தெய்வ வழிபாட்டு கூறுகள் வடிவமைக்கப்பட்டிருக்கலாம் என்பதுடன் அதனால் விரிவான வழிபாடாகச் சிறுதெய்வ வழிபாடு இன்றைய காலகட்டத்திலும், வளர்நிலை கண்டிருக்கிறது எனலாம். தனிமனிதன் மற்றும் அவன் சார்ந்த சமூகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் மரபுரீதியாகப் பின்பற்றப்பட்டு அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது எனலாம்.

சிறுதெய்வ வழிபாட்டு முறையில் “பெருந்தெய்வம் போன்று பொதுவான இலக்கணங்களோ வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. அவை காலம் காலமாக முன்னோர்கள் வழிகாட்டுதலின்படி சடங்கு முறைகளை அடிப்படையாக வைத்துப் பின்பற்றப்படுகின்றன. இந்தத் தெய்வ வழிபாடானது நாட்டார் மக்களின்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

நம்பிக்கையின் அடிப்படையிலும் அவர்கள் முன்னோர்கள் கற்றுத்தந்த நெறிமுறைப்படியும் வழிபடப்பட்டு வருகிறது"[2] உலகின் தொன்மையான வழிபாடாக இயற்கை வழிபாடும் அதற்கு அடுத்ததாகச் சிறுதெய்வ வழிபாடும் இருந்து வந்திருப்பதை நாட்டுப்புற இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. சிறுதெய்வங்கள் மனிதர்களின் அகால மரணத்திலிருந்து தோன்றுதல் பாதுகாப்பை முன்னிறுத்தி நன்றிக்கடன் அடிப்படையில் விரிவடைவதுடன் வளர்நிலை கண்டதையும் வரலாற்ற வழி அறியமுடியும். சிறுதெய்வ வழிபாட்டில் ஆய்வுச்சுருக்கம் கருதிக் கொம்புக்காரன் தெய்வம் பற்றி இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

**அறிமுக நோக்கில் கொம்புக்காரன்**

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் ஒன்றியத்தில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்து உள்ளது கண்டியங்காடு இவ்வூரில் கள்ளர் இனத்தவர் அதிகப்படியாக வாழ்ந்து வருகின்றனர். கள்ளர் இனத்தில் ஒரு பட்டமான கண்டியர் இனத்தவர் அதிகம் வாழ்வதால் கண்டியன்காடு என்ற பெயர் வந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றனர். கண்டியன்காடு எனும் கிராமத்தில் வணங்கப்படும் கொம்புக்காரன் எனும் தெய்வம் தாழ்த்தப்பட்ட இனமாகக் கருதப்படும் பறையர் இனத்தைச் சார்ந்த தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் ஊர்த்தெய்வமாக வைத்து வணங்கப்படும் கொம்புக்காரன் தெய்வம் நன்றிக்கடன் எனும் அடிப்படையில் வழிபடப்படுவதாக வரலாற்று வழி அறியமுடிகிறது.

**கொம்புக்காரன் வரலாறு**

சிறுதெய்வ வழிபாட்டில் பெரும்பான்மையான தெய்வத்திற்கும் வரலாறு இருப்பது போன்று "கொம்புக்காரன்" எனும் சிறுதெய்வத்திற்கும் வரலாறு உண்டு.கண்டியன்காடு என்ற ஊரில் விவசாய நிலங்களும் அதற்கு ஆணிவேராக விளங்கும் மிகப்பெரியதொரு ஏரி ஒன்றும் உள்ளது. வேளாண்மைத் தொழிலை முதன்மையானதாகவும் அதுவே அவர்களது உயிர்த் தொழிலாகவும் நினைத்து அப்பகுதி மக்கள் போற்றி பாதுகாத்தனர். விவசாய நிலங்களுக்கு நீர்வளச் சான்றாகத் திகழ்ந்த ஏரியைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தினர்.விவசாயம் செய்யும் காலக் கட்டங்களில் குறிப்பாக நாற்று நடும் பொழுதோ பயிர் வளரும் பருவத்திலேயோ ஏரியானது உடைப்பு ஏற்படுவது கிடையாது. ஆனால் கதிர் முற்றி அறுவடை காலம் வரும்பொழுது மட்டும் அந்த ஏரியில் உடைப்பு ஏற்படுவது வழக்கமான ஒன்றாகத் திகழ்ந்தது. இந்த நிகழ்வு காரணமாக மக்கள் மணம் தளர்ந்து நின்றனர். இதற்குத் தீர்வு

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

தேடும் பொழுது சாமியாடி ஒருவர் அதற்கான தீர்வினைக் கூறுகிறார். அதாவது அணை உடைபடும் இடத்தில் ஒரு மனித உயிரைப் பலியிட வேண்டும் என்று சாமியாடி கூறியதாகக் கூறுகின்றனர். அப்பொழுது யாரைப் பலியிடலாம். அதற்கு யார் இசைவு தருவார் என்று ஊர்மக்கள் கூடி உரையாடின பொழுது கொம்புக்காரன் என்ற பறையர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் தன்னைப் பலியிடுமாறு இசைவு தெரிவித்ததாகவும் அவர் பலியிடுவதற்கு முன்பு மக்களிடம் ஒரு வேண்டுகோளாகத் தன்னைப் பலியிட்ட பிறகு தெய்வ நிலையில் வைத்து வழிபட வேண்டும் என்பதாகவும் குறிப்பிடுகின்றனர். இதனை ஏற்றுக்கொண்ட ஊர்மக்கள் ஏரி உடைபடும் இடத்தில் வைத்து அவரை பலி கொடுக்கின்றனர் பலி கொடுக்கப்பட்ட ஆண்டில் இருந்து இன்று வரை ஏரி உடைப்பு ஏற்படவில்லை என்று கூறுகின்றனர். அன்றைய காலகட்ட முதல் இக்காலக் கட்டம் வரை வேளாண்மைத்தொழிலில் ஈடுபடும் அனைத்துச் சமூகத்தினரும் நன்றிக்கடன் என்ற அடிப்படையில் கொம்புக்காரன் எனும் தெய்வத்தை வழிபட்டு வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

சமூகப் பாதுகாப்பிற்காக உயிர்நீத்த நபர்கள் வீரநிலைக் கடவுளர்களாக முன்னிறுத்தப்படுகின்றனர். கொம்புக்காரன் தெய்வம் கையில் ஆயுதம் ஏந்திக் காவல் தெய்வமாகக் காட்சி தராத போதிலும் வீரநிலைக்கடவுளாக ஏற்றுக் கொள்ளலாம். “சிறுதெய்வங்கள் அனைத்தும் வீரவழிபாட்டுத் தெய்வங்கள் எனக் கருதப்படுகின்றன. தன்னுடைய ஊரை ஊரின் கால்நடைகளை, கண்மாய்நீரை, பெண்களை, விளைந்த பயிர்களைக் காக்கின்ற சண்டையில் உயிர்துறந்த ஆண்கள் எல்லாம் வீரவழிபாட்டிற்கு உரியவர்களாவார்”[3] எனத் தொ.பரமசிவன் குறிப்பிடுவதன் வழி கொம்புக்காரன் எனும் தெய்வம் நீர்வளம் பாதுகாக்க உயிர்துறந்த வீரநிலைக்கடவுள் எனலாம்.

சிறுதெய்வ வழிபாட்டில் பலிகொடுத்தல் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்ற நிலையில் ஆடு, மாடு, சேவல் போன்ற விலங்கினங்கள் மற்றும் பறவையினங்கள் பலி கொடுத்தால் சிக்கல் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் மனித இனங்களைப் பலி கொடுத்தலில் சிக்கல்கள் பல இருந்திருக்க வேண்டும். அதாவது சிறு தெய்வ வழிபாட்டில் ஒரு காலக் கட்டத்தில் மனித உயிர்கள் பலி கொடுக்கப்பட்டதை நரபலி என்ற சொல்லாடல் எடுத்துக்காட்டுகிறது எனலாம்.நரபலியின் அடிப்படையில் பல தெய்வங்கள் உருவெடுத்து இக்காலக் கட்டம் வரை வழிபட்டு வருவதைச் சிறு தெய்வ வழிபாட்டு வரலாறு வழி அறியமுடியும். பலி கொடுப்பதற்கு ஒரு நபர் முழு மனதுடன் இசைவு தெரிவிப்பாரா? பலி

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

கொடுப்பதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டாரா? இறப்பிற்குப் பிறகு இறைவன், வழிபாடு என மூளைச்சலவை செய்யப்பட்டதா அதிகார இனம் அடிமை இனத்தைக் கட்டளையிட்டு இசைவுபடுத்தியதா என வினாக்களை எழுப்பி விடைதேட முயன்றால் அவை ஒரு ஆய்விற்கு வழிவகுக்கும். இருப்பினும் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த நபர் பலி கொடுக்கப்பட்டிருக்கிறார் என்பதுடன் நன்றிக் கடனாக வழிபடப்படுகிறார் என்ற நிலையில் மட்டும் கொம்புக்காரன் தெய்வ வழிபாட்டை எடுத்துக் கொள்ளலாம்.

இறைவன் படைத்த மனிதப்படைப்பில் வேற்றுமை இல்லை. இறைவனும் வேற்றுமைப்படுத்திப் பார்ப்பதில்லை எனச் சித்தாந்தம் பேசினாலும் இறைவன் துதிபாடும் உயர்குடி வகுப்பினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை இறைவனுக்கு அருகில் விடாது தூரத்தில் நிறுத்தியதைப் பக்தி இலக்கியங்கள் வழி அறிய முடியும். தேவாரத் திவ்வியப்பிரபந்தம் பாடிய தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த நாயன்மார் மற்றும் ஆழ்வார் சிலர் இறைவன் ஆலயத்திற்குள் நுழைய முடியாமல் கட்டுப்படுத்தியதையும் இறைவனைக் காணும் ஆர்வத்தில் மனம் தவிக்க இறைவனோ நந்தியை விலக்கிக் காட்சி தந்ததையும் பக்தி இலக்கிய வரலாற்று வழி அறியமுடியும். உலக உயிர்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமான சிவபெருமான் வேடர் குலத்தைச் சார்ந்த கண்ணப்பநாயனாரை அப்பனாக எண்ணியதைப் புராணம் எடுத்துக்காட்டுகிறது.அவ்வகையில் பெருந்தெய்வ வழிபாட்டில் காணப்பட்ட இனம் சார் உயர்வு தாழ்வு சிறுதெய்வ வழிபாட்டிலும் காணப்பட்டிருக்கலாம் என எடுத்துக் கொள்ளலாம். ஆவுரித்துத்திண்ணும் புலையராக இருந்தாலும் இறைவன் மீது அன்பு செலுத்தினால் அடியவரே என்று தேவராவச் சிந்தனை இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது அதாவது இறைவனுக்கு அருகில் விடாமல் வழிபாடு சார்ந்த கடினமான உழைப்பிற்காகவும் வெளிப்புறப் பார்வைக்கு மதம் சார் பெருக்கத்தைக் காட்ட அதாவது எண்ணிக்கையை உயர்த்திக் காட்டுவதற்காகவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தை அடியவர்களாக ஏற்றுக் கொண்டனரோ என எண்ணத் தோன்றுகிறது. நாகரீக வளர்ச்சி கண்ட இன்றைய காலகட்டத்தில் கூட ஒரு சில மதங்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தை இணைத்துக் கொண்டு முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பிற்கு அருகில் விடாமல் மதப்பெருக்கத்திற்காக மட்டும் என்ற நிலையில் வைத்துக் கொள்வதைக் காணமுடிகிறது.

சிறுதெய்வ வழிபாட்டில் ஒரு சில கடவுள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும் இருந்து வருவதை நடைமுறை உலகில் கூடக் காணமுடிகிறது.

தெய்வ வழிபாட்டில் வழிபாடு நடைபெறும் ஆலயம் மற்றும் நிகழ்விடப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை அருகில் விடாத உயர் சமூகம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரைக் கடவுளாக வைத்து வழிபடுவது சிந்திக்கத்தக்கது இவ்வாறான வழிபாடு பலியான சமூகத்தினரைச் சாந்தப்படுத்துதலுக்காகவோ அல்லது நன்றிக்கடனுக்காகவோ என வினா எழுப்பி விடை தேட முயன்றால் அவை ஒரு ஆய்விற்கு வழிவகுக்கும் இருப்பினும் மேற்கூறியதுபோல் நன்றிக்கடனுக்காக என எடுத்துக் கொள்ளலாம்.

**வழிபாட்டு நிகழ்வுகள்**

பெருந்தெய்வ வழிபாட்டு நிகழ்வுகள் போல் வரையறுக்கப்பட்ட வழிபாட்டு நிகழ்வுகள் சிறு தெய்வத்திற்கு இல்லை எனலாம். அதன் அடிப்படையில் இப்பகுதி மக்களின் வாழ்வியல் சூழல் மற்றும் பொருளாதாரச் சூழலுக்குத் தகுந்தவாறு கொம்புக்காரன் எனும் தெய்வம் வழிபடப்பட்டு வருகிறது. வருட மாதங்களில் ஆடி மாதத்தை உகந்த மாதமாக எண்ணித் திருவிழா நிகழ்வுகளை நிகழ்த்துகின்றனர். திருவிழா நிகழ்வில் இறைவனுக்குப் படைக்கப்படும் படையல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. வழிபாட்டு தெய்வம் ஆண் தெய்வம் என்பதால் மதுவகை முதன்மையாகப் படைக்கப்படுகிறது. இறைவனுக்குப் படைக்கப்படும் மது வகையில் சாராயம் எனும் மதுபானம் தயாரிக்கப்பட்டுப் படைக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். "திருவிழாவின் இறுதி நிகழ்ச்சியாகச் சிறுதெய்வங்களுக்கு ஊன் (ஆட்டுக்கறி) கலந்த சோறு படைக்கப்படுகிறது."[4] அவ்வகையில் கொம்புக்காரன் எனும் தெய்வத்திற்கு இவ்வூரில் பிறந்த பெண்கள் மற்றும் இவ்வூரிலிருந்து திருமணமாகிச் சென்ற பெண்கள் என நேர்த்திக் கடனாகக் கொணர்ந்த சேவல்களைக் கொண்டு கறி உணவு சமைத்துப் படையலில் படைக்கப்படுகிறது. படையல் மற்றும் பூஜை இரவு நேரத்தில் நடைபெறுகிறது. இவ்வாறு நடைபெறும் வழிபாடுகளில் பெண்கள் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்படுகிறது.

சிறு தெய்வ வழிபாட்டில் ஒரு சில வழிபாடுகள் மற்றும் படையல் அவை சார்ந்த விருந்துகள் எனப் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதை இக்காலகட்ட நடைமுறையில் கூடக் காணமுடிகிறது. இவ்வாறான கட்டுப்பாடு இறைவன் விதித்ததா? அல்லது இரவு வழிபாடு என்பதால் பாதுகாப்புக்கருதியா என வினா எழுப்பி விடை தேட வாய்ப்பிருக்கிறது என்ற போதிலும் இவ்வாறான கட்டுப்பாட்டை ஆதிக்கப்போக்கு மற்றும் சுதந்திரச் செயல்பாட்டிற்காக என எடுத்துக் கொள்ளலாம். கொம்புக்காரன் தெய்வ வழிபாடு பலிகொடுக்கப்பட்டுத் தெய்வமாக உருப்பெற்ற

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

நாளிலிருந்து இக்காலகட்டம் வரை நீர்வளம் பாதுகாக்கப்பட்டு வேளாண்மைத் தொழில் சிறப்புற நடைபெற்று வருவதால் தொடர்ச்சியாக வழிபாடுகளும் அவை சார்ந்த திருவிழாக்களும் நடைபெற்று வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

**நேர்த்திக்கடன்**

சிறுதெய்வ வழிபாட்டு முறையில் பலியிடுதல் என்பது முக்கியத்துவம் வாய்ந்த நேர்த்திக்கடனாக இருந்து வருகிறது எனலாம். இதன் அடிப்படையில் வேண்டுதல் வைத்த பக்தர்கள் ஆடு, சேவல் போன்ற உயிரினங்களைப் பலிகொடுத்து வழிபடுகின்றனர். இவை தவிர மாவிளக்கு போடுதல், முடி காணிக்கை செலுத்துதல் என நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இவ்வூரில் பிறந்த பெண்கள் சேவலைப் பலி கொடுக்காமல் உயிருடன் காணிக்கையாகவும் செலுத்தி வருகின்றனர்.

**முடிவுரை**

இறைவனது தோற்றம் இறைவழிபாடு என ஆய்வுப்பரப்பு பறந்த விரிந்தது என்றால் உட்கூறான சிறுதெய்வ வழிபாடோ சுரங்கம் போன்றது எனலாம். பெருந்தெய்வத்திற்கு இருப்பது போல் வரலாறும் வழிபாட்டு நிகழ்வுகளும் ஓரளவு இருப்பது தனிச்சிறப்பாக எடுத்துக் கொள்ளலாம். அவ்வகையில் மதுக்கூர் ஒன்றியப்பகுதியில் வழிபடப்படும் கொம்புகாரன் எனும் தெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டு கூறுகளுக்கு முற்றிலும் பொருந்தி வருவதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது. தெய்வ வரலாறு, வழிபாட்டு நிகழ்வுகள், விழாக் கொண்டாட்டம், அவற்றில் பலி கொடுத்தல் மற்றும் படையலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் எனக் கொம்புக்காரன் தெய்வவழிபாடு இக்காலக் கட்டம் வரை நடைபெற்று வருவதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது. தெய்வ வழிபாடுகளில் காணலாகும் இனப்பாகுபாடு மற்றும் ஏற்றத்தாழ்வுகள், சமூக அரசியல் மற்றும் பக்தி அரசியல், வழிபாட்டில் பெண்களைப் புறம்தள்ளிப் பார்க்கும் ஆதிக்கப் போக்கு போன்றவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வேளாண் வளம் காக்க வேண்டி உருவெடுத்த கொம்புக்காரன் எனும் தெய்வ வழிபாடு சமூக ஒற்றுமையோடு பின்பற்றப்பட்டுச் சமூகப் பண்பாடு பாதுகாக்கப்பட்டு வருவதை இவ்வாய்வு கட்டுரை வெளிப்படுத்துகிறது எனலாம்.

## அடிக்குறிப்பு

1. சக்திவேல்.சு, 2011., நாட்டுப்புற இயல் ஆய்வு, 11ம் பதிப்பு, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை. ப.225
2. இணையதளம் ta.m.wikipedia.org
3. தொ. பரமசிவன்., 2005, தெய்வங்களும் சமூக மரபுகளும், இரண்டாம்பதிப்பு, நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, ப.146.
4. மேலது, ப.153

## தகவலாளி

| வ. எண் | தகவலாளி பெயர் | ஊர் | வயது | கல்வி | தொழில் | சந்தித்த நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சதாசிவம். தி | கண்டியன்காடு | 75 | 3ம் வகுப்பு | விவசாயம் | 14.06.2022 |
| 2. | சின்னையன். ப | மூத்தாக்குறிச்சி | 60 | 2-ம் வகுப்பு | விவசாயக் கூலி | 16.06.2022 |

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# நிகழ்காலச் சூழலில் நாட்டுப்புற மருத்துவம்



திரு. **து.ஹரிகிருஷ்ணன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை தமிழாய்வுத்துறை,
காதிர் முகைதீன் கல்லூரி,
தஞ்சாவூர்.

**முன்னுரை**

நமது முன்னோர்கள் உடல்நலப் பேணலிலும் மருத்துவத்திலும் தனிக்கவனம் செலுத்திச் சிறப்படைந்ததைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மருத்துவத்தின் மதிப்பளித்த சித்தர்களின் மருத்துவ மொழி இன்றைய நவீன காலகட்ட மருத்துவத் தடுமாற்றத்தில் கைகொடுத்து உதவியதை எளிதில் மறந்துவிட முடியாது அய்யன் வள்ளுவன் நோயைக் குணப்படுத்துவதுடன் நின்றுவிடாமல் நோயிற்கான காரணிகளை அறிந்து அவற்றையும் சரிசெய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளதைக் குறள்வழி அறிய முடியும். மனித உடல் இயக்கம் ஏற்படும் பாதிப்பு சீர்படுத்தும் செயல்முறை போன்றவற்றை உள்ளடக்கிய செயல்பாட்டிற்கு மருத்துவம் எனப் பெயரிட்டுத் தனது அனுபவ அறிவால் சுற்றுப்புறச் சூழலில் கிடைக்கும் பொருட்கள் கொண்டு பாதுகாத்துப் பயனடைந்ததை நாட்டுப்புற மருத்துவம் எனலாம். மனித வாழ்விடப் பகுதிகளான பெரும்பான்மையான நாட்டுப்புறநடப்பியம் சூழலில் நாட்டுப்புற மருத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாதுகாக்கப்பட்டு வருவதை இன்றைய நடைமுறை உலகில்கூடக் காணமுடிகிறது. அவ்வகையில் மதுக்கூர் ஒன்றியப் பகுதிகளில் பின்பற்றப்படும் நாட்டுப்புற மருத்துவம் குறித்து இக்கட்டுரை சுருக்கமாக விளக்க முற்படுகிறது.

**நிகழ்காலச் சூழலில் நாட்டுப்புற மருத்துவம்**

மனித வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்ற நாட்டுப்புற மருத்துவம் காலமாற்றம், மருத்துவத்துறையில் நவீனம் என்ற நிலையில் சற்றுப் பின்னடைவு கண்டிருக்கிறது எனலாம். அதாவது நாகரீகவளர்ச்சி கண்ட நிலையில் குறிப்பாகப் பல மருத்துவச் செயல்பாடுகளுக்கு நவீன மருத்துவத்தையும் ஒருசில மருத்துவச் செயல்பாடுகளுக்கு நாட்டுப்புற மருத்துவத்தையும் நாடி வரும் சூழல் இருப்பதால் பின்னடைவு நிலையை அடைந்திருக்கிறது எனலாம். "நாட்டுப்புற மருத்துவத்தைப் பொதுவாக இயற்கை

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

சார்ந்த நாட்டுப்புற மருத்துவம் (Natural Flok Medicine) என்னும் மந்திரச் சடங்கியல் மருத்துவம் (magicoreligious medicine) எனும் பகுப்பதுண்டு"[1] அவ்வகையில் இயற்கை சார்ந்த நாட்டுப்புற மருத்துவத்தில் ஒரு சில மருத்துவச் செயல்பாடுகள் இன்றைய நவீன மருத்துவக் காலக்கட்டத்தில் நம்பிக்கையுடன் பின்பற்றப்பட்டு வருவதை மதுக்கூர் ஒன்றியப் பகுதியில் காணமுடிகிறது. ஐம்பதுவருட காலகட்டத்திற்கு முன் பல்வேறு நிலைகளில் உறுதுணை புரிந்த நாட்டுப்புற மருத்துவம் நிகழ்காலச் சூழலில் சில நோய்களுக்கு முன்னிலையாக நின்று தீர்வு கண்டிருப்பதை எடுத்துக்காட்டும் விதமாக இக்கட்டுரை விளக்கி நிற்கிறது.

இப்பகுதி மக்கள் நவீன மருத்துவத்தை நாடி சென்ற பொழுதும் ஒருசில உடல்நலப் பாதுகாப்பிற்காக நாட்டுப்புற மருத்துவத்தை நாடி வரும் நிலை பரவலாகக் காணமுடிகிறது.அவற்றுள் ஆய்வுச் சுருக்கம் கருதி ஒருசில நாட்டுப்புற மருத்துவச் செயல்பாடுகள் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

**ஊதி வெளியேற்றுதல்**

நாட்டுப்புற மருத்துவத்தில் ஊதி வெளியேற்றுதல் எனும் மருத்துவம் போற்றத்தகுந்த மருத்துவமாக இருந்து வருகிறது எனலாம்.மருத்துவ வளர்ச்சியில் சாதனை கண்ட இக்காலக் கட்டத்தில் கூட இம்மருத்துவத்திற்கு மதிப்புகள் இருக்கின்றது என்றே கூறலாம். என்ன செய்தோம் என்று வெளியில் கூற முடியாத பருவத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு ஊதி வெளியேற்றுதல் எனும் மருத்துவம் பெரும் வரவேற்பைப் பெற்றது என்று கூறுவதற்கு இடம் இருக்கிறது. ஆய்வாளரான நான் மதுக்கூர் ஒன்றியப் பகுதியில் அமைந்திருக்கும் சிவக்கொல்லையில் பரம்பரை மருத்துவமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் முருகேசன்என்பவர் இல்லத்திற்குக் கள ஆய்வுக்காகச் சென்றிருந்தேன். அப்பொழுது ஒரு குழந்தையின் நிலையையும் அக்குழந்தைக்கு எளிதான முறையில் மருத்துவம் செய்து பாதுகாக்கப்பட்டதையும் காணும் பொழுது வியப்பாக இருந்தது.

சோர்வான நிலையில் உள்ள ஒரு குழந்தையைத் தாய் ஒருவர் அழைத்து வந்திருந்தார்.குழந்தைக்கு என்ன செய்கிறது, ஏன் அழைத்து வந்திருக்கிறீர்கள் என வினாவினேன்.அதற்கு அந்தத் தாய் எனது குழந்தைக்குத் தொடர்ந்து வாந்தியும், வயிற்றுப் போக்கும் போய்க் கொண்டிருக்கிறது என்னவென்று தெரியவில்லை எனக் கூறினார்.நானும் மருத்துவரிடம் சென்று காண்பித்தீர்களா எனக் கேட்டேன். அதற்கு இரண்டு மருத்துவரிடம் காண்பித்தேன் உடல் சார்ந்த அனைத்துப் பரிசோதனைகளும் செய்துவிட்டேன் பல ஆயிரங்கள் செலவானதுதான் மிச்சம்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

ஒன்றும் சரியாகவில்லை என்றும் விபரம் அறிந்தவர்கள் கூறியது கேட்டு இங்கு வந்திருப்பதாகவும் கூறினார். சற்று நேரத்தில் மருத்துவம் பார்க்கக்கூடிய முருகேசன்என்பவர் வந்து குழந்தையின் நாடி பிடித்து அறிந்து கொண்டார்.பிறகு ஊதுதல் என அழைக்கப்படும் உறுஞ்சுவதற்காக வைத்திருக்கும் குழலைச் சுத்தம் செய்து குழந்தையின் வாயில் வைத்து உறிஞ்சி துப்பினார்.அப்பொழுது நெகிழ்வுற்ற தன்மையில் உள்ள பிஸ்கட் வந்து விழுந்தது. கிராமப் பகுதியில் தரமற்ற சில பொருட்கள் சில கடைகளில் விற்கப்படுவதுண்டு அவ்வாறு விற்பனை செய்த இந்தப் பிஸ்கட்டைக் குழந்தையின் பெற்றோரே வாங்கிக் கொடுத்திருக்கின்றனர். குழந்தையும் பிஸ்கட்டை உண்டிருக்கிறது. உண்ட பிஸ்கட் அவற்றிலிருக்கும் பசைத்தன்மை மிகுதியால் உணவுக் குழாயில் அதாவது இரைப்பையிற்குச் செல்லும் முன்பே ஒட்டிக் கொண்டு விட்டது இதை மருத்துவம் பார்த்த மருத்துவர்களும் அவர்கள் செய்த பரிசோதனைகளும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவர்கள் மருத்துவம் பொய்த்துப் போனது இந்நிலையில் இங்கு அழைத்து வந்து குழந்தை பாதுகாக்கப்படுகிறது. இவ்விடத்தில் எந்த மருத்துவத்தை நிறையாகப் பார்ப்பது எந்த மருத்துவத்தைக் குறையாகப் பார்ப்பது என வினா எழுப்பி விடை தேட முயன்றால் அவை ஒரு ஆய்விற்கு வழி வகுக்கும் எனலாம். இருப்பினும் சூழலுக்குத் தகுந்த நாட்டுப்புற மருத்துவம் வெற்றி கண்டிருக்கிறது என எடுத்துக் கொள்ளலாம்.

குழந்தையின் கையைப் பிடித்து நாடிப்பார்த்த நாட்டுப்புற மருத்துவர் நோயிற்கான காரணத்தை முதலில் அறிந்து கொள்கிறார்.பிறகு குழல் மூலம் உறிஞ்சி எடுக்கப்பட்டுக் குணப்படுத்தப்படுகிறது. மற்றொரு குழந்தை சாக்லைட் பேப்பரையும் சேர்த்து விழுங்கியிருக்கிறது அதையும் உறிஞ்சி வெளியில் துப்பும்பொழுது அறிய முடிந்தது.இவை தவிர மதுபோதையில் மாமிச எலும்புகளை விழுங்கிய ஆண் மகன்களும் வந்திருந்து முழுங்கிய எலும்புகளை ஊதி வெளியில் எடுத்துச் சென்றதையும் காண முடிந்தது. இவ்வாறான மருத்துவமுறை குழந்தைப் பருவத்தினருக்கு மிகவும் பொருந்தி வரக்கூடிய முறையாக இருந்து வருகிறது என்றாலும் எல்லா நிலைகளிலும் இவ்வாறான நாட்டுப்புற மருத்துவத்தால் நிவர்த்தி செய்து விட முடியாது என்றே கூறலாம்.

**உரம் விழுதல் / சீரடித்தல்**

நாட்டுப்புற மருத்துவத்தில் உரம் விழுதல், சீரடித்தல் போன்ற குழந்தைசார் மருத்துவ முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இன்றைய நவீன காலகட்ட மருத்துவ வளர்ச்சியிலும் இவை போன்ற நோய் தாக்கத்திற்கு

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

மருத்துவமனை செல்லாது சிலர் நாட்டுப்புற மருத்துவத்தை நாடி வருவதைக் காண முடிகிறது. தமிழக நாட்டுப்புறப் பகுதிகளில் உரம் மற்றும் சீரடித்தல் என்ற மருத்துவமுறை ஒருசில மாற்றங்களுடன் பரவலாகப் பார்க்கப்படுவதை நடைமுறை உலகில் கூடக் காண முடிகிறது. சீரடித்தல் என்ற நோய்த்தொற்று கருச்சிதைவுற்ற பெண்களின் அருகில் புழக்கம் காணப்படுவதால் ஏற்படுவதாக நாட்டுப்புறப் பகுதிகளில் குறிப்பிடுகின்றார். சமூக நடமாற்றத்தில் குழந்தை மற்றும் தொற்றுள்ள பெண்கள் புழக்கம் தவிர்க்க முடியாத சூழலில் இந்நோய் ஏற்படுவதாகவும் இவற்றிலிருந்து முன்னெச்சரிக்கையாகப் பாதுகாத்துக் கொள்வதற்கு மூலிகை மற்றும் மந்திரப் பயன்பாடு கொண்ட கயிறு குழந்தையின் கழுத்துப் பகுதிகளில் கட்டி விடுவதைப் பெரும்பான்மையான பகுதிகளில் காணமுடிகிறது. மேலும் அதிகமான தாக்கம் கொண்டு குழந்தைக்கு வாந்தி பேதி ஏற்பட்டுக் குழந்தை சோர்வடையும் சூழலில் நாட்டுப்புற மருத்துவமும் பார்க்கப்படுகிறது. அவ்வகையில் மதுரைக்கு அருகில் அச்சம்பத்து, விரட்டிபத்து எனும் கிராமத்தில் ஒருசில குடும்பத்தினர் மூலிகை மருந்தைத் தலையில் தடவிச் சில நாட்கள் வரை இருக்கச் செய்து குணப்படுத்துவதை இன்றைய காலக்கட்டத்தில் கூடக் காணமுடிகிறது. இவை போல் ஒவ்வொரு பகுதிகளிலும் வெவ்வேறு விதமான மருத்துவ முறைகள் பார்க்கப்படுகிறது.

உரம் விழுதல் என்ற குழந்தைகளுக்கான நோய்பாதிப்பும் அவற்றிற்கான மருத்துவமுறையும் இக்காலக் கட்டத்தில் ஒரு சில பகுதிகளில் பார்க்கப்படுகிறது. கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன் இம்மருத்துவமுறை பரவலாகக் காணப்பட்டதை நாட்டுப்புற மருத்துவ வரலாறு வழி அறிய முடியும். உரம் விழுதல் என்பது குழந்தை தோள் சார்ந்த எரிச்சலை ஏற்படுத்தும் நோய் அதாவது ஒவ்வாமையால் (Alargie) ஏற்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான நோயிற்கு மருத்துவரை நாடி மருத்துவம் செய்வதைவிட நாட்டுப்புற மருத்துவத்தைப் பெரும்பான்மையான நபர்கள்நாடுகின்றனர் எனலாம்.உரம் விழுதல் எனும் ஒவ்வாமை நோயிற்கு மதுக்கூர் ஒன்றியப் பகுதிகளில் பெரியோர்களின் வழிகாட்டுதலின்படி மருத்துவம் பார்க்கப்படுகிறது. உரம் விழுந்த குழந்தையை வேட்டியில் கிடத்தி இருவர் பிடித்துக் கொண்டு கீழ்நோக்கி மேல்நோக்கி உயர்த்தி குழந்தையைக் கவனமாக உருளச் செய்து உரத்தை எடுக்கின்றனர். குழந்தையும் அழுகையை நிறுத்தி அமைதியாகிறது.

குழந்தை மருத்துவத்தில் சிறப்பிடம் பெற்ற மருத்துவ முறையாகப் பார்க்கப்பட்ட சீர் அடித்தலுக்கான மருத்துவமுறை குறித்துக் கி.ராஜநாராயணன் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது.

கிராமத்தில் வசிக்கும் அனுபவம் வாய்ந்த முதியோர்கள் நம்பிக்கை சார்ந்த மருத்துவத்தை வழிவழியாகச் செய்து அவற்றில் பெரும்பகுதி வெற்றியும் கண்டு விடுவர். 'பச்சிளங் குழந்தைகளுக்கு வேத்து வாடை தாங்காது. இந்தத் தாக்குதலினால் அந்தக் குழந்கொணங்கிப் போகும்; வாடிப்போகும் இதை "சீர்" தாக்கியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கல்யாணம் முதலிய கூட்ட நெரிசல்களில் தேங்கி நிற்கும் சுவாசக் காற்றின் நெடிச்சூட்டையும் இந்தக் குழந்தைகளால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை இதைக் கல்யாணச்சீர் தைத்திருக்கிறது என்கிறார்கள்.

கருச்சிதைவான வேற்றுப் பெண்ணின் வாடையையும் இந்தக் குழந்தைகள் தாங்கிக் கொள்ளாது பூவை விட மெல்லிசாக இக்குழந்தைகளை வைத்துப் போன வேண்டியிருக்கிறது. இப்படி வாடிய குழந்தையை எடுத்துக் கொண்டு இந்தத் தாய்மார்கள் ஆஸ்பத்திரிக்கோ, குழந்தை நிபுணடாக்டரிடமோ கொண்டு போவதில்லை. நேராக வண்ணார் குடியிருப்புக்குப் போகிறார்கள். அங்கே நிற்கும் கழுதையின் முன்னால் கொண்டு போய்க் குழந்தையைக் காண்பிக்கிறார்கள். டாக்டர் கழுதைக்கு எப்படியோ இந்த விஷயம் தெரியும் போலிருக்கிறது. அது நீட்டப்பட்ட குழந்தையின் முகத்தை முகந்து பார்க்கிறது. கழுதை அப்படி முகர்ந்து பார்க்கிற போது அதன் சுவாசம் குழந்தையின் முகத்தில் படுகிறது. அதுதான் அந்தக் குழந்தைக்கான மருந்து. இப்படி இரண்டு நாள் விடியற்காலைப் பொழுதில் கொண்டு வந்து காட்டினால் சரியாகிவிடுகிறது'[2].

நாட்டுப்புற மருத்துவத்தில் நோய்களைக் குணப்படுத்தும் பெரும்பான்மையான மருத்துவப் பொருட்களை எளிமையாகப் பெற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்கிக் கொள்கிறான். 'இயற்கை மருத்துவமானது சமூகத்தின் புற எதார்த்தங்களான இயற்கை, சுற்றுச்சூழல், தட்பவெப்பம், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றுடனான சமூக அனுபவங்கள் உறவுகளின் அடிப்படையில் அமைகின்றது. இது இயற்கைச் சூழலில் கிடைக்கும் பல்வேறு வகையான தாவர, விலங்கு, கனிம, கரிமப் பொருட்களாலான உணவுப் பயன்பாட்டை மையமாகக் கொண்டது'[3] எனத் தமிழ்ச் சிந்தனை மரபு நாட்டுப்புறவியல் ஆய்வு குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

இவ்வாறான மருத்துவச் செயல்பாடுகளுக்கு அக்காலகட்டக் கிராமியச் சூழலில் அதற்கான வாய்ப்புகள் இருந்தது. ஆனால் இக்காலகட்டச் சூழலில் இவை

போன்ற வாய்ப்புகள் இருக்கின்றதா? அவ்வாறு இருந்தாலும் இன்றைய சமூகம் இவை போன்ற நாட்டுப்புற மருத்துவச் செயல்பாட்டைச் செய்வதற்கு முன்வருவார்களா? என வினா எழுப்பி விடை தேட முயன்றால் அவை ஒரு ஆய்விற்கு வழி வகுக்கும். இருப்பினும் பொருளாதார வளர்ச்சி மற்றும் இவை போன்ற மருத்துவ முறையில் நம்பிக்கை இல்லாத பலர் நவீன மருத்துவத்தை நாடிச் செல்வதும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நாட்டுப்புற மருத்துவத்தில் நம்பிக்கை கொண்ட சிலர் மேற்கண்ட நாட்டுப்புற மருத்துவத்தை நாடிச் செல்வதும் இயல்புநிலை என எடுத்துக் கொள்ளலாம்.

மனிதனுக்கு ஏற்படும் நோய்த்தாக்கம் மற்றும் மருத்துவச் செயல்பாட்டிற்கு மாவட்டம் சார்ந்து பெயர்கள் வைத்து அழைப்பதைக் காணமுடிகிறது. 'இன்னொரு குழந்தை நோய்க்கு "உரம்" என்று பெயர் "குழந்தைக்கு உரம் விழுந்து விட்டது" என்று சொல்கிறார்கள். திடீரென்று குழந்தை அழ ஆரம்பிக்கும் (பசியினால் அல்ல) ஏதோ அடி வாங்கிய குழந்தையைப் போல "வீல்வீல்" என்று கத்திக் கொண்டேயிருக்கும். ஒன்றும் செய்யத் தோன்றாது. கொஞ்ச நேரத்துக்குள் குழந்தையைப் பெற்றவரும் அதைக்கண்டு அழுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது.

பாட்டி வருகிறாள். குழந்தையின் காதைத் தடவிப் பார்க்கிறாள் "பிள்ளைக்கு ஒறம் விழுந்திருக்குபிள்ளையோட மாமன் வேட்டி ஒன்றைக் கொண்டு வாங்க" என்று செல்லி வேட்டியின் ஒரு பக்கத்தின் இரண்டு நுனிகளையும் ஒருத்தர் இரண்டு கைகளாலும் பிடித்துக் கொள்ள தூளி போன்றிருக்கும் "தூளி"யின் ஒரு கோடியை பாட்டி சொல்கிறபடி ஒருத்தர் தாழ்த்துகிறார். தாழ்த்திய பக்கம் குழந்தை பள்ளத்தில் உருளுவது போல் வேகமாக உருளுகிறது. உடனே கோடியை மேலே உயர்த்துகிறார். அவர் குழந்தை மறுபக்கமாக உருளுகிறது. இப்படி இரண்டு மூணு தரம் குழந்தை தனது இடது பக்கம் வலம் பக்கமாக மாறி மாறி வேகமாய் உருண்டதும், அழுகை நின்று கப்சிப் என்றாகிவிடுகிறது. கொஞ்ச நேரத்தில் குழந்தை நிம்மதியாக தூங்குவதை பார்த்து தாயார் புன்முறுவல் செய்கிறாள். உறம் போன மூலை தெரியவில்லை. இப்படி ஒரு அதிர்ச்சி வைத்தியம்'[4] இந்த நம்பிக்கை வாழ்க்கைக்கு உதவியாக இருக்கிறது. மேற்கண்ட நிகழ்வில் எந்த அளவிற்கு மருத்துவ உண்மை இருக்கின்றது என அறிந்து கொள்வதற்கு அப்பகுதிவாழ் மக்கள் ஒருநாளும் முற்பட்டதில்லை. ஆனால் அச்செயலைச் செய்தால் குழந்தை நலம் பெறும் என்பது நம்பிக்கை என்ற அடிப்படையில் பின்பற்றியிருக்கலாம்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

### முடிவுரை

சமூகப் பண்பாட்டோடு இணைவு பெற்ற நாட்டுப்புற மருத்துவம் மனித வாழ்வியலோடு ஒன்றிணைந்தது எனலாம். இன்றைய காலகட்டத்தில் நகர்ப்புறச் சூழலில் ஒருசில மருத்துவச் செயல்பாடுகளும், கிராமப்புறச் சூழலில் கூடுதலான மருத்துவச் செயல்பாடுகளும் நிகழ்ந்தேறி வருவதைக் காணமுடிகிறது. நாட்டுப்புற மருத்துவச் செயல்பாடு நம்பிக்கையின் அடிப்படையில், பொருளாதாரச் சூழலின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது என்பதை எடுத்துக் காட்டியுள்ளது. நவீன மருத்துவத்தில் தீர்வு காண முடியாத ஒருசில நோய்த்தாக்கங்கள், நாட்டுப்புற மருத்துவத்தின் வழி எளிதில் தீர்வு கண்டு விடுவதையும், ஏழை எளியோருக்குப் பொருளாதாரச் சிக்கனம் ஏற்படுவதையும் எடுத்துக்காட்டியுள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. பிலவேந்திரன்.ச., தமிழ்ச்சிந்தனை மரபு நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ப.49.
2. ராஜநாராயணன்.கி., 'கரிசல்காட்டு கடுதாசி' ப.32
3. பிலவேந்திரன்.ச., 'தமிழ்ச்சிந்தனை மரபு நாட்டுப்புறவியல் ஆய்வுகள்', ப.49.
4. ராஜநாராயணன்.கி., 'கரிசல்காட்டு கடுதாசி' ப.33

### தகவலாளி

| வ. எண் | தகவலாளி பெயர் | ஊர் | வயது | கல்வி | தொழில் | சந்தித்த நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | முருகேசன்.சி | சிவக்கொல்லை | 45 | 12ம் வகுப்பு | வைத்தியர் | 10.12.2022 |
| 2. | பத்மாவதி | விக்ரமம் | 55 | 3-ம் வகுப்பு | சிறுவைத்தியர் | 25.12.2022 |

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712